# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# ANNUAL REPORT
# 2021

සීමාසහිත ස්වාධීන රූපවාහිනී මාධ්‍ය ජාලය.
வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவை.
INDEPENDENT TELEVISION NETWORK LTD.

# ஆண்டறிக்கை
# 2021

வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவை.

## நோக்கு

இலத்திரனியல் ஊடக துறையின் முன்னோடியாக சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பை மாற்றியமைத்தல்

## நோக்குப் பணி

இலங்கையின் பெறுமதிமிக்க அடையாளங்கள் மற்றும் கலாசாரத்தை பாதுகாத்து தரமானதும் கவர்ச்சிகரமானதுமான மனிதநேயமிக்க நிகழ்ச்சிகளை சமர்ப்பித்தல்

## குறிக்கோள்

மிகச்சிறந்த கல்விசார் மற்றும் தகவல்களை வகுக்கும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை வழங்குதல்

நிகழ்ச்சிகளைத் தயாரித்தல் மற்றும் ஒளிபரப்புக்காக அதிநவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துதல்

நிறுவனத்தின் நிதி உறுதிப்பாட்டினை பேணிச்செல்லல்

ஆக்கத்திறன், திறன்கள் மற்றும் தகைமைகளைக் கொண்ட மனிதவள அபிவிருத்தி

உள்நாட்டு நிகழ்ச்சிகளைப் பிரச்சாரம் செய்தல் மற்றும் பரிமாற்றம் செய்தல் என்பவற்றின் மூலம் இலங்கையினை சர்வதேச பார்வையாளர்களிடம் கெண்டுசெல்லல்

## நல்லொழுக்க விழுமியங்கள்

**ஆக்கத்திறன் -**

புத்தாக்கம், புதிய கருத்துக்கள் என்பவற்றின் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயற்படுதல் மற்றும் இயல்பான ஆற்றல்களைக் கொண்டவர்களுக்கு உதவியளித்தல்

**ஊக்கத்துடன்கூடிய -**

நேர்மை மற்றும் தெளிவான குறிக்கோள் என்பவற்றுடன்
மாற்றத்திற்கு இசைவாக்கம் அடையும் நோக்கு

**ஆதரவு -**

நிறுவனத்தில் பணியாற்றும் காலப்பகுதியில் தனிப்பட்ட ரீதியிலும் தொழில்சார் ரீதியிலும் வளர்ச்சியடைவதற்கான வாய்ப்பினை சுயாதீன தொலைக்காட்சியின் பணியாட்தொகுதியினருக்குப் பெற்றுக்கொடுத்தல்

**பொறுப்புடன்கூடிய -**

இலங்கைச் சமுதாயத்தின் பொருட்டு உயர் தரத்துடன்கூடியதும்
செலவுக்கேற்றதுமான சேவையினைப் பெற்றுக்கொடுத்தல்

# நிறுவனம்சார் தகவல்கள்

| | |
|---|---|
| **பெயர்** | வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு. |
| **சட்டரீதியான தன்மை** | தனியார் துறைக் கம்பனியாக 1979 ஏப்ரல் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தொழில் முயற்சிகளை சுவீகரித்துக்கொள்ளும் சட்டத்தின் கீழ் 1979 ஜூன் 05 ஆம் திகதிய 39/4 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானி மூலம் அரசுக்குச் சுவீகரித்துக் கொள்ளப்பட்டது.<br><br>1987 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் 1992 ஏப்ரல் 27 ஆம் திகதி அரசாங்கத்துக்குச் சொந்தமான பொதுக் கம்பனியொன்றாக பிரகடனப்படுத்தப்பட்டதோடு ஏக உரிமையாளராக பொதுத் திறைசேரி நியமிக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்யப்பட்டது. |
| **கம்பனியின் பதிவிலக்கம்** | பீபீ 1070 (PB 1070) |
| **தொழில் முயற்சியின் தன்மை** | சிங்களம் மற்றும் தமிழ் மொழி பேசுகின்ற இரசிகர்களுக்காக இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகளும் (**ITN** மற்றும் வசந்தம் TV), இரண்டு வானொலி சேவைகளும் (ITN FM மற்றும் வசந்தம் FM) பேணப்பட்டு வருகின்றன. இலங்கையில் பெருமளவிலான பகுதிகள் உள்வாங்கப்படும் வகையில் மிகவும் பலமான ஒளிபரப்பு/ஒலிபரப்பு சக்தியினை உரித்தாக்கிக் கொண்டுள்ளது. |
| **கணக்காண்டு** | ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதி |
| **கணக்காய்வாளர்கள்** | கணக்காய்வாளர் தலைமை அதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம் |
| **கம்பனி செயலாளர்** | வரையறுக்கப்பட்ட கோப்பரேட் அட்வைசர் சர்வீசஸ் (தனியார்) கம்பனி, கொழும்பு |
| **வங்கியாளர்** | இலங்கை வங்கி |

**பணிப்பாளர் சபை**

| | | |
|---|---|---|
| தலைவர் | திரு. சுதத் ரோஹண | (2021.12.29 வரை) |
| நிறைவேற்று பணிப்பாளர் | கலாநிதி எச்.எஸ். ஹெட்டியாராச்சி | (2021.12.30 வரை) |
| பணிப்பாளர் | பேராசிரியர் எம்.கே.சி. ராஜபக்ச | |
| பணிப்பாளர் | கலாநிதி அமில இசான் கங்கானம்கே | (2021.12.28 வரை) |
| பணிப்பாளர் | திரு. எம். பைனாஸ் | |
| பணிப்பாளர் / திறைசேரியின் பிரதிநிதி | திருமதி. சஞ்சீவனி வீரசேகர | |
| பணிப்பாளர் | சட்டத்தரணி ரி.ஏ. யஜீஸ் தென்னகோன் | (2021.01.27 முதல்) |

## சிரேஸ்ட முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| தலைவர் | திரு. சுதத் ரோஹண | (2021.12.29 வரை) |
| நிறைவேற்று பணிப்பாளர் | கலாநிதி எச்.எஸ். ஹெட்டியாராச்சி | (2021.12.30 வரை) |
| பிரதம நிறைவேற்று அதிகாரி | திரு. என்.ஏ.ஐ.என்.கே. நிஸ்ஸங்க | |
| பொது முகாமையாளர் | திரு. டப்.பி.ஏ.எம். விஜேசிங்க | |

## பிரதி பொது முகாமையாளர்கள்

| | |
|---|---|
| திரு. எஸ். இரதலியகொட | பிரதி பொது முகாமையாளர் (செய்தி மற்றும் நடப்பு விவகாரம்) |
| திருமதி. சஞ்சீவனீ ஏப்பா | பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) |
| திரு. எச்.எஸ்.கே. பெரேரா | பிரதி பொது முகாமையாளர் (நிகழ்ச்சி) |
| திரு. ரவி சிறிவர்தன | பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) |
| திருமதி.ரீ.கே.இஸட். குணசேகர | பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) கடமை நிறைவேற்றல் |
| திரு. கே.ஏ.பீ.ஏ.குலரத்ன | பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல்) 2021.08.30 வரை |
| திரு. யூ. ஹேவாவசம் | பிரதிப் பொது முகாமையாளர் கடமை நிறைவேற்றல் (பொறியியல்) 2021.08.31 முதல் |
| திரு.அசோக கருணாநாயக்க | பிரதிப் பொது முகாமையாளர் (வானொலி) 2021.06.03 வரை |
| திரு. கபில திலகசிறி | பிரதி பொது முகாமையாளர் (வானொலி) 2021.06.03 முதல் |

## இணைப்பாக்கத் தகவல்கள்

தலைமையகம்

விக்கிரமசிங்கபுர, பத்தரமுல்லை, இலங்கை
தொலைபேசி இலக்கம் : 94 11 2774424, 2773289
தொலைநகல் : 9411 2774594
மின்னஞ்சல் : chairman@itn.lk, itnadm@itn.lk
வலைதளம் : www.itn.lk

சந்தைப்படுத்தல் பிரிவு

325,பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இலக்கம் : 94 11 2699072, 2682304, 2691868
தொலைநகல் : 94 11 2688724
மின்னஞ்சல் : marketing@itn.lk

## பயணத்தின் அடிச்சுவடுகள்

| | | |
|---|---|---|
| 1979 | ஏப்ரல் 13 | தனியார் வர்த்தகக் குழுவொன்றினால் பன்னிப்பிட்டி மஹல்வராவ எனும் இடத்தில் 65 அடி உயரமான கம்பம் ஒன்றின் மூலம் 1 கிலோவொற் அளவிலான கடத்துகை கொள்ளளவினைக் கொண்ட ஒளிபரப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. |
| | ஜுன் 05 | அரசுக்குச் சுவீகரித்துக்கொள்ளப்பட்டது. |
| 1982 | | ஒளிபரப்பு நடவடிக்கைகள், கலையரங்குகள் மற்றும் தலைமையகம் என்பவை பத்தரமுல்லையின் விக்கிரமசிங்கபுரவிற்குச் கொண்டுசெல்லப்பட்டன. ஒளிப்பதிவு நடவடிக்கைகள் மெட்டிக் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டதோடு பின்னர் பெருவாரியாகப் பயன்படுத்தப்படுகின்ற பீட்டாகேம் தொழில்நுட்பத்திற்கு மாற்றப்படுதல். |
| 1990 | நவம்பர் 01 | எட்டியாந்தோட்டை ஒளி/(ஒலி)பரப்பு நிலையமானது உத்தியோகபூர்வமாக செயற்பாடுகளை ஆரம்பித்தல். |
| 1992 | ஏப்ரல் 27 | 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் அரசாங்கக் கம்பனியொன்றாக மாற்றியமைத்து 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனியொன்றாக பதிவு செய்யப்படுதல். |
| | நவம்பர் 23 | தெனியாய ஒளி/ (ஒலி)பரப்பு நிலையமானது உத்தியோகபூர்வமாக செயற்பாடுகளை ஆரம்பித்தல். |
| 1993 | ஆகஸ்ட் 23 | நாயபெத்த ஒளி/(ஒலி) பரப்பு நிலையமானது உத்தியோகபூர்வமாக செயற்பாடுகளை ஆரம்பித்தல். |
| 1997 | ஏப்ரல் 01 | லக்ஹண்ட வானொலிச் சேவையினை சுயாதீன தொலைக்காட்சி நிருவாகத்திற்குள் சுவீகரித்துக்கொள்ளப்படுதல். |
| 1999 | ஏப்ரல் 12 | ஹுன்னஸ்கிரிய ஒளி/(ஒலி)பரப்பு நிலையமானது உத்தியோகபூர்வமாக செயற்பாடுகளை ஆரம்பித்தல். |
| 2000 | அக்டோபர் 4 | கரகஹதென்ன ஒளி/(ஒலி) பரப்பு நிலையமானது உத்தியோகபூர்வமாக செயற்பாடுகளை ஆரம்பித்தல். |
| 2001 | ஏப்ரல் 07 | சூரியகந்த ஒளி/(ஒலி) பரப்பு நிலையமானது உத்தியோகபூர்வமாக செயற்பாடுகளை ஆரம்பித்தல். |
| 2006 | ஜுன் 2 | லக்ஹண்ட கலையரங்குகள் மற்றும் தலைமையகம் பத்தமுல்லை விக்கிரமசிங்கபுர சுயாதீன தொலைக்காட்சி வளாகத்திற்குக் கொண்டுவரப்பட்டன. |
| 2008 | ஏப்ரல் 21 | வசந்தம் எப்.எம். வானொலிச் சேவை ஆரம்பிக்கப்படுதல் |
| 2008 | செப்டெம்பர் | சுயாதீன தொலைக்காட்சி சேவையின் வரலாற்றில் முதற் தடவையாக உச்சமட்ட நேயர்களுக்களுக்கான வான் காலத்தில் (Prime Time) முதலாம் தர அலைவரிசையாக மாறுதல். |
| 2009 | | சகல வான் காலங்களுக்கும் உரியதாக சுயாதீன தொலைக் காட்சிச் சேவையானது 1 ஆம் இலக்க அலைவரிசையாக இடம்பிடித்தது |
| | ஜுன் 25 | வசந்தம் தொலைக்காட்சி அலைவரிசை ஆரம்பிக்கப்படுதல் |
| | நவம்பர் 12 | ப்ரைம் தொலைக்காட்சி மற்றும் ப்ரைம் வானொலி சேவை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படுதல் |
| 2010 | ஜுன் 06 | லக்ஹண்ட, வசந்தம் ரீவீ மற்றும் வசந்தம் எப்.எம். ஒளி/(ஒலி) பரப்பினை விரிவாக்கும் நோக்கத்தோடு கொக்குவில் பல் தொழிற்பாட்டு ஒளி.ஃஒலிபரப்பு நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுதல். |
| 2011 | ஜனவரி 20 | புதிய HDTV கலையரங்குகள் மற்றும் அலுவலகக் கட்டிடத் தொகுதிக்கான நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படுதல் |
| | செப்டெம்பர் 08 | வசந்தம் எப்.எம் ஒலிபரப்பினை விரிவுபடுத்துவதற்காக யாழ்ப்பாணத்தில் புதிய ஒலிபரப்புக் கருவியொன்றினையும் அன்டெனா ஒன்றினையும் தாபித்தல் |
| | டிசெம்பர் | பணியாளர் தொகுதிக்கான செயலாற்றுகை மதிப்பீட்டு முறையினை அறிமுகப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல். |
| 2012 | செப்டெம்பர் 03 | மடுல்சீமை ஒளி/ஒலிபரப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து வசந்தம் ரீவிக்கான ஒளிபரப்பு கிழக்கு மாகாணம் உள்வாங்கப்படும் வரை விரிவாக்கப்பட்டது. |
| 2014 | மார்ச் 03 | பாதுகாப்புப் பிரிவு, விருந்தினர் தங்கும் மண்டபம், சிற்றுண்டிச் சாலை மற்றும் நிகழ்ச்சிகள், நிதி, பொறியியல் ஆகிய பிரிவுகளுக்காக அலுவலகத் தொகுதியினைக் கொண்டமைந்த ஐந்து மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல். |
| 2016 | ஜுன் 30 | புதிய HD கலையரங்கு மற்றும் அலுவலகக் கட்டிடத் தொகுதி திறந்து வைக்கப்படுதல் |
| | செப்டெம்பர் 19 | சுயாதீன தொலைக் காட்சிச் சேவை மீளமைக்கப்படுதல்<br>லக்ஹண்ட வானொலி சேவை மற்றும் ITN FM மீளமைக்கப்படுதல் |
| 2017 | ஜுன் 14 | அலுவலகத் தொகுதியினைக் கொண்டமைந்த ஐந்து மாடிக் கட்டிடம் திறந்து வைக்கப்படுதல் |
| 2020 | ஜனவரி 01 | சுயாதீன தொலைக்காட்சியின் பழைய இலட்சினை மீள அறிமுகப்படுத்தப்படல்<br>ITN FM மீண்டும் Lakhanda வாக மாற்றப்படுதல் மற்றும் இலட்சினை மீள் அறிமுகம். |
| | ஜுன் | சமூக வலைதள செயற்பாடுகளின் மேம்பாட்டுக்கென ITN Digital பிரிவு ஆரம்பிக்கப்படுதல் |

# ● தலைவரின் செய்தி

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு கடந்த வருடத்தில் அடைந்துள்ள வெற்றிகளை முன்வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

உலகளாவிய கோவிட் 19 சூழ்நிலை இருந்தபோதிலும், 2021 ஆம் ஆண்டில் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் வருவாயை அதிகரித்துக்கொள்ள முடிந்துள்ளதோடு தயாரிக்கப்படும் நிகழ்சிகளின் தரத்தை மேம்படுத்தவும், அனைத்து நிகழ்ச்சிகளையும் சந்தைப் பங்கு (Market Share) மற்றும் Ratings என்பவற்றை இலக்காகக் கொண்டு மிகவும் கவர்ச்சிகரமான முறையில் சமர்ப்பிக்கவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது, பார்வையாளர்களின் இரசனைக்கு மதிப்பளிக்கும், தேசிய மற்றும் சமூகப் பொறுப்புடன் இரசனை, கலாசார மரபுரிமை, சுயம் மற்றும் அறிவை வெளிப்படுத்தும் கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகள் "தேசிய மரபுரிமையின் அலைவரிசைக் குறியீடு" என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டு சிறந்த, தரமான தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சுமத்தி விருது வழங்கும் விழாவில் சுயாதீன தொலைக்காட்சி முன்வைத்த வில்பத்து வாதம் மற்றும் Acoustica Unlimited என்பவை முறையே சிறந்த சமகால நிகழ்ச்சி மற்றும் சிறந்த இசை நிகழ்ச்சியாக கௌரவிக்கப்பட்டதோடு SLIM NELSON PEOPLE'S AWARDS விருது வழங்கும் விழாவின்போது ''அட்டபட்டம" நிகழ்ச்சி தொடர்ச்சியாக 13 வது தடவையாக இலங்கையில் மிகவும் பிரபலமான நிகழ்ச்சியாக விருது பெற்றது.

மேலும், ரைகம் டெலீஸ் விருது விழாவில் சுயாதீன தொலைக்காட்சி சேவை 2020 மற்றும் 2021ம் ஆண்டுகளில் சிறந்த தொலைக்காட்சி நாடக அலைவரிசையாக விருது வென்றது. இவ்விருது விழாவில் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு 40 விருதுகளை தன்னகப்படுத்திக்கொண்டது.

இந்த நிகழ்ச்சிகளின் வரிசைப்படுத்தல் மற்றும் நிறுவனத்தில் செயல்படுத்தப்பட்ட பிற மாற்றங்களின் ஊடாக 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 5.21 ஆக காணப்பட்ட சந்தைப் பங்கை 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 8.51 ஆக தக்க வைத்துக்கொள்ள முடிந்தது.

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு போட்டித் தன்மையுடன் புதிய ஊடகத்தைப் பயன்படுத்துவதற்காக ஆரம்பித்த ITN Digital அலைவரிசை பெரும் முன்னேற்றத்தை அடைந்துள்ளதோடு திட்டமிடப்பட்ட சந்தைப்படுத்தல் மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் முறைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பொருளாதார ரீதியில் இலாப நோக்கற்ற நிறுவனத்தின் அனைத்துச் செலவுகளையும் கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல் மூலம் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்புக்கு 1407 மி.ரூபா வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடிந்தது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 22.35% வருமான வளர்ச்சியாகும். மேலும், 2020 ஆம் ஆண்டு 280 மி. ரூபா அரச ஒதுக்கீடு தவிர 507 மி.ரூபா நட்டத்தை மேலே குறிப்பிட்டதை போன்று வருமானத்தை அதிகரித்து, பொருளாதார ரீதியில் நன்மை பயக்காத நிறுவனத்தின் அனைத்து செலவுகளையும் குறைத்து 2021ம் ஆண்டில் 316 மி.ரூபாவாக 37.7% இனால் குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது. கோவிட் 19 நிலைமை மற்றும் ஊடகத்துறையில் காணப்பட்ட கடுமையான போட்டித் தன்மை காரணமாக வருமான வளர்ச்சியானது மிகவும் சவால் மிக்கதாக அமைந்த போதிலும் 2021 ஆம் ஆண்டில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடிந்துள்ளது. மேலும், 2021 ஆம் ஆண்டில் நிறுவனம் பொதுத் திறைசேரியிலிருந்து மீண்டெழும் செலவுகள் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

இந்த அனைத்து வெற்றிகளும் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கைப் பிரகடனத்தில் காணப்படுகின்ற கொள்கைகள், செயற்பாடுகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள தனித்துவமான முன்னுரிமைகளுக்கு முன்னுரிமை அளித்து அடையப்பட்டுள்ளன.

மேலும், இணையத்தளங்கள் (Web Sites), சமூக ஊடகங்கள் (Social Media), தொலைபேசி குறுஞ்செய்திகள் மற்றும் கூர்திறன்(ஸ்மார்ட்) கைத்தொலைபேசிகள் மூலம் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பைச் சேர்ந்த அனைத்து வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கான நேயர்களினதும் பார்வையாளர்களினதும் ஈர்ப்பினைப் பெறுவதன் மூலம் சந்தைப் பெறுமதி மற்றும் வருவாயை மேலும் அதிகரித்துக்கொள்வதற்கும், சமூக ஊடக வலையமைப்புகள் மற்றும் புதிய ஊடக விநியோக மேடைகளைப் (Over The Top Platforms) பயன்படுத்தி ஒளி ஒலி படைப்புகள், அனிமேஷன் (இயக்கமூட்டல்) படைப்புகள் மற்றும் கிராபிக் படைப்புகள் என்பவற்றுக்கான பொறுப்புடன்கூடிய அரச ஊடகமாக புதிய ஊடகங்களைப் பயன்படுத்தி புதிய வணிக வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வதிலும் அவற்றை இடையறாது முன்னெடுத்துச் செல்வதிலும் பணிப்பாளர் சபை, சிரேஸ்ட முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள் அனைவரும் வழங்கிய ஆதரவு பெரிதும் முக்கியமாக அமைந்ததோடு அவர்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவிப்பதுடன் அவர்கள் அனைவரும் எதிர்கால வெற்றியின் முன்னோடிகளாக இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

**சுதர்சன குணவர்தன**

தலைவர்

## சந்தைப்படுத்தல் பிரிவு

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் ஒட்டுமொத்த சந்தைப்படுத்தல் பிரிவு பதிவு செய்த சந்தைப்படுத்தல் வருமானம் 1579.11 மில்லியன் ரூபா என்பதோடு சுயாதீன தொலைக்காட்சிச் சேவை, வசந்தம் தொலைக்காட்சி, லக்ஹண்ட வானொலி மற்றும் வசந்தம் எ.்.ப்எம் ஆகிய அலைவரிசைகள் பதிவு செய்த வருமானம் பின்வருமாறு.

| அலைவரிசை | வருமானம்(ரூ.மி) |
|---|---|
| சுயாதீன தொலைக்காட்சிச் சேவை | 1346.27 |
| வசந்தம் தொலைக்காட்சி | 133.68 |
| லக்ஹண்ட வானொலி | 63.20 |
| வசந்தம் எ.்.ப்எம் | 35.96 |

### ITN

சேவை முகவர் நிறுவனங்கள் என்ற வகையில் 2021 ஆம் ஆண்டில் அதிக முதலீட்டினை Group M Media (Pvt) Ltd. எனும் நிறுவனம் மேற்கொண்டதோடு அதன் பெறுமதி 286.33 மி.ரூபாவாகும். இரண்டாவதாக அதிகூடிய முதலீடு Phoenix O & M (Pvt) Ltd. எனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அதன் பெறுமதி 186.04 மி.ரூபாவாகும்.

தனி சேவை வழங்குநரால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளாக அதிகூடிய முதலீடு தேசிய லொத்தர் சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அதன் பெறுமதி 180 மில்லியன் ரூபாவாகும். Unilever Sri Lanka Ltd. மற்றும் ருடுைநளநச டுனிவழடு ஊநலடழடு டுவன. ஆகிய நிறுவனங்கள் 136 மில்லியன் ரூபா பெறுமதியான முதலீட்டினை மேற்கொண்டுள்ளன.

சுயாதீன தொலைக்காட்சிச் சேவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வுகளின் மூலம் பெறப்பட்ட வருமானம் பின்வருமாறு அமைகின்றது.

- 2021 ஆம் ஆண்டில் ITN சூரிய மாங்கல்யம் (சித்திரை புத்தாண்டு) மின்னேரிய இராணுவ முகாமில் covid - 19 சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி நடத்தப்பட்டது. அதன் பிரதான அம்சங்கள் அனுசரணை பங்களிப்பின் கீழ் நடத்தப்பட்டன. அதன்போது ஈட்டப்பட்ட வருமானம் பின்வருமாறு.

- சூரிய மாங்கல்யம் - 30 மி. ரூபாய்
- தருபிரி அவுருது - 23 மி. ரூபாய்
- மஹ கெதர அவுருது - 12 மி. ரூபாய்

அத்தோடு சித்திரையுடன் தொடர்புடைய ஏனைய அம்சங்களின் மூலம் (சிறுவர் புத்தாண்டு/Avurudu Frequency packages /செல்லம் கெதர அவுருது) பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் அண்ணளவாக 33 மி.ரூபாவாகும். அதன்படி சித்திரைப் புத்தாண்டுடன் தொடர்புடைய அம்சங்களின் மூலம் 98 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டதோடு கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட ஆகக்கூடிய வருமானமாகும்.

- "31st Night" நித்தம் இசைத்துறையில் பிரபல்யமான நட்சத்திரங்களின் பங்கேற்புடன் தரு பலச இசை நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. இதற்காக Unilever நிறுவனம் Lux வர்த்தக குறியீட்டின் கீழ் அனுசரணை வழங்கியது.

### லக்ஹண்ட வானொலி

2021 ஆம் ஆண்டில் 63.2 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டுவதன் மூலம் லக்ஹண்ட வானொலி ஏனைய வருடங்களுக்கு ஒப்பீடாக அதிக வருமானத்தை ஈட்டியுள்ளது.

இதன்போது சேவை முகவர் நிறுவனங்களாக செலசினே நிறுவனம் அதிகூடிய முதலீட்டினை மேற்கொண்டதோடு அதன் பெறுமதி 14.4 மில்லியன் ரூபாவாகும். அத்துடன் அதிகூடிய முதலீட்டினை மேற்கொண்ட சேவை வழங்குநர் தேசிய லொத்தர் சபை என்பதோடு அதன் பெறுமதி 23 மில்லியன் ரூபாவாகும்.

- லக்ஹண்ட வானொலி அதன் ஆண்டுப் பூர்த்திக்காக 2021 நவம்பர் 27 ஆம் திகதி "Color of Love" என்னும் பெயரில் விசேட நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்ததோடு அது சுயாதீன தொலைக்காட்சிச் சேவை ஊடாகவும் நேரடி ஒளிபரப்பாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது. இதன்போது அனுசரணையாளர்களிடமிருந்து 3,350,000/- ரூபா மொத்த வருமானம் கிடைத்ததோடு லக்ஹண்ட வானொலிக்காக 500,000/- ரூபா ஒதுக்கப்பட்டது. இதற்காக ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ், Hemas, அஞ்சன செனவிரத்ன மற்றும் Dialog ஆகிய நிறுவனங்கள் அனுசரனை வழங்கின.

- லக்ஹண்ட வானொலி சித்திரை புதுவருடத்தையொட்டி ஏற்பாடு செய்த நிகழ்ச்சிகளின் மூலம் 1,580,000/- ரூபா மொத்த வருமானத்தை ஈட்டியுள்ளது.

### வசந்தம் தொலைக்காட்சி

வசந்தம் தொலைக்காட்சி அலைவரிசை 2021 ஆம் ஆண்டில் 133.68 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளதோடு குறைந்த துலாவுகை வலயம் மற்றும் கோவிட் 19 நிலைமை என்பவற்றின் காரணமாக சந்தைப்படுத்தல் இலக்குகளை அடைந்து கொள்வது சவாலாக அமைந்தது.

இதன்போது ஆகக்கூடிய முதலீட்டினை மேற்கொண்ட நிறுவனமாக Pheonix O & M (Pvt) Ltd. எனும் நிறுவனம் அமைந்துள்ளதோடு அதன் பெறுமதி 35.26 மில்லியன் ரூபாவாகும். அத்தோடு சேவை வழங்குநர்களுக்கு மத்தியில் ஆகக்கூடிய முதலீட்டினை Unilever Sri Lanka நிறுவனம் மேற்கொண்டுள்ளதோடு அதன் பெறுமதி 11.43 மில்லியன் ரூபாவாகும்.

அத்தோடு 2021 ஜனவரி - பெப்ரவரி மாதங்களில் நடத்தப்பட்ட அபுதாபி T - 20 போட்டிக்காக வசந்தம் தொலைக்காட்சி அலைவரிசை உத்தியோகபூர்வ தொலைக்காட்சித் துணைவராக செய்யப்பட்டது.

### வசந்தம் எ.்.ப் எம்

வசந்தம் எப்எம் அலைவரிசை 2021 ஆம் ஆண்டில் ஏனைய வருடங்களை விட அதிக வருமானத்தை பதிவு செய்து 35.96 மில்லியன் ரூபாவிலான வருமானத்தை ஈட்டியது. இந்த வருமானம் புறச் செயற்பாடுகள் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் எதுவுமின்றி பெறப்பட்டிருப்பது தனிச்சிறப்பானது.

2021 ஆம் ஆண்டுக்காக வசந்தம் எப்.்.எம் அலைவரிசையில் முதலீடு செய்த சேவை முகவர் நிறுவனங்களுக்கு மத்தியில் அதிகூடிய முதலீட்டினை Lanka Hope Media நிறுவனம் மேற்கொண்டுள்ளதோடு அதன் பெறுமதி 4.22 மில்லியன் ரூபாவாகும். சேவை வழங்குனர்களுக்கு மத்தியில் அதிகூடிய முதலீட்டினை அபிவிருத்தி லொத்தர் சபை மேற்கொண்டுள்ளதோடு அதன் பெறுமதி 13.4 மில்லியன் ரூபாவாகும்.

அதன்படி covid-19 நிலைமையின் காரணமாக 2021 ஆம் ஆண்டில் இரண்டு தடவைகளில் (ஏப்ரல் மற்றும் ஆகஸ்ட்) நாடு முழுவதிலும் பயணத் தடைகள் விதிக்கப்பட்டதோடு அந்த நிலைமையின் கீழ் சேவை வழங்குனர்கள் மேற்கொள்ளும் முதலீடுகள் பாரியளவில் நிறுத்தப்பட்டன. இது ஒட்டுமொத்த சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் செயல்பாட்டினையும் பாதித்தது. இந்த நிலைமையின் மத்தியில்கூட சந்தைப்படுத்தல் பிரிவினால் 2020 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2021 ஆம் ஆண்டில் 200 மி.ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் ஈட்டப்பட்டமையானது சந்தைப்படுத்தல் பிரிவு பெற்ற வெற்றியாகும்.

## ● நிகழ்ச்சி பிரிவு

சுயாதீன தொலைக்காட்சி 2021 ஆம் ஆண்டில் அதன் 42 ஆம் ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாடியது. முழு உலகிற்கும் சவாலாக அமைந்த கோவிட் - 19 தொற்றுநோய் எமது நாட்டுக்கும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியபோதிலும் அவ்வனைத்து சிரமங்களுக்கு மத்தியிலும் இலங்கையின் பார்வையாளர்களுக்கு கல்வி, இரசனை, கலாசாரம், அபிவிருத்தி, விவசாயம், சங்கீதம், சிறுவர், சமய மற்றும் தகவல் என்ற வகையில் உயர் மட்ட இரசனையை வழங்குவதற்கு எமது அலைவரிசை முதன்மை பங்களிப்பினை வழங்கியது.

**நிகழ்ச்சி ஒளிபரப்பு நேரம்**

ஒவ்வொரு நாளும் அதிகாலை 4.00 மணிக்கு ஒளிபரப்புப் பணிகள் ஆரம்பமாகி நல்லிரவு 12.00 மணிக்கு ஒளிபரப்புப் பணிகள் முடிவடையும். லொத்தர் சீட்டிழுப்பு ஆரம்பிக்கப்பட்டதையடுத்து ஒளிபரப்பு நேரம் மேலும் 1/2 மணித்தியாலங்களால் நீட்டிக்கப்பட்டது. அதன்படி தினமும் 20 மணித்தியாலங்களும் 30 நிமிடமும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப்படுகின்றன.

ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை, நிறுவனத்தால் தயாரிக்கப்படும் சுமார் 45 நிகழ்ச்சிகளும் வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்படும் சுமார் 19 நிகழ்ச்சிகளும் உள்ளன. அந்த நிகழ்ச்சிகளில் ஒரு பகுதி அனுசரணையுடனும் ஏனையவை அனுசரணை இன்றியும் ஒளிபரப்பப்படுகின்றன.

**காலை நேர ஒளிபரப்பு**

தினமும் அதிகாலை 4.00 மணிக்கு ஆசீர்வாத பிரித் பாராயணத்துடன் ஆரம்பமாகி பத்திரிகைகளின் விபரங்கள் உள்ளடங்கிய "பத்தரமேந்துவ" மற்றும் "ஹத்வெனி பெய" ஒளிபரப்பப்படுகின்றன. ஞாயிற்றுக்கிழமைகளில் ஒளிபரப்பப்படும் "மொகானுடன்" எனும் நிகழ்ச்சி ஊடாக உலக விபரங்கள் கலந்துரையாடப்படுகின்றன.

பினிவியன காலை ஒளிபரப்பு 2021.01.04 முதல் வாரத்தின் ஐந்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை ஒளிபரப்பப்படுகிறது. இந்த ஒளிபரப்பு பல்வேறு அம்சங்களைக் கொண்டுள்ளதுடன் வெவ்வேறு தயாரிப்பாளர்களின் கீழ் இந் நிகழ்ச்சி தயாரிக்கப்படுகிறது.

"நிம்ஹிம் சர" நிகழ்ச்சியிலிருந்து விருந்தினரை அழைத்து அவருக்குப் பிடித்த பாடல்கள் வழங்கப்படுகின்றன. வாரத்தில் ஒரு நாள் ஜோதிட நிகழ்ச்சியும், சமகால தேவைகளின் அடிப்படையில் தலைப்பொன்றைத் தேர்ந்தெடுத்து விருந்தினர் ஒருவரை அழைத்து அது தொடர்பாக கலந்துரையாடுதல், ஒரு நாள் சுதேச மருத்துவம் மற்றும் சிங்கள மருத்துவத்தின் தரம் தொடர்பாக கலந்துரையாடுதல் மற்றும் முன்பு தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட மக்களின் வரவேற்பை அதிகம் பெற்ற ஒரு தொலைக்காட்சி நாடகம் காலை 9.30 - 10.00 வரை மீண்டும் ஒளிபரப்புச் செய்யப்படுகின்றது. மேலும், காலை ஒளிபரப்பின் கீழ் 'Life Style' என்ற பெயரில் அழகுக் கலை நிகழ்ச்சியும், பெண்களுக்கு முக்கியமான தலைப்புகளிலான கலந்துரையாடல்களும், "சூப யாத்ரா" என்ற சமையல் நிகழ்ச்சியும், "சித் யாய" நிகழ்ச்சியும் மற்றும் இறுதியாக "Music @11" என்ற ஒரு மணி நேர பாடல்கள் உள்ளடங்கிய நிகழ்ச்சியும் ஒளிபரப்பப்படுகின்றன.

**மாலை நேர ஒளிபரப்பு**

பி.ப 12.30 – 3.30 மணி வரை தொலைக்காட்சி சினிமாவில் பிரபலமான பழைய தொலைக்காட்சி நாடகங்கள் 03 மணித்தியாலங்கள் ஒளிபரப்பப்பட்டன. பி.ப.3.30 – 5.00 வரை "அப்பே பந்திய – எங்கள் வகுப்பு" என்ற பெயரில் கல்வி நிகழ்ச்சியொன்று வார நாட்களில் ஒளிபரப்பப்பட்டது. அத்துடன் மாலை 5.00 மணி தொடக்கம் கலை/விவசாய/விளையாட்டு/ சிறுவர்/இளையோர்/யௌவனர் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன.

**இரவு நேர ஒளிபரப்பு**

இரவு நேர ஒளிபரப்பு மாலை 6.00 மணி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டதோடு இரவின் முதன்மைக் காலம் 6.00 மணி தொடக்கம் 9.30 மணி வரையாகும். இக்காலப் பகுதியில் தொலைக்காட்சி நாடகங்கள் ஒளிபரப்பப்பட்டன.

**சிறுவர் நிகழ்ச்சிகள்**

**சமனல யாய**

சிறுவர்களின் இசைத் திறனை வளர்க்கும் நோக்கில் இந் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. ஒரு பிரபலமான இசைக்கலைஞரின் பாடல்களை அவர் முன் சிறுவர்கள் பாடுவதுடன் பாடல் பற்றிய விவரணம் மற்றும் வருகை தரும் கலைஞருடனான உரையாடல் உள்ளிட்டதாக இந்நிகழ்ச்சி ஒளிப்பதிவு செய்யப்படுகின்றது. பாடசாலை சிறுவர்களின் இசைக்குழுக்களில் பாடுவதற்கு திறமையான பிள்ளைகளுக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

### Fun Street

இது சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு மற்றும் அறிவு வழங்கப்படுகின்ற ஒரு நிகழ்ச்சியாகும். மாதிரிக்கு அமைய சிறுவர்கள் பல்வேறு கதாபாத்திரங்களை வகிப்பதோடு அதன் மூலம் அறிவு, மனோபாவம் மற்றும் ஆற்றல்களை பல்வேறுபட்ட வகையில் மெருகூட்டிக்கொள்வதற்குத் தேவையான பின்னணி உருவாக்கப்படுவதோடு அதன் மூலம் அவர்களுக்கு மகிழ்ச்சியையும் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

**சிறுவர் செய்திகள்**

செய்திப் பெறுமதியுடன்கூடியதாக பாடசாலை முறைமையில் இடம்பெறுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக சிறுவர்களை விழிப்பூட்டுவதும், பல்வேறுபட்ட சிறுவர் கழகங்கள் மற்றும் சிறுவர்களுக்கு முக்கியமாக அமைகின்ற நிகழ்வுகள் தொடர்பாக பதிற்செயற்பாட்டினை வழங்குவதும் சிறுவர்களின் அறிவினை வளர்ப்பதற்காக குறும் சிறப்பம்சங்களை முன்னளிக்கை செய்வதும் கலாசார, வரலாற்று அல்லது சமூக ரீதியான பெறுமதிகள் கொண்ட இடங்கள் தொடர்பில் அறியாத தகவல்களை பிள்ளைகளுக்கு வழங்குவதும் இந்த நிகழ்ச்சியின் மூலம் இடம்பெறுகின்றது.

**சஞ்சிகை நிகழ்ச்சிகள்**

**ஹிரிமல் சவாரிய**

தாம் பிறந்த நாடு தொடர்பில் சிறுவர்கள் கொண்டுள்ள அறிவு, மனோபாவம் என்பவற்றை சாதகமான முறையில் மாற்றுவதன் மூலம் தாயகம் மீது கொண்டுள்ள மரியாதை மற்றும் பற்று என்பவற்றை மேம்படுத்துதல் மற்றும் சமவயதுடைய சிறுவர்களுடன் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வதற்காக வாய்ப்பு வழங்கும் ஒரு நிகழ்ச்சியாகும். அத்தோடு, இயற்கையை சரியாக அனுபவிக்கும் விதம் மற்றும் இயற்கையுடன் நெருக்கமாக இருப்பதன் மூலம் வாழ்க்கைக்குக் கிடைக்கின்ற அனுகூலங்கள் தொடர்பில் சிறுவர்களுக்குள் உணர்வினை ஏற்படுத்துவதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது.

**கலா மஞ்சரி**

கலையின் அபூர்வத்தன்மையை தேடிச் செல்லும், கலையை நேசிக்கும் அனைவரும் இரசிக்கக்கூடிய கலை நூல்களின் திரட்டாகும். பல ஊடகங்கள் வாயிலாக இரசனை, அறிவு மற்றும் புரிதல் என்பவற்றை வழங்கக்கூடிய படைப்புகளின் திரட்டாகும்.

**வெத கெதர**

சுதேச மற்றும் பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவ அறிவினை புதிய வகையில் பார்வையாளர் மக்களுக்கு வழங்கும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சி தயாரிக்கப்படுகின்றது. இதன் அறிவிப்பாளராகவும் ஓர் ஆயுர்வேத மருத்துவப் பெண் பணியாற்றுகின்றார். பாரம்பரிய மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தைக் கட்டியெழுப்ப

இந்த நிகழ்ச்சியின் ஊடாக இயலுமை கிடைத்துள்ளதால் “ரைகம்” மற்றும் “சுமதி” விருதுகள் “வெதகெதர” நிகழ்ச்சிக்குக் கிடைத்துள்ளன.

### வெனச (மாற்றம்) Plus

இந்த நிகழ்ச்சி கலாசார, விளையாட்டு, சுற்றாடல், அமானுஷ்யம், விசேட நபர்கள், ஆக்கங்கள், வெளிநாட்டு விபரங்கள், சுற்றுலாக்கள், சமயம் மற்றும் விலங்குகள் போன்ற பல துறைகள் ஊடாக பார்வையாளர்களுக்கு தகவல்களை வழங்குகின்றது.

மாற்றம் எனும் நிகழ்ச்சி ஊடாக பெருமளவில் சமூக சேவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிர்கதி நிலையடைந்தோருக்கு உதவிகளை வழங்குதல், செயற்கைப் பாதைகளை வழங்குதல், வீடமைப்பு உதவிகளை வழங்குதல், படைப்பாளர்களுக்கு உதவுதல் மட்டுமன்றி காணப்படுகின்றவற்றிலுள்ள புலப்படாத பகுதிகள் தொடர்பான கலந்துரையாடல்களும் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சி பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்த ஒரு நிகழ்ச்சி என்பதால் பல விருதுகளை வென்றுள்ளது.

## Travel Girl

இலங்கையின் சுற்றுச்சூழல் அழகு மற்றும் வரலாற்று மரபுரிமைகள் மற்றும் பாரம்பரிய தொழில்கள் தொடர்பில் மனம் கவரும் வகையில் விடயங்களை முன்னிலைப்படுத்துவதன் மூலம் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிக்கும் ஒரு நிகழ்ச்சியாகும்.

### அட்டபட்டம

சுமார் 21 வருடங்களாக தொடர்ந்து ஒளிபரப்பாகி வரும் இந்த நிகழ்ச்சியானது 2021 ஆம் ஆண்டு நிறுவனத்திற்கு அதிக வருவாயைப் பெற்றுத் தரும் ஒரு கவர்ச்சிகரமான நிகழ்ச்சியாக ஒளிபரப்ப முடிந்தது. இது மிகக் குறைந்த செலவில் உருவாகும் மிகவும் இலாபகரமான நிகழ்ச்சியாகவும் அமைந்துள்ளது.

### ரன் பிமட்ட அருணெல்ல

ரன் பிமட்ட அருணெல்ல ஆய்வு ரீதியான விவசாய நிகழ்ச்சியானது, விவசாயத்துறை, விலங்கு உற்பத்திகள் மற்றும் அது சாரந்த சுயதொழில் வாய்ப்புகளை பார்வையாளர்களுக்கு வழங்குகின்றதும், அத்துறையில் ஈடுபட்டுள்ள மற்றும் பயிலுநர்கள் அனைவரையும் அறிவூட்டுகின்றதுமான ஒரு நிகழ்ச்சியாகும்.

### <u>இசை நிகழ்ச்சிகள்</u>

### சியபத் பொக்குர

2021 ஆம் ஆண்டிலும், பார்வையாளர்களின் சாதகமான வரவேற்பிற்கு மத்தியில் இந்நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. இதுவரை 50க்கும் மேற்பட்ட கலைஞர்கள் தொடர்பான அரங்கேற்ற நிகழ்ச்சியாக ஒளிபரப்பப்பட்டுள்ளது.

## Rhythm Of India

இது ஹிந்திப் பாடல்களை விரும்பும் பார்வையாளர்களுக்கும் மற்றும் அவர்களின் பாடல்களுக்கான கோரிக்கைகளுக்கும் வாய்ப்பளிக்கும் ஒரு நிகழ்ச்சியாகும்.

## Chat N Music

Chat N Music நிகழ்ச்சி புதுப் பொழிவுடன் 2021ஆம் ஆண்டிலும் ஒளிபரப்பப்பட்டது. மூத்த மற்றும் பயிலுநர் கலைஞர்கள், பல்வேறு தொழில் வல்லுநர்கள், நடிகர் நடிகைகள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் பங்கேற்பில் உரையாடல்களுடன் நேரலையில் வழங்கப்படுகின்றன. இது பார்வையாளர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான ஒரு நிகழ்ச்சியாகும்.

### சனிதா சாதய

இது இலங்கையின் சுபாவித கீதத்தை வளர்ப்பதற்காக 2016 இல் ஆரம்பிக்கப்பட்ட ஒரு இசை நிகழ்ச்சியாகும். இங்கு பல்வேறுபட்ட பாடகர்களினதும் பல்வேறுபட்ட பாடலாசிரியர்களினதும் பல்வேறுபட்ட இசைக்கலைஞர்களினதும் பாடல்கள் 8 சிறுவர்களால் பாடப்படுகின்றன. அதற்கு 08 பேர் கொண்ட வாத்தியக்குழுவினால் இசை நேரடியாக வழங்கப்படுகிறது.

### 31st Night – ஆசிய நட்சத்திர கம்பளம்

சுயாதீன தொலைக்காட்சி முடீளு யுசை நிறுவனத்துடன் இணைந்து 2021.12.31 ஆம் திகதி இரவு “ஆசிய நட்சத்திர கம்பளம்“ என்ற பெயரில் ஒரு இசை நிகழ்ச்சியை நடத்தியதுடன் அது நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

## Voice of Colombo

கொழும்பு மாவட்ட செயலகமும், சுயாதீன தொலைக்காட்சி சேவையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த ரியலிட்டி ஷோ அரச ஊழியர்களின் பாடும் திறமையை மேம்படுத்த பெரும் உதவியாக அமையும். இந்த நிகழ்ச்சிக்கான தேர்வு நிகழ்ச்சிகள் 2021 நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளதோடு இறுதி நிகழ்ச்சி 2022 சனவரி 29 ஆம் திகதி நடைபெறும்.

### <u>கலந்துரையாடல் நிகழ்ச்சிகள்</u>

### தொரமடலாவ

தேசத்தின் தொலைக்காட்சி பல்கலைக்கழகமாகப் புகழ்பெற்று, ஏறக்குறைய 21 ஆண்டுகளாக ஒளிபரப்பாகி வரும் இந்த நிகழ்ச்சியை, 2021 ஆம் ஆண்டிலும் அதன் பிரபலத்தையும் தரத்தையும் தக்க வைத்துக் கொண்டு தொடர்ந்தும் ஒளிபரப்ப முடிந்தது.

2021 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட SLIM Nielsen மக்கள் விருது வழங்கும் விழாவில் தொடர்ச்சியாக இலங்கையில் மிகவும் பிரபலமான 4 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஒன்றாக பரிந்துரைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

வணிக ரீதியாக நிறுவனத்திற்கு அதிக இலாபத்தை ஈட்டித்தரும் நிகழ்ச்சியாகப் பேணிச் செல்ல முடிந்தது.

## Medical Clinic

இந்த நிகழ்ச்சியின் மூலம் தொலைக்காட்சி பார்வையாளர்களுக்கு அறுவை சிகிச்சை அறையில் மேற்கொள்ளப்படும் பாரதூரமான அறுவை சிகிச்சைகள் மற்றும் மருத்துவம்சார் அறிவு என்பவற்றை வழங்க முடிந்துள்ளது.

### ஹித்த காவ

இந்த நிகழ்ச்சியானது ஒரு மனநல மருத்துவரினதும் மனநல ஆலோசகரினதும் பங்கேற்பில் மக்களின் பல்வேறு உளவியல் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்குரிய சாத்தியமான தீர்வுகள் பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சியாகும்.

### <u>ஆவண நிகழ்ச்சிகள்</u>

ஜனமாத்ய பொக்குணே சுபிப்பி சியபத்த (ஊடகமெனும் குளத்தில் மலர்ந்த தாமரை)
மறைந்த கலா கீர்த்தி எட்வின் ஆரியதாச அவர்களின் சரிதை மற்றும் அவரது ஊடக மற்றும் சமூகப் பணியை ஒட்டியதாக தயாரிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும். ஊடகத் துறையில் ஆரம்பநிலையில் இருப்பவர்களுக்கான பல அறிவுரைகள் இதில் உள்ளன.
“சந்தஹிரு சேய” ஆவணப்பட நிகழ்ச்சி மற்றும் நேரடி ஒளிபரப்பு நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த போர்வீரர்களை நினைவுகூரும் வகையில் அனுராதபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட சந்த ஹிரு சேய, 2021 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதி சம்புத்த சாசனத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட வரலாற்று தருணம் நேரடியாக ஒளிபரப்பப்பட்டதோடு அது தொடர்பான ஆவணப்பட நிகழ்ச்சி ஒன்றும் அன்றைய தினமே ஒளிபரப்பப்பட்டது.

### மஹா எல திகே (மஹா கால்வாயின் நெடுகிலும்) ஆவணத் தொடர்

இந்த நிகழ்ச்சியில் மினிபே கால்வாய் திட்டம், மஹா எல திட்டம், வயம்ப கால்வாய் மகாவலி திட்டம் மற்றும் அந்த பகுதிகளில் உள்ள விவசாயிகள் மற்றும் மக்களுக்கு இதன்மூலம் ஏற்படும் நன்மைகள் மற்றும் அவர்களின் பொருளாதார மேம்பாடு குறித்து கலந்துரையாடப்படுகிறது.

**சூரிய மாங்கல்யம்(சித்திரைப் புத்தாண்டு) - 2021**

**இலங்கையின் மாபெரும் சம்பிரதாயங்களின் அனுஷ்டிப்பு**

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் நடைபெறும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்களின் சார்பாக நேரடியாக ஒளிபரப்பப்படும் சூர்ய மாங்கல்யமானது நாட்டில் Covid - 19 மோசமாக நிலவும் சூழ்நிலையிலும் இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்புடன் மின்னேரிய நீர்த்தேக்கத்திலிருந்து வெற்றிகரமாக ஒளிப்பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டது.
மேலும், பல்வேறு தலைமுறைகளைச் சேர்ந்த ஐந்து கலைக் குடும்பங்களை இணைத்துக்கொண்டு "மஹகெதர அவுருத்த" என்ற நிகழ்ச்சியும், "டெலி தரு ரெல்லே சூர்ய மாங்கல்ய" என்ற பெயரில் கலைஞர்களுக்கான புத்தாண்டு விழாவும், "செல்லம் கெதற அவுருது" என்ற குழந்தைகளுக்கான புத்தாண்டு விழாவும் ஒளிபரப்பப்பட்டன.

**விளையாட்டு நிகழ்ச்சிகள்**

**கரப்பந்தாட்ட நேரடி ஒளிபரப்புகள்**

2021 ஆம் ஆண்டு Galaxy Volley Ball என்ற பெயரில் புதிய போட்டித்தொடர் ஒன்றை ஒளிபரப்ப முடிந்ததுடன் Munchee Volley Ball போட்டித்தொடரையும் வெற்றிகரமாக ஒளிபரப்ப முடிந்தது.

### School Boy Cricketer

எதிர்கால கிரிக்கெட் வசந்த நட்சத்திர விழா 2020 மற்றும் 2021 ஆகிய இரண்டு ஆண்டுகளினதும் மிகவும் பிரபலமான கிரிக்கெட் வீரர் மற்றும் வீராங்கனையைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடு விழா ஒளிபரப்பப்பட்டது.

**T - 10 கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு**

முதன்முறையாக, T-10 கிரிக்கெட் போட்டியை எமது ஊடக வலையமைப்பில் ஒளிபரப்ப முடிந்தது.

**அரசியல் நிகழ்ச்சிகள்**

**"துலாவ"**

2021 ஆம் ஆண்டில், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியிலுள்ள நான்கு அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களின் பங்கேற்புடன் சமகால தலைப்புகளின் கீழ் கருத்தாடல் நடத்தப்படுகின்ற "துலாவ" அரசியல் நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது.

**"தீரனய"**

அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பொருளாதார வல்லுநர்கள், அரச மற்றும் கூட்டிணைக்கப்பட்ட சபைகளின் தலைவர்கள், மருத்துவர்கள் போன்ற நாட்டின் பல்வேறு தொழில்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் நிர்வாக அதிகாரிகள் பங்கேற்கும் ஒரு சமகால நிகழ்ச்சியாகும்.

**சமய நிகழ்ச்சிகள்**

**''சவனக் ரெஸ்''**

பல வருடங்களாக ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் ஒளிபரப்புச் செய்யப்பட்ட "சவனக் ரெஸ்" என்ற நேரடி நிகழ்ச்சி, இந்த ஆண்டும் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும், நாடளாவிய ரீதியில் உள்ள பல்வேறு வழிபாட்டுத் தலங்களைத் தேர்ந்தெடுத்து ஒளிபரப்பப்பட்டது.

**"சங்காதிகரணய (பிக்குகளின் நீதிமன்றம்)"**

இந்நிகழ்ச்சியில் இரண்டு பிக்குகளின் பங்குபற்றுதலுடன் சமூகப் பிரச்சினைகள் மற்றும் பௌத்தம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

**"நெகென லொவட்ட எசென தஹம"**

இரண்டு துறவிகள் மற்றும் ஒரு பேராசிரியரின் பங்கேற்புடன் லோவெட சங்கராவ கவிதைகள் பற்றிய விவரணம் இந்த நிகழ்ச்சியில் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நிகழ்ச்சி பௌர்ணமி நாளில் ஒளிபரப்பப்பட்ட "சங்காதிகரணய" நிகழ்ச்சிக்குப் பதிலாக 2021 செப்டம்பர் முதல் ஒளிபரப்பப்பட்டது.

**வெசாக் நிகழ்ச்சிகள்**

2021 மே 26 ஆம் திகதி "ஆலோகோ உதபாதி" வெசாக் நிகழ்ச்சியின் கருப்பொருளில் தயாரிக்கப்பட்ட "தக்க ஜாதகய" கதையை எடுத்தியம்பும் டிஜிட்டல் பந்தல் இரவு 7.00 மணி முதல் ஒளிபரப்பான "ஆலோகோ உதபாதி" நிகழ்ச்சியில் பகுதிகளாக ஒளிபரப்பப்பட்டது. மேலும், வெசாக் வாரத்திற்கான அனுசரணை நிகழ்ச்சியாக தம்ம பதம், வெசாக் நிசதெஸ் மற்றும் வெசாக் சிரிய சரணங்கள் பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டன.

**நத்தார் நிகழ்ச்சிகள்**

2021 ஆம் ஆண்டு நத்தாருக்கான கத்தோலிக்க ஆராதனை நீர்கொழும்பு புனித கைத்தானு தேவாலயத்திலும், கிறிஸ்தவ நத்தார் ஆராதனை காலி முகத்திடல் கிறிஸ்தவ தேவாலயத்திலிருந்தும் ஒளிபரப்பப்பட்டது.

மேலும், கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க தேவாலயங்களுக்கான பல்வேறு பகுதிகள் உள்வாங்கப்படும் கரோல் இசைக்குழுக்கள் எங்கள் நிறுவனத்திற்கு வரவழைக்கப்பட்டு, "நத்தல் கீ மிஹிர" என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டது.

**கல்வி நிகழ்ச்சிகள்**

**யௌவனம்**

குழந்தைகளிடம் அறிவியல் அறிவை வளர்ப்பதற்கும், அவர்களின் இரசனையை மேம்படுத்துவதற்கும் அறிவியல் ஆராய்ச்சி, புதிய ஆக்கங்கள், தொழில்முயற்சி போன்றவற்றில் ஆர்வத்தை ஏற்படுத்துவதும் அவற்றுக்கான அறிவினை மேம்படுத்துவதுமே இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும்.

**தக்ஷிலாவ**

பல வருடங்களாக இந்நாட்டு பிள்ளைகளின் கல்வித் திறனை வளர்த்துக்கொள்ள உதவிய தக்ஷிலாவ நிகழ்ச்சி க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) மாணவர்களை இலக்காகக் கொண்டு 29.05.2021 முதல் ஒளிபரப்பப்பட்டுள்ளது.

**ITN எங்கள் வகுப்பு**

2021.08.06 ஆம் திகதி தொடக்கம் பி.ப. 3.30 - 4.55 தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து ITN எங்கள் வகுப்பு கல்வி நிகழ்ச்சியின் ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டது.

### Smart 5

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தரம் 5 மாணவர்களின் அறிவை மேம்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. 2021 கோவிட் தொற்றுநோயின் போது வீட்டில் தங்கியிருந்த குழந்தைகளுக்கு இந்த் நிகழச்சி மிகவும் உதவியாக இருந்தது.

### ITN Smart Mind

பார்வையாளர்களின் அறிவை மேம்படுத்தவும் ஏனைய அலைவரிசைகளைத் தாண்டி தரமான நிகழ்ச்சிகளை வழங்கவும் 4 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரையிலான பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன் இந்த வினாவிடை நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது.

**ITN டெலிவிஷன் பாடசாலை**

கோவிட் சூழ்நிலையால் கல்வித் துறை சீர்குலைந்திருந்த நேரத்தில் சமகாலத் தேவையாக தொடங்கப்பட்ட "ITN டெலிவிஷன் பாடசாலை" நிகழ்ச்சி 2021 இல் மிகவும் பிரபலமானதோடு நிறுவனத்திற்கு வணிக ரீதியாக வருவாயை ஈட்டவும் முடிந்தது.

### Gadget Mania

உலகின் சமீபத்திய தொழில்நுட்ப போக்கின் ஊடாக பல்வேறு தொழில்நுட்பக் கருவிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வு ரீதியான ஒரு நிகழ்ச்சியாகும்.

**அறிவும் அதிர்ஷ்டமும்.**

இலங்கையின் பாடசாலை மாணவர்களின் அறிவை மதிப்பிடும் இந்த வினாவிடை நிகழ்ச்சி ITN அலைவரிசையின் மேம்பாட்டுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

**குரல் கொடுத்த(டபின் செய்யப்பட்ட) நிகழ்ச்சிகள்**

Shadow of the Elves Cartoon கதைத் தொடர் ஞாயிற்றுக்கிழமைகளில் சிங்களத்தில் டபின் செய்யப்பட்டு “சூர மிட்டியாவத்த“ என்ற தலைப்பில் ஒளிபரப்பப்பட்டது.

**NLB லொத்தர் சீட்டிழுப்பு**

தேசிய லொத்தர் சபையின் சீட்டிழுப்பு 2021.04.19 முதல் இரவு 9.30 மணிக்கு ஒளிபரப்பப்பட்டது. அதன் மூலம் அலைவரிசைக்கு அதிகளவான பார்வையாளர்களை ஈர்க்க முடிந்தது.

**லிய வருண**

மார்ச் 8 ஆம் தேதி கொண்டாடப்படுகின்ற சர்வதேச மகளிர் தினம் சார்பாக சுகாதார சட்டவிதிகளின் பிரகாரம் இது ர்னு கலையகத்தில் ஒளிபரப்பப்பட்டது.

இதன்போது பெண்களை இலக்காகக் கொண்டு அவர்களின் வாழ்க்கையை வலுப்படுத்தவும், வீட்டின் பொருளாதாரத்திற்கும் சமூக ரீதியாக வலுவூட்டுவதற்கும் உதவி வழங்கப்பட்டது.

**தொலைக்காட்சி நாடகங்கள்**

வெளிப்புற புத்திஜீவிகள் / கலைஞர்கள் மற்றும் விமர்சகர்கள் அடங்கிய முன்னோட்டக் குழுவின் பரிந்துரைகளின் மீது சந்தைப் போட்டி மற்றும் ஒளிபரப்பு நேர மதிப்பீடுகள் என்பன கருத்தில் கொள்ளப்பட்டும் நாடகத்தின் தரம், படைப்பாற்றல், செலவு, விற்பனைக்கான வசதிகள் மற்றும் சிரமங்கள், பிற அலைவரிசைகளின் கொள்வனவுப் போட்டி ஆகியவற்றையும் கருத்தில் கொண்டும் தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய தொலைக்காட்சி நாடகங்களுடன் பழைய தரமான தொலைக்காட்சி நாடகங்களும் ஒளிபரப்பப்பட்டதோடு புதிய தொலைக்காட்சி நாடகங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவாகும் பணத்தை மிச்சப்படுத்தவும் முடிந்தது.

**வார நாட்களின் தொலைக்காட்சி நாடகங்கள்**

Interநெஷனல் 01, கொஹொல்லேவே தேவதாவி, சத் வர்ஷா, இஸ்கோலே காலே, எககெய் குருல்லோ, சக்மன் சாயா, சன்சார சிஹினே, லெங்கது அசபுவ, நாடி, ஹதவில அரண, சகுண பியாபத், Interநெஷனல் 02, கிரிகுல, வனவந்துளே வசந்தய, காட்டு இம்புல, அப்பச்சி, சகோதரயா, பெத்தேகெதர, Metro சிஹின, Bro” ஆலியா, போக் வீதிய,ஹித்துவக்காரி, பாவென யக்கட மற்றும் கொழும்பு இத்தாலி ஆகியவை தொலைக்காட்சி நாடகங்களில் முக்கியமானவை.

**வார இறுதி தொலைக்காட்சி நாடகங்கள்**

“சத்தி அந்தயே நிதகஸ் சதி அக” என்ற பெயரில் தரமான (கிளாசிக்) நாடகங்கள் வார இறுதியில் ஒளிபரப்பப்பட்டன. அயால், யுக விளக்குவ, துன்ஹிந்த அத்தர, செப்டம்பரயே திகு தவசக், அசங்வர வெஸ்சக், தாதி, அண்டுன் கிர, மஹபொலவ, சகர்ம, மாணிக்காவத, கருட முஹுர்த்தய, பிங் கெத்த, திய சுழிய, சக்ர, பிச்ச மல சுவந்தய் ஆகியவை இதில் அடங்கும்.

**அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

- சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தை முதலாகக்கொண்டு 2020 - 2025 “அனைவருக்கும் குடிநீர் வழங்கும் திட்டம்” மக்களிடம் கையளிக்கப்பட்டது. அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டமாக கௌரவ பிரதமரின் தலைமையில் இது அலரிமாளிகையில் இருந்து ஒளிபரப்பப்பட்டது.
- நற்பண்புடன்கூடிய சிறுவர் சந்ததியினரை உருவாக்கும் நோக்கத்துடன் ஆரோக்கியமான பெற்றோர் நிலையை ஏற்படுத்தும் பொருட்டு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் கௌரவ பிரதமரின் தலைமையில் மகளிர் தின கொண்டாட்டமாக நடத்தப்பட்ட அம்மாவருனே நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது.
- மக்களின் புதிய ஆக்கங்கள் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிக்கவும் அறிமுகப்படுத்தவும் “ஏக மகே ரட்ட” நிகழ்ச்சி இந்த ஆண்டும் ஜுன் மாதம் வரை ஒளிபரப்பப்பட்டது.
- “வாரி சௌபாக்கியா - நீர்ப்பாசன செழிப்பு” நிகழ்ச்சி 2021.02.05 ஆம் திகதி அனுராதபுரத்தில் இருந்து நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.
- “சுரகிமு கங்கா” - அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் பங்கேற்புடன் கதிர்காமத்தில் நடைபெற்ற வைபவம் 2021.03.22 ஆம் திகதி நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.
- 2021.04.20 ஆம் திகதி “போர்ட் சிட்டியின் உண்மைக் கதை” என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சி நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.
- ருவன்புர(இரத்தினபுரி) அதிவேக நெடுஞ்சாலையின் ஆரம்ப விழா 2021.05.07 ஆம் திகதி இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து அலரிமாளிகையில் இருந்து நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.
- “உருமய“ எனும் நவீன விவசாயப் புரட்சி குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சித் தொடர் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது.
- சௌபாக்கியே மங்பெத் - புதிய களனி பாலம் முதல் அத்துருகிரிய வரை நிர்மாணிக்கப்படும் தூண்கள் மீதான அதிவேக நெடுஞ்சாலை மற்றும் மேம்பாலத்திற்கான நிர்மாணப் பணிகளின் ஆரம்ப விழா - 2021.06.07 ஆம் திகதி அலரிமாளிகையில் இருந்து நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது.
- “கிராமத்துடன் உரையாடல்” நிகழ்ச்சி 2021.03.07 மற்றும் 2021.06.12 ஆம் திகதிகளில் ஒளிபரப்பப்பட்டது.
- சௌபாக்யா முன்பள்ளி மற்றும் குரு அபிமானி ஆரம்ப விழா 2021.06.17 ஆம் திகதி நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.
- சுபீட்சத்தின் உற்பத்திக் கிராமம் - ஆரம்ப விழா 2021.07.01 ஆம் திகதி நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.
- சுபீட்சத்தின் பாதை புரட்சி - 2021.07.02 ஆம் திகதி நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.
- ஜனாதிபதியின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட “தொரின் தொரட்ட கப்ருக்க” நிகழ்ச்சியின் தொடக்க விழா 2021.07.10 ஆம் திகதி நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.
- இரசாயன உரங்கள் பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சி “சிபகமு மவ்பச – தாய் மண்ணை முத்தமிடுவோம்“ என்ற தலைப்பில் 2021.07.17 ஆம் திகதி ஒளிபரப்பப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் 76வது மாநாட்டில் ஜனாதிபதி ஆற்றிய உரை ஒளிபரப்பப்பட்டது.
- யாழ்ப்பாணம் - நயினாதீவு நீர் சுத்திகரிப்பு கருத்திட்டத்தை மக்களிடம் கையளித்தல் பற்றிய விழா 2021.10.06 ஆம் திகதி அலரிமாளிகையில் இருந்து நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.
- சுபீட்சத்தின் பாதை புரட்சி - 1500 வீதிகளுக்கான திறப்பு விழா 2021.11.06 ஆம் திகதி மாத்தறையில் இருந்து நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.
- 2021.11.20 ஆம் திகதி “சவால்களுக்கு மத்தியில் சுபீட்சத்தின் ஈராண்டுகள்” நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது.
- களனி கோல்ட் கேட் - இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பங்களிப்புடன் அதிவேக நெடுஞ்சாலை திறப்பு மற்றும் புதிய களனி பாலம் திறப்பு நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது.

- சுபீட்சத்தின் முக்கிய அறிகுறிகள் - கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசாங்கத்தின் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் குறித்த நிகழ்ச்சி 2021.12.04 ஆம் திகதி ஒளிபரப்பப்பட்டது.
- பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட “யுகயக்க நிமவும்” கண்காட்சி Kandy City Centre இல் 2021 டிசம்பர் 17 முதல் 19 வரை நடத்தப்பட்டது. இதற்காக நேரடி தர அறிக்கைகள் மற்றும் 02 கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

**சமூக உபசரணை நிகழ்ச்சிகள்**

- கொரோனா நிலை காரணமாக ஏற்பட்ட தொற்றுநோயிலிருந்து மீட்புப் பெற இலங்கை மக்கள் மட்டுமின்றி உலக மக்களின் நலனுக்காக ஆசி வேண்டி நவகமுவ ஆலயத்தில் சத்பத்தினி அம்மனுக்கு நேர்த்தியை புதுப்பிக்கும் பூஜை 2021.08.28 ஆம் திகதி நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டது.
- 2021.05.08 மாலை 5.30 முதல் மாலை 6.45 மணி வரை நாட்டிற்கு ஆசி வேண்டி உலகளாவிய ஆசீர்வாதப் பூஜை கொழும்பு கங்காராம விகாரையில் இருந்து நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.
- கொரோனா ஆபத்து குறித்த மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகள் அடங்கிய குறுகிய மற்றும் நீண்ட நிகழ்ச்சிகள் மற்றும் குறுஞ்செய்திகள் ஒளிபரப்பப்படுதல்.
- “வசந்தய எனவா சத்தய்” என்ற பெயரில் கொவிட்-19, நிலைமை குறித்த இரண்டு பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன.
- அரசியல் / பொருளாதார / சமூக / மத அம்சங்களை விவாதிக்கும் சிவ்மங்சல நிகழ்ச்சி வரிசையில் கிடைக்கும் நேரத்திற்கு ஏற்ப 20 நிமிட மற்றும் 15 நிமிட நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டது.
- 2021.07.03 ஆம் திகதி நிறுவன வளாகத்தில் “மனுசத்கமின் பிரி லே பிந்தக் - மனித நேயத்தால் நிறைந்த ஒரு துளி இரத்தம்” என்ற தலைப்பில ITN இரத்ததான நிகழ்ச்சி நடைபெற்றது. கொவிட் அச்சுறுத்தல் காணப்பட்ட போதிலும் ஏராளமானோர் இதில் கலந்து கொண்டனர்.

அதன்படி, 2021 ஆம் ஆண்டில் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு சார்பாக நிகழ்ச்சிப் பிரிவு பெரும் பங்காற்றியுள்ளது.



## ● பொறியியல் பிரிவு

நிகழ்ச்சித் தயாரிப்பின் தரத்தினை மேம்படுத்துவதற்காக கலையக வசதிகளை மேம்படுத்துதல், தெளிவான காட்சிகளை மக்களுக்கு வழங்குவதற்காக பிரதான கட்டுப்பாட்டு அறைகள், ஒளிபரப்பு வசதிகள் மற்றும் அதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை முன்னேற்றுதல் மற்றும் தொழில்நுட்பத்துடன் புதுப்பிக்கப்படும் தகவல் தொழில்நுட்ப வசதிகள் மேம்படுத்தப்படுவதனை இலக்காகக் கொண்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் பொறியியல் பிரிவுக்கான பணிகளாகும்.

அதன்படி எதிர்காலத்தில் நடைமுறைபடுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள டிஜிட்டல் ஒளிபரப்பு முறையியலுக்காக தற்போது பயன்படுத்தப்படுகின்ற அனலாக் தொழில்நுட்பத்தின் உட்கட்டமைப்பு வசதிகள், அதாவது வலையமைப்பு முறைமைகள் (Broadcast Local Area Network), கலையக உபகரணங்கள் மற்றும் வசதிகள், பிரதான கட்டுப்பாட்டு அறை மற்றும் இணைந்த வசதிகளை மேற்கொண்டும் பயன்படுத்த முடியாது என்பதால் இந்த உட்கட்டமைப்பு வசதிகளை நவீன தொழில்நுட்பத்துக்கும் டிஜிட்டல் மயமாக்கத்திற்கும் தயார் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. டிஜிட்டல் தொழில்நுட்ப ஒளிபரப்புக்காக தயாரிக்கப்படுகின்ற நிகழ்ச்சிகள் டிஜிட்டல் ஒலி ஒளி சமிக்கைகளாக(Digital Video /Audio Signal) உயர்ந்த தரத்திலும் தெளிவான காட்சிகளுடன்கூடியதுமாக இருக்க வேண்டுமென்பதோடு அதற்கான பிரதான கட்டுப்பாட்டு அறை மற்றும் கலையகப் பிரிவுகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் விதிக்கப்பட்ட பயணத் தடைகள் காரணமாக பெரும்பாலான உற்பத்திக் கம்பெனிகளும் உள்நாட்டு முகவர் நிறுவனங்களும் அவர்களது கடைமை நடவடிக்கைகளை வரையறுத்தல், பொதுத் திறைசேரியிலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்வதிலான தாமதம், நாணயக் கடிதங்களை விநியோகிக்கப்பதற்காக நிதி அமைச்சின் இறக்குமதிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளும் செயன்முறை காரணமாக திட்டமிடப்பட்டிருந்த வகையில் பல கருத்திட்டங்களை 2021 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட வகையில் நடைமுறைப்படுத்த முடியவில்லை. ஆயினும், அதனுடன் சம்பந்தப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்பட்டதோடு அந்த நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

வசந்தம் தொலைக்காட்சி அலைவரிசையை இந்த நாட்டில் தமிழ் மொழி பேசுகின்ற இலங்கை மக்களுக்கு தெளிவான காட்சிகளைப் பார்வையிடுவதற்கும் உள்நாட்டு தமிழ் நிகழ்ச்சிகளை தயாரித்து ஒளிபரப்புவதற்கும் இயன்றவகையில் மேம்படுத்துவது மற்றும் துலாவுகை வலயத்தை விரிவாக்குவது 2018 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவாகும். அதன்படி ஆரம்பிக்கப்பட்ட இருதரப்பு கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை 314 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட நிதி கிடைக்காதமையின் காரணமாக கருத்திட்ட காலப்பகுதியை 03 வருடங்கள் வரை நீடிப்பதற்கு நேரிட்டது. 2020 ஆம் ஆண்டில் 40.037 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதோடு அனலாக் தொழில் நுட்பத்தின்கீழ் ஒளிபரப்புகை நிலையங்களை முன்னேற்றுவதற்காக மூலதன நிதி பெற்றுக்கொள்வதற்கு இதன் மூலம் முன்மொழியப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டு இந்த நாட்டில் தொலைக்காட்சி டிஜிட்டல் தொழில்நுட்ப கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து டிஜிட்டல் மயமாக்கம் தொடர்பாக சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பும் கவனம் செலுத்தி உள்ளது. எனவே, 2022 ஆண்டுக்காக இத்தொகையை பொதுத் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டத்திற்கான மொத்த செலவினமாக 73.337 மில்லியன் ரூபா அமைந்திருந்தது.

## ● ITN டிஜிட்டல் பிரிவு

உலகத்தில் ஊடகத்துறையில் ஏற்படுகின்ற புதிய போக்குகளை இனங்கண்டு சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு போட்டித்தன்மையுடன் புதிய ஊடகங்களை (New Media) பயன்படுத்த ஆரம்பித்துள்ளதோடு அதன்படி பின்வரும் நோக்கங்களை அடைந்துகொள்ள எதிர்பார்க்கின்றது.

(i) இணையத்தளங்கள் (Web Sites), சமூக ஊடக வலையமைப்புகள் (Social Media), தொலைபேசி குறுஞ்செய்திகள் மற்றும் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி ஊடாக சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்புக்கு உரித்தான அனைத்து வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளின் மீது மக்களின் ஈர்ப்பினை பெற்றுக் கொள்வதன் மூலம் சந்தைப் பெறுமதி மற்றும் வருமானத்தை மேற்கொண்டும் அதிகரித்துக்கொள்ளல்.

(ii) சமூக ஊடக வலையமைப்புகள் மற்றும் புதிய ஊடகங்களை வினியோகிக்கும் மேடைகள்(Over The Top Platforms) என்பவற்றைப் பயன்படுத்தி ஒலிஒளி படைப்புகள், அனிமேஷன் படைப்புகள், கிராபிக் படைப்புகள் மற்றும் ஆவண படைப்புகளுக்கான பொறுப்பு வாய்ந்த அரச ஊடகமாக புதிய ஊடகங்களைப் பயன்படுத்தி புதிய வர்த்தக வாய்ப்புகளை உருவாக்குதல்.

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்புக்கு உரித்தான அனைத்து வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்காகவும் செய்திகள் மற்றும் விசேட நிகழ்ச்சிகள் (Youth With Talent) போன்றவற்றுக்காகவும் உருவாக்கப்பட்டுள்ள இணையத்தளங்கள், Youtube Channel, Facebook Page மற்றும் ஏனைய சமூக ஊடகங்களைக் கொண்டமைந்த சேர்மம் ITN Digital ஆக இயங்கி வருகின்றது. இதன் மூலம் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பில் தயாரிக்கப்படுகின்ற ஒலி ஒளி நிகழ்ச்சிகள், அனிமேஷன் படைப்புகள் ஊடகங்களின் வாயிலாக அஞ்சல்செய்யப்படுகின்றன. இதற்காக இணையத்தளங்கள், facebook மற்றும் Youtube ஆகிய புதிய ஊடகங்கள் காலத்துக்கு ஏற்ப புதுப்பிக்கப்பட்டதோடு உலகின் எந்தவொரு இடத்திலிருந்தும் கையடக்கத் தொலைபேசி மூலம் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்புக்கு உரித்தான அனைத்து வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளை நேரடியாக பார்வையிடக் கூடியவகையில் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி செயலி(App) உருவாக்கப்பட்டுள்ளது. அத்தோடு இறுதி 06 மணித்தியாலங்களில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட நிகழ்ச்சிகளை மீண்டும் பார்வையிடுவதற்கான வசதியுடன்கூடியதாக தற்போது இலங்கையில் தொலைக்காட்சி அலைவரியொன்று கொண்டுள்ள ஒரே செயலி (App) இதுவாகும்.

Youtube நிறுவனத்தின் Gold Play Button, ITN Sri Lanka Youtube அலைவரிசை பெற்றுக் கொண்டுள்ளதோடு ITN Digital ஊடாக சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்புக்கு உரித்தான அனைத்து வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளின் நிகழ்ச்சிகளை புதிய ஊடகங்களில் ஊக்குவித்து அதன் மூலமாக மக்களின் ஈர்ப்பு பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

ITN Digital இன் கீழுள்ள இணையத்தளங்கள், facebook மற்றும் Youtube வாயிலாக நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி மக்களின் பதிற் செயற்பாடுகளின் பிரகாரம் காலத்துக்கு ஏற்ப தயாரிக்கப்படுகின்ற விலை அட்டையொன்றின் (Rate Card) மூலம் ITN Digital சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது சந்தைப்படுத்தல் பிரிவினால் facebook மற்றும் Youtube நிகழ்ச்சிகளுக்காக வர்த்தக விளம்பரங்களை பெற்றுக்கொள்வதன் மூலமும் வருமானம் அதிகரித்துக் கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், Youtube மூலம் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளுக்காக மக்களின் கேள்வியின் மீது Google நிறுவனத்திடமிருந்து கிடைக்கின்ற வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக புதிய வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டளவில் ITN YouTube அலைவரிசையின் மொத்த ஆதரவாளர்களின் எண்ணிக்கை 1,000,000 வரை வளர்ச்சியடையச் செய்து ஆதரவாளர்கள் 334,000 பேர் இணைந்துள்ளதோடு 720.3 மில்லியன் மொத்த ஆதரவாளர் பார்வையிடல்களையும் 118.9 மில்லியன் ரூபா மொத்த வருமானத்தையும் காண்பித்து 2021 ஆம் ஆண்டில் 48.9 மில்லியன் ரூபா ஈட்டியுள்ளது. மேலும் Youtube நிறுவனத்தின் Gold Play Button ஐ பெற்றுக்கொள்ள முடிந்தது.

இதற்கு மேலதிகமாக, வசந்தம் தொலைக்காட்சி, லக்ஹண்ட, Youtube அலைவரிசைகள் வருமானம் ஈட்டுவதை ஆரம்பித்துள்ளதோடு நிறுவனத்தின் Facebook அலைவரிசைகளும் பாரியளவு ஆதரவாளர்களைக் கவர்ந்துள்ளன.

மேற்படி ITN Digital இன் செயற்பாட்டுக்கு மேலதிகமாக சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்புக்கு உரித்தான அனைத்து நிகழ்ச்சிகள் மற்றும் படைப்புகள் (Content) என்பவற்றுக்கான முழு உரிமையையும் சுயாதீன தொலைக்காட்சியின் வசம் வைத்துக்கொண்டு காணப்படுகின்ற புதிய ஊடக வினியோக மேடைகள் (OTT Platforms), செய்மதி (Satellite) ஒளிப்பரப்புகள், வயர் மூலமான ஒளிபரப்புகள் (PEO TV, Cable TV), இணையத்தள நேரடி ஒளிபரப்புகள் (Live Streaming), மற்றும் கோரிக்கையின் அடிப்படையில் பதிவிறக்கம் செய்யக்கூடிய (On Demand) முறைமைகள் என்பவற்றுக்காக மேலே காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் மற்றும் படைப்புகள் (Content) என்பவற்றை வழங்கி வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி மேற்படி வசதிகளை வழங்கும் நிறுவனங்களுடன் நிறுவனம் கொண்டுள்ள Content களை வணிக அடிப்படையில் வினியோகம் செய்வதன் மூலமும் நிறுவனத்திற்கு மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும் என்பதால் அதுதொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

**இலக்குகள்**

- 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ITN Sri Lanka Youtube ஆதரவாளர்களின் மொத்த எண்ணிக்கையை 1.5 மில்லியன் வரை அதிகரித்துக் கொள்ளல் மற்றும் அதன்படி வருமானத்தை மேலும் அதிகரித்துக் கொள்ளல்.
- சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்புடன் இணைந்துள்ள ஏனைய Youtube Channel மற்றும் Facebook என்பவற்றை வளர்முக நிலைக்குக் கொண்டு வருதல் மற்றும் வருமானம் ஈட்டுதல்
- Content ID வசதியை பெற்றுக் கொள்ளல், பல் அலைவரிசை வலையமைப்புகளுடன் (Multi Channel Network) இணைதல் அல்லது அதன் கூட்டினைப் பெற்றுக்கொள்ளல், அதன்மூலம் ஆதரவாளர்களையும் வருமானத்தையும் அதிகரித்துக்கொள்ளல்.
- புதிய ஊடக வினியோக மேடைகளான OTT மற்றும் VOD போன்ற முறைகளுடன் இசைவாக்கம் அடைந்து வருமானத்தையும் ஆதரவாளர்களையும் அதிகரித்துக் கொள்ளும் புதிய உபாய மார்க்கங்களை நாடுதல்.

**YouTube Analytics - ITN Sri Lanka**

| Category - YouTube | 2020 | 2021 |
|---|---|---|
| Total Views | 276.1 M | 255.6M |
| New Subscribers | 403.9 K | 334 K |
| Total Subscribers | 650K | 1000K |
| Estimated Revenue Each Year | Rs 48.9 M | Rs 48.9 M |
| Total Revenue cumulative | Rs 71.2 M | Rs 118.9 M |

**YouTube Analytics - Lakhanda**

| Category - YouTube | 2020 | 2021 |
|---|---|---|
| Total Views | 1.2M | 2.2M |
| New Subscribers | 9.1K | 20.9K |
| Total Subscribers | 15.9K | 36.8K |
| Estimated Revenue Each Year | Rs 60,981.00 | Rs 291,363.00 |
| Total Revenue cumulative | Rs 127,056.00 | Rs 418,420.00 |

**YouTube Analytics – Vasantham TV**

| Category - YouTube | 2020 | 2021 |
|---|---|---|
| Total Views | 895.7K | 622.4K |
| New Subscribers | 18.2K | 9.4K |
| Total Subscribers | 35.1K | 44.5K |
| Estimated Revenue Each Year | Rs 47,401.00 | Rs 37,841.00 |
| Total Revenue cumulative | Rs 65,864.00 | Rs 103,705.00 |

**YouTube Analytics – ITN News**

| Category - YouTube | 2020 | 2021 |
|---|---|---|
| Total Views | 1.9M | 987.5K |
| New Subscribers | 25.3K | 10.9K |
| Total Subscribers | 41.5K | 52.5K |
| Estimated Revenue Each Year | Rs 148,875.00 | Rs 162,110.00 |
| Total Revenue cumulative | Rs 215,595.00 | Rs 377,705.00 |

**FaceBook Analytics - ITN Sri Lanka**

| Category - Face Book | 2020 | 2021 |
|---|---|---|
| Total Likes cumulative | 372,380 | - |
| Total followers cumulative | 288,129 | 565,705 |
| Page Reach | 49.1M | 118.8M |
| Engagement | 14.3M | 28.2M |
| Total Revenue cumulative | Rs 215,595.00 | Rs 377,705.00 |

**FaceBook Analytics - Lakhanda**

| Category - Face Book | 2020 | 2021 |
|---|---|---|
| Total followers cumulative | 30,000 | 119,633 |
| Page Reach | 5.1M | 5.2M |
| Engagement | 2.5M | 4.1M |

**FaceBook Analytics – ITN Srilanka News**

| Category - Face Book | 2020 | 2021 |
|---|---|---|
| Total followers cumulative | 41000 | 164,377 |
| Page Reach | 6.7M | 6.5M |
| Engagement | 10.4M | 9.5M |

**FaceBook Analytics – Vasantham TV**

| Category - Face Book | 2020 | 2021 |
|---|---|---|
| Total followers cumulative | - | 337,774 |
| Page Reach | 5.4M | 7.6M |
| Engagement | 4.0M | 3.0M |

**FaceBook Analytics – Vasantham FM**

| Category - Face Book | 2020 | 2021 |
|---|---|---|
| Total followers cumulative | - | 432,564 |
| Page Reach | 65.4M | 83.5M |
| Engagement | 22.6M | 39.5M |

# ● செய்தி மற்றும் நடப்பு விவகாரங்கள

கொரோனா தொற்றுநோய் தீவிரமாக பரவியிருந்த காலப்பகுதியில் ஆரம்பமான 2021 ஆம் ஆண்டு செய்திகள் மற்றும் நடப்பு விவகாரங்கள் பற்றிய பிரிவுக்கு பெரும் சவாலுடன்கூடிய வருடமொன்றின் ஆரம்பமாக அமைந்தது. செய்திகள் மற்றும் நடப்பு விவகாரங்கள் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 02 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு தினசரி முறை மாற்றுப்பணி அடிப்படையில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையினர் மட்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுவது சவால்மிக்க செயற்பாடாக அமைந்திருந்தது.

தினசரி வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையினரை சேவைக்கு அழைத்து 10 சிங்கள செய்தி ஒளிபரப்புகளையும் 2 பிரதான தமிழ் செய்தி ஒளிபரப்புகளையும் முன்னெடுத்துச் செல்வது கடினமான பணியாக அமைந்த போதிலும் அச்சவாலை வெற்றிகரமாக வருட இறுதிவரை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடிந்தமையானது செய்திகள் மற்றும் நடப்பு விவகாரங்கள் பிரிவு பெற்ற வெற்றியாகும்.

அதேவேளை, போட்டித்தன்மையுடன் கூடிய ஏனைய அலைவரிசைகளுக்கு மத்தியில் இறுதி அளவீட்டுச் சுட்டிகளில் ஊசலாடிக் கொண்டிருந்த ITN செய்திகள், 3வது இடத்தைப் பிடித்து, ஆண்டு முழுவதும் 3வது மற்றும் 4வது இடத்தில் இருக்க முடிந்தமையும் தனிச்சிறப்பானது.

செய்திகளின் திட்பநுட்பத்தை உறுதி செய்து, நம்பகமான செய்திகளை பார்வையாளர்களுக்கு வழங்க நடவடிக்கையெடுத்தல் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களை உரிய முறையில் அவர்களுக்கு வழங்கி போட்டித் தன்மையுடன்கூடிய ஏனைய அலைவரிசைகளுக்கு நிகராக, அரசாங்க அலைவரிசையாக அமைந்த போதிலும், தகவல்களை வழங்குவதற்கும் நிதமும் நடவடிக்கை எடுத்தது.

2020 ஐ விட அதிக வருவாயை ஈட்டித்தர செய்திகள் மற்றும் நடப்பு விவகாரங்கள் பிரிவிற்கு முடிந்தது.

| **செய்தி ஒளிபரப்பு** | **வருமானம் (ரூ,)** |
|---|---|
| வார நாட்களில் மதியம் | 25,961,974.88 |
| இரவு 6.30 மணி பிரதான செய்தி ஒளிபரப்பு | 127,516,894.36 |
| இரவு 10.00 மணி பிரதான செய்தி ஒளிபரப்பு | 24,932,979.17 |
| வார இறுதியில் பிரதான செய்தி ஒளிபரப்புகள் | 32,275,852.33 |
| மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் செய்தி ஒளிபரப்புகள் | 30,585,233.44 |
| தினசரி நன்பகல் 12.00 மணி தமிழ் பிரதான செய்திகள் | 26,392,991.94 |
| தினசரி இரவு 08.00 மணி தமிழ் பிரதான செய்திகள் | 4,106,916.62 |
| மொத்த வருமானம் | **276,994,167.74** |

இதற்கு மேலதிகமாக, நடப்பு விவகாரங்களில் இருந்து பின்வருமாறு வருவாய் ஈட்ட முடிந்தது.

| **நிகழ்சி** | **வருமானம் (ரூ,)** |
|---|---|
| பத்தரமேந்துவ | 13,863,112.25 |
| ஹத்வெனி பெய | 1,888,164.00 |
| தீரனய | 693,170.00 |
| துலாவ | 137,961.00 |
| மொத்த வருமானம் | **16,582,407.25** |

பிராந்திய செய்தியாளர்களின் செய்திகளுக்கு உயர்தரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காகவும், சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பில் தங்களை அர்ப்பணித்துக்கொள்ளும் திறன் கொண்ட செய்தியாளர்களுக்கு தனித்துவமான வாய்ப்புகளை வழங்குவதற்கும் விசேட வேலைத்திட்டத்தை உருவாக்குவதற்கும் நிருபர்களுக்கும் நிறுவனத்திற்கும் இடையில் புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதோடு அதன்போது சுயாதீன தொலைகாட்சி வலையமைப்புக்கு மட்டும் செய்தி அறிக்கைகளை வழங்குகின்ற செய்தியாளர்களுக்கு முக்கியத்தும் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கொரோனா தொற்றுநோய்க்கு மத்தியில் நிறுவனத்தின் வருவாய் நிலையை கருத்திற்கொண்டு காணப்படுகின்ற இயந்திர சாதனங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி செய்திகள் மற்றும் நடப்பு விவகாரங்களுக்கான தயாரிப்புகளை மேற்கொள்ளவதற்கும் எங்கள் ஊழியர்கள் பொறுப்புப் பார்த்துக்கொண்டனர்.

**புதிய நிகழ்ச்சிகளும் அவற்றின் முன்னேற்றமும்**

நடப்பு விவகாரங்கள் பிரிவினால் வழங்கப்பட்ட காலை நிகழ்ச்சிகள் 2020 ஆம் ஆண்டுக்கு ஒருங்கமைவாக தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு 2021 ஆம் ஆண்டில் அந்த நிகழ்ச்சிகளுக்கு பார்வையாளர்களின் வரவேற்பை அதிகரித்துக்கொள்ளவும் முடிந்தது. அத்தோடு நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்கள் என்பனவும் இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்க முன்வைக்கும் கோரிக்கையும் அதிகரித்தது.

பிரதான செய்தி ஒளிபரப்புகளில் பின்வரும் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டதோடு, அந்த அம்சங்களும் பார்வையாளர்களின் அதிக வரவேற்பைப் பெற்றன.

- அமதக்க நெத்தி மதக்க (மறக்காத நினைவுகள்)
- பிளாட்போம்
- சரு பொலவக் கரா (செழுமையான நிலைத்தை நோக்கி)
- எக்வ நெகிட்டிமு (ஒன்றாக எழுவோம்)
- யன்ன ஹித்தென தெனக் (செல்லத் தோனும் ஓர் இடம்)

அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக செய்தி ஒளிபரப்பு மற்றும் நடப்பு நிகழ்ச்சிகளில் புதிய தளம் அமைக்கப்பட்டிருந்ததோடு அரசாங்கத்தின் குறைபாடுகளை நேரடியாகச் சுட்டிக்காட்டவும் முடிந்தது.

எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கும் வாய்ப்பளித்து ஆளும்கட்சி, எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை ஒரே மேடைக்குக் கொண்டுவருவதற்காக வியாழக்கிழமை இரவு 10.25 மணிக்கு துலாவ நிகழ்ச்சியை ஆரம்பிக்கக் கிடைத்தமையானது எமது பிரிவுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். அதன்போது இதுவரைகாலமும் இல்லாத ஒரு அரசியல் தளத்தை உருவாக்க சுயாதீன தொலைக்காட்சியால் முடிந்தது. இரு கட்சிகளையும் அதில் பங்கேற்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு தற்போது வெற்றிகரமான பதிற் செயற்பாடுகள் கிடைத்து வருகின்றன.

## லக்ஹண்ட வானொலி

லக்ஹண்ட செய்திகள் - உண்மையான, பாரபட்சமற்ற, நம்பகமான தன்மையுடன்

ஒருதலைப்பட்சமான அறிக்கையிடலிலிருந்து விடுபட்டு, சூடான சமகால செய்திகளை நேயர்களுக்கு துல்லியமாகவும், பக்கச்சார்பற்றதாகவும், சமநிலையாகவும் கொண்டு சேர்ப்பது லக்ஹண்ட செய்திப் பிரிவின் பிரதான செயற்பொறுப்பாகும். இவை நேயர்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் வழங்கப்படுகின்றன.

முன்னர் காணப்பட்ட ஒருதலைப்பட்சமான, சமநிலையற்ற மற்றும் சில சமயங்களில் திரிபுபடுத்தப்பட்ட செய்திகளுக்குப் பதிலாக உண்மையான, பாரபட்சமற்ற மற்றும் நம்பகமான எனும் கருப்பொருளுடன் துல்லியமான செய்தி அறிக்கையிடலுக்கு லக்ஹண்ட திரும்பியது.

- லக்ஹண்டவின் மூன்று முக்கிய செய்தி ஒலிபரப்புகள் உள்ளன. காலை 6.30 மணி, நன்பகல் 12.00 மணி, மாலை 6.30 மணி
- காலை 8.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை மணித்தியலத்துக்கு மணித்தியால 10 செய்தி அறிக்கைகள்.

லக்ஹண்ட செய்திகள் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

- போட்டி வானொலி அலைவரிசைகளைப் கற்றாராய்ந்து ஒரு குறிப்பிட்ட காலச்சட்டகத்திற்கு ஏற்ப செய்தி வெளியீடுகளை மேலும் ஒழுங்குபடுத்துதல். அதற்கேற்ப ஏனைய வானொலி அலைவரிசைகளையும் விஞ்சும் வகையில் விசேட செய்திகளை வழங்க முடிந்தது. சில சமயங்களில் ஏனைய தனியார் வானொலி நிலையங்களை விஞ்சிச் சென்று விசேட செய்திகளை வழங்க லக்ஹண்டவால் முடிந்தது.
- வாய்வழி செய்திகளுக்கு முன்னுரிமை அளித்து, கட்சி மற்றும் எதிர்க்கட்சிக் கொள்கைகளுக்கு சமநிலையான வாய்ப்பினை வழங்கி, பக்கச்சார்பற்ற செய்தி அறிக்கையை முன்வைத்தல். ஒவ்வொரு பிரதான செய்தி அறிக்கையிலும் எதிர்க்கட்சியின் செய்திகளைக் கட்டாயமாக்குதல். இதன் கீழ், எதிர்க்கட்சியினரின் ஊடகவியலாளர் சந்திப்புகள், எதிர்கட்சிகளின் ஊடக அறிவித்தல்கள் மற்றும் அவர்களின் தீர்மானங்கள் ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை லக்ஹண்ட செய்திகளின் ஊடாக வழங்க முடிந்தது.
- 25 மாவட்டங்களிலும் காணப்படுகின்ற அரசாங்கம் தொடர்பான செய்திகள், அதிகாரிகளை இணைத்துக்கொண்டு நாட்டில் இடம்பெற்றுவரும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய தகவல்கள் உள்ளடங்கிய செய்திகளை வெளியிடுதல், மாவட்ட செய்தியாளர்களிடமிருந்து அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றிய செய்திகளை ஒலிநாடாவுடன் பெற்றுக்கொண்டு ஐ ரிப்போட்டர் சிறப்பம்சத்தை அஞ்சல் செய்தல். அதன்படி, 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து வாரத்தின் ஐந்து நாட்களிலும் மதியம் 12 மணிக்கு பிரதான செய்தி ஒலிபரப்புடன் மாவட்டங்களின் அபிவிருத்திப் பணிகளை உள்ளடக்கிய ஐ ரிப்போட்டர் அம்சத்தை அஞ்சல் செய்ய முடிந்தது.
- அனைத்து அமைச்சுக்களையும் உள்ளடக்கிய வகையில் ஒரு தகவல் அதிகாரியை நியமித்து மக்களுக்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் பணிகள், சேவைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய துல்லியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல். அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் உட்பட அரச நிறுவனங்களில் இருந்து முன்னர் தவறவிட்ட செய்திகளை இதன் மூலம் பெற்றுக்கொள்ள முடிந்தது.
- அனைத்து அமைச்சுக்களையும் உள்ளடக்கிய வகையில் ஒரு தகவல் அதிகாரியை நியமித்து மக்களுக்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் பணிகள், சேவைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய துல்லியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல். அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் உட்பட அரச நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை ஆரம்பிக்க முடிந்தது.
- அரச நிறுவனங்களிலிருந்து பொதுமக்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும்போது பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கும் தடுப்பதற்குமாக சரியாக சேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான தகவல்கள் மற்றும் அறிவு என்பவற்றை வழங்குவதற்கு ஒவ்வொரு திங்கட்கிழமையும் பொது மக்கள் தினமாக செய்தி சிறப்பம்சமொன்று அஞ்சல் செய்யப்பட்டது.
- நாடு முழுவதும் உள்ள இயற்கை சுற்றாடல் முறைமைகள், அழகான இடங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அந்த இடங்களைப் பாதுகாக்க பொதுமக்களை ஊக்குவிக்கவும் வாரத்தின் ஒவ்வொரு நாளும் “மூச்சு“ என்ற பெயரில் சுற்றுச்சூழல் சிறப்பு நிகழ்ச்சி அஞ்சல் செய்யப்பட்டது.
- அரசாங்கத்தின் பிரதான அபிவிருத்தித் திட்டங்களை தொடராய்வு செய்யும் எசதிசி சுபீட்சத்தின் பாதை சிறப்பு நிகழ்ச்சி ஒவ்வொரு திங்கட்கிழமையும் அஞ்சல் செய்யப்பட்டது.

#### லக்ஹண்ட செய்தியின் வெற்றிகள்

1. 2021 வானொலி அரச விருது வழங்கல் விழாவில் சிறந்த செய்தி அறிவிப்பாளருக்கான அரச விருதுக்கு லக்ஹண்ட செய்திப் பிரிவு பரிந்துரைக்கப்படுதல்.
2. 2021 வானொலி அரச விருது வழங்கல் விழாவில் சிறந்த வானொலி செய்திப் பதிப்புக்கான திறன் விருதை லக்ஹண்ட செய்திப் பிரிவு பெற்றுக்கொள்ளல்.

#### 2021 ஆம் ஆண்டில் லக்ஹண்ட செய்தி வருமானம்

2021 ஜனவரி முதல் 2021 நவம்பர் வரை ரூ. 2.2 மில்லியனுக்கும் அதிகமான வருமானம் கிடைத்தது.

## வசந்தம் FM

வசந்தம் FM வானொலி 2008 ஏப்ரல் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் வசந்தம் FM செய்தி ஒளிபரப்புகளையும் படிப்படியாக முன்னேற்ற நடவடிக்கை மேற்கொண்டது.

உண்மையான மற்றும் பக்கச்சார்பற்ற சூடான சமகால செய்திகளையும் விசேட செய்திகளையும் நேயர்களிடம் சீரான முறையில் கொண்டு சேர்ப்பதே வசந்தம் FM செய்திப் பிரிவின் முக்கியப் பணியாகும். நாளொன்றுக்கு 03 பிரதான செய்தித் தொகுப்புகளையும் மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் 10 செய்தித் தொகுப்புகளையும் ஒளிபரப்பியதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தியது.

அத்தோடு போட்டியிடும் ஏனைய எட்டு தமிழ் வானொலி அலைவரிசைகளுக்கு மத்தியில், 2021 ஆம் ஆண்டிற்கான செய்தி ஒலிபரப்புகளில் அளவுச் சுட்டி இலக்கம் 2 மற்றும் 3 இல் நிலைத்திருக்க இயலுமை கிடைத்தது.

வசந்தம் FM இன் செய்திப் பிரிவு பத்து ஊழியர்களின் கூட்டுடனும் குறைந்த மனிதவளம் மற்றும் பௌதீக வளத்துடனும் இயங்கி வருகின்றது.

#### வசந்தம் FM செய்திகள் அடைந்துள்ள வெற்றிகள்

வசந்தம் FM செய்திப் பிரிவு 2021 வானொலி அரச விருது வழங்கல் விழாவில் பின்வரும் விருதுகளையும் பரிந்துரைகளையும் பெற்றன.

1. சிறந்த செய்தி பதிப்பாசிரியருக்கான அரச விருது
2. சிறந்த செய்தி ஒளிபரப்பாளருக்கான அரச விருது
3. சிறந்த செய்தி அறிவிப்பாளருக்கான அரச விருது (பரிந்துரைக்கப்பட்டது)

# ● லக்ஹண்ட வானொலி

“தேசிய மரபுரிமையின் அலைவரிசைக் குறியீடு” எனும் தொனிப் பொருளின் கீழ் 2021 ஆம் ஆண்டு லக்ஹண்ட நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. கோவிட் பெருந்தொற்றின் மத்தியில் பயனத் தடைகளும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் அனுசரணை மூலமான வருவாய்கள் வீழ்ச்சியடைந்த போதிலும் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15 மில்லியன் ரூபாவிலான வருமான அதிகரிப்பு 2021 ஆம் ஆண்டு பதிவாகியது. வெளி மேம்பாட்டு மற்றும் வெளி அனுசரணை நிகழ்ச்சிகள் கோவிட் நிலைமையின் மத்தியில் ஒலிபரப்பப்படாத பின்னணியில் இவ்வாறு வருவாயை அதிகரித்துக்கொள்ள முடிந்தமையானது விசேடமாக குறிப்பிட வேண்டிய ஒரு முன்னேற்றமாகும்.

இதற்காக சந்தைப்படுத்தல் பிரிவின் பங்களிப்பு மட்டுமன்றி நிகழ்சிப் பிரிவின் கீழ் தர்ம போதனைகளுக்கான அனுசரணை மூலம் ஈட்டப்பட்ட வருமானமும் உதவியது. முக்கியமான வான் காலமாகிய பி.ப 16.00 – 18.00 காலப் பகுதியில் தொழில்நுட்ப அடிப்படையில் நிகழ்ச்சிகளை வழங்குவதற்காக ஒரு வருட ஒப்பந்த காலத்திற்கு வெளி பெண் கலைஞர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் அனுசரணையாளர்களை இணைப்பாக்கம் செய்வதற்காக ஊழியர்களை ஊக்குவித்தல் மூலம் வருவாய் நிலையை மேம்படுத்திக்கொள்ள முடிந்தது.

2021 ஆம் ஆண்டு பல புதிய நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்த முடிந்தது. பாடசாலை மாணவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வாய்ப்பினை வழங்கி “லக்ஹண்ட தக்ஷிலாவ” கல்வி நிகழ்ச்சியானது தினசரி காலை 05.00 மணி முதல் 06.00 மணி வரை 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து ஒலிபரப்பப்பட்டது.

கோவிட் தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் சுகாதாரப் பாதுகாப்பு, பல்வேறு தொழில்களின் மீது ஏற்படும் தாக்கம் மற்றும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாட தினசரி காலையில் வெடில்ல எனும் கருத்தாடல் நிகழ்ச்சியின் மூலம் நேரம் ஒதுக்கப்பட்டதோடு மக்களை விழிப்பூட்டுவதற்காக ஏனைய வான் காலங்களிலும் குறுஞ்செய்திகளைப் பிரச்சாரம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வார நாட்களில் பி.ப. 16.00 - 18.00 வான் காலத்தில், சிறிய அளவிலான உள்நாட்டு தயாரிப்பாளர்களுக்கு விசேட பக்கேஜ் ஒன்றை அறிமுகப்படுத்தி விற்பனை வருவாயை அதிகரித்துக்கொள்ள முடிந்தது.

உள்ளத்தை அமைதிபடுத்தும் புத்தரின் தர்ம போதனைகளுக்கான அனுசரணை தம்ம பிரசங்கத் தொடரை 21.00 - 22.00 மணி வரையிலான ஒலிபரப்பு நேரத்தில் மீண்டும் ஒலிபரப்புவதன் மூலம் வருவாயை ஈட்டிக்கொள்ள முடிந்தது.

லக்ஹண்ட வானொலியின் 25வது ஆண்டு விழா இந்த ஆண்டு நவம்பர் 15ம் திகதி கொண்டாடப்பட்டதோடு அதன் நிமித்தம் Colour of Love என்ற பெயரில் இசைக் கச்சேரியொன்றை சுயாதீன தொலைக்காட்சியில் ஔிபரப்பி அதனை லக்ஹண்ட YouTube மற்றும் Face Book மூலம் பிரச்சாரம் செய்ததன் ஊடாகவும் வருவாய் ஈட்டிக்கொள்ள முடிந்தது. 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் லக்ஹண்ட YouTube அலைவரிசை கொண்டிருந்த subscribers களின் எண்ணிக்கை சுமார் 15,000 ஆக இருந்ததோடு 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அந்த எண்ணிக்கையை இரட்டிப்பாக்கிக்கொள்ள முடிந்தது.

எதிர்காலத்தில் YouTube உட்பட சமூக ஊடகங்களை லக்ஹண்டவிற்கு வருமானம் ஈட்டுவதில் ஈடுபடுத்துவதற்கான அடித்தளத்தை இட்டுக்கொள்ள இந்த ஆண்டு முடிந்தது.

வெளியுலக மேம்பாட்டுச் செயற்பாடுகளை நடைமுறையில் முன்னெடுக்க முடியாத சூழ்நிலையில் ITN மனிதாபிமான சேவையுடன் இணைந்து பல்வேறு அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்போடு கோவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் லக்ஹண்டவினால் முடிந்தது.

லக்ஹண்ட வானொலியின் 25வது ஆண்டு நிறைவை ஒட்டி, பாடசாலை மாணவர்களை கோவிட் நோயிலிருந்து பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், குறுஞ்செய்திகள் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கத்துடன் இணைந்து வழங்கப்பட்டன.











## ● வசந்தம் TV

வசந்தம் தொலைக்காட்சி தனக்கென தனித்துவமான ஓர் இடத்துடன், நாள் தோறும் மக்கள் மனம் கவரும் அலைவரிசையாக மிளிரும் தமிழ் தேசிய தொலைக்காட்சி ஆகும். அந்த வகையில், எமது படைப்புகள் காலத்தோடு ஒத்தவையாகவும், மக்களின் தேவைகளை உணர்ந்து சேவையாற்றும் தன்மை கொண்டவையாகவும் விளங்குகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக 2021ஆம் ஆண்டு விளங்குகின்றது.

அதற்கமைய 2021ஆம் ஆண்டானது, நிகழ்ச்சி வடிவமைப்பிலும், திட்டமிடலிலும் பல மாற்றங்களை உள்வாங்கி பயணித்த ஆண்டாகும். புதிய நிகழ்ச்சிகளுக்கான திட்ட வரைபுகள் சமர்பிக்கப்பட்டு சில நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம் மற்றும் கருப்பொருள் சார்ந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு அலைவரிசை பயனித்தது. எம் - ஸ்ரூடியோ எனும நிகழ்ச்சிக்குப் பதிலாக ஸ்டார் வோர் எனும் நிகழ்ச்சி புதுப்போலிவுடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட 7ஆம் நாள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அதுபோல் ஐ எனும் அறிவுசார் நிகழ்ச்சியும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் கொவிட் 19 தொற்று காரணமாக நாடு முழுவதுமாக முடக்கநிலையை சந்தித்ததைத் தொடர்ந்து எமக்கு வழமையான நிகழ்ச்சிகளை படைக்க முடியாத நிலை ஏற்பட்ட அதேவேளை, பொறுப்பு வாய்ந்த தேசிய தொலைக்காட்சியாக குறித்த நெருக்கடி காலத்தில் மக்களுக்கான சேவைகளை வழங்க வேண்டிய தலையாய கடமையும் இருந்தது. ஆகவே, நிர்வாக ரீதியில் எடுக்கப்பட்ட முடிவுகளுடன் இணைந்ததாக வசந்தம் தொலைக்காட்சி விஷேட நிகழச்சி நிரல் ஒன்றின் கீழ் சுமார் 3 மாதங்களுக்கும் மேலாக பயணித்தது.

அதில் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தடைப்பட்டிருந்ததை கவனத்தில் கொண்டு கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி வித்யா வசந்தம் என்ற தொலைக்காட்சி கல்வி நிகழ்ச்சியை ஒளிபரப்பினோம். அதன் படி இந்நிகழ்ச்சி வார நாட்களில் ஒளிபரப்பாகி வந்தது. இதேவேளை, கொரோனா தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் பொருட்டு 1 தொடக்கம் 2 நிமிடங்களுக்கான விழிப்புணர்வு இடைநிரப்புகளையும் தயாரித்து வழங்கினோம். முக்கியமாக, நாட்டின் அப்போதைய நிலைவரம் தொடர்பில் மக்களை தெளிவூட்டும் விஷேட நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் போன்றவற்றையும் மக்களுக்கு வழங்கினோம்.

இக்காலப்பகுதியில் எமது பல நிகழ்ச்சிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. குறிப்பாக, எங்கேயும் எப்போதும், தொடுவானம், வாங்க பழகலாம், சுற்றி வரும் பூமி, லேடீஸ் ஸ்பெஷல் என பல நிகழ்ச்சி அவ்வாறு இடைநிறுத்தப்பட்டன. இருந்த போதிலும், தலைவாசல், ஆரோக்கியம், ஹலோ வசந்தம், மியூசிக் எஸ்பிரஸ், சண்டே கபே, சுயாதீன செய்திப் பார்வைஇ ஹொலிவூட் பிட்ஸ், தூவானம், ஆடுகளம், மக்கள் சேவை, கண்மணி, கதை திரைக்கதை வசனம் இயக்கம், நம்ம ஹிட்ஸ், சிகரம் தொட்ட சினிமா, ஒஸ்கார், ரெண்டிங்கல விடுங்க, தடம், போன்ற நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகிக்கொண்டிருந்தன. இதேவேளை, சிரிமனமே, சுப்பர் சீன், தலைவாசல் நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகிய யாவரும் கேளீர் பகுதி ஆகியவற்றுடன், திரைப்பட பாடல்கள், திரைப்படங்கள் என எமது புதிய நிகழ்ச்சி நிரலை அமைத்திருந்தோம்.


இதேவேளை, இந்த நெருக்கடியான காலப்பகுதியில் கூட நாங்கள் புதிய நிகழ்ச்சிகளை வடிவமைக்கும் பணிகளிலும் கவனம் செலுத்தியிருந்தோம். அதன் மூலமாக ஸ்டார் வோர்இ 7ஆம் நாள்இ ஐ போன்ற புதிய நிகழச்சிகளை தொடங்கி ஒளிபரப்பி வந்துள்ளோம். இதனைத் தவிர இதேவேளை, நிலைமை சீரான பின்னர் நிறுத்தப்பட்ட அநேக நிகழ்ச்சிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதுடன், அவற்றிற்கு மேலதிகமாகவும் புதிய பல நிகழ்ச்சிகளையும், ஆரம்பகாலத்தில் இடைநிறுத்தப்பட்ட பல நிகழ்ச்சிகளுக்கு மீள புத்துயிர் அளித்தும், புதிதாக திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் என்ற ஜனரஞ்சக அம்சங்களுடனும், இருந்து மீண்டும் எமது பயணத்தினை ஆரம்பித்து முன்கொண்டு செல்கின்றோம்.

செய்திப் பிரிவினை பொறுத்தவரையில், மணித்தியாளச் செய்திகளை மக்களுக்கு வழங்கி வந்த நாம் இந்த கொவிட் 19 காரணமாக இடைநிறுத்தியிருந்தாலும மணித்தியாளச் செய்தியை மீண்டும் ஆரம்பித்து மக்களுக்கான செய்தி அறிக்கையிடல் பணியினையும் சிறப்பாக முன்னெடுக்கவிருக்கின்றோம்.

இதேவேளை, புதிய ஆண்டில் ஆரம்பிக்கும் வகையான பல நிகழ்ச்சிகளின் ஆரம்பிக்கட்ட பணிகளையும் தற்போது முன்னெடுக்கின்றோம். இதன் நடுவே, விஷேட தினங்கள் பண்டிகை காலங்களிற்கு ஏதுவாக புதிய திரைப்படங்களை குறைந்த விலையில் கொள்முதல் செய்ததோடு மட்டுமல்லாமல் பெரும்பாலான வெளிக்கள நிகழ்ச்சிகளையும், வெளிநபர்களின் பங்குபற்றலுடனாக நிகழ்ச்சிகளையும் தவிர்த்து 2021 ஆம் ஆண்டின் இறுதிவரை சூழ்நிலைக்கு ஏற்புடையதான ஒரு நிகழ்ச்சி நிரலுடன் பயணித்துள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது.





வசந்தம் குஆ வானொலி 2021ம் ஆண்டில் வெற்றிகரமாக நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியது.

**மஹாசிவராத்திரி**

இம்முறை மஹாசிவராத்திரி திருவிழாவினை இலங்கையில் உள்ள பிரசித்தி பெற்ற சிவத்தலங்களில் இருந்து நேரடியாக அஞ்சல் செய்ய திட்டமிட்டு இருந்தோம். ஆனால் நாட்டில் பரவிவரும் கொரோனா நோய் நிலையின் காரணமாக ஆலயங்களில் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தரும் எவரையும் ஆலயத்துக்குள் அனுமதிக்க தடை விதிக்கப்பட்டதாதல் எமது பிராந்திய செய்தியாளர்களை ஆலயங்களுக்கு அனுப்பி அங்கிருந்து தொலைபேசி மூலம் நாம் நேரடி ஒலிபரப்பினை மேற்கொண்டோம்.

**சர்வதேச பெண்கள் தினம்**

பெண்கள் தினத்தில் பெண்களை சிறப்பிக்கும் முகமாக நிகழ்ச்சிகளை நாம் ஒழுங்கு செய்ந்திருந்தோம். அன்றைய நாள் முழுவதையும் பெண்களே நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கியிருந்தார்கள். மணித்தியாலத்துக்கு ஒருதடவை இலங்கையில் சாதனை படைத்த பெண்களின் வாழ்க்கை சுகதையினை பதிவு செய்து ஒலிபரப்பினோம். இப்போது பல துறைகளில் சாதனை படைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் கருத்துக்களை மணித்தியாலத்துக்கு ஒருமுறை ஒலிபரப்பினோம்.

**வசந்தம் வானொலியின் 13வது பிறந்த நாள்**

வசந்தம் வானொலியின் 13வது பிறந்த நாள் கொண்டாட்டத்தினை முன்னிட்டு ஒரு இசை நிகழ்ச்சியினை நடத்த திட்டமிட்டு இருந்தோம். ஆனால் இந்தியாவில் இருந்து பாடகர்களை அழைத்து வருவதில் கோரோனோ நோய் நிலை ஒரு தடையாக இருந்த காரணத்தால் நாம் திட்டமிட்ட இசை நிகழ்ச்சினை நிறுத்திவிட்டோம்

**புதுவருட கொண்டாட்டம்**

நாட்டில் நிலவி வந்த கொரோன தொற்றின் காரணமாக புதுவருடத்துக்காக நடத்த திட்டமிட்ட அனைத்து நிகழ்வுகளையும் நிறுத்தி விட்டு. வானொலியில் நிகழ்ச்சிகளில் மாட்டும் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ந்திருந்தோம்

**VPL கிரிக்கெட் போட்டி**

வசந்தம் வானொலியின் பிறந்த நாளினை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட வசந்தம் பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்று போட்டி இம்முறை கிளிநொச்சி மண்ணில் இடம்பெற்றது.

நாட்டில் கொரோன பரவி இருந்த காரணத்தினால் அதிகளவான மக்களை மைதானத்துக்குள் அனுமதிக்காமல் போட்டியில் விளையாடும் வீரர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கி போட்டியினை நடத்தியிருந்தோம்

இந்த போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு 100,000 பணப் பரிசும் 2ஆம் இடம் கிடைக்கும் அணிக்கு 50,000 பணப்பரிசும் வழங்கி வைத்தோம்

**மாவீரன் சங்கிலியன் - வானொலி இசை நாடகம்**

இந்த வருடத்துக்காக வானொலி இசை நாடகமாக யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னனான சங்கிலியன் மன்னனின் வாழ்க்கை கதையினை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டது. எமது நிறுவன ஊழியர்களை மட்டுமே வைத்துக்கொண்டு இந்த முழு நாடகத்துக்கு தேவையான குரல் பதிவுகளை நாம் எடுத்திருந்த படியால் நாம் வெளியில் இருந்து குரல் கொடுக்க நபர்களை அழைக்கவில்லை. எனவே எந்த வித செலவுகளும் இல்லாமல் இந்த நாடகத்தினை உருவாக்கினோம். இந்த நாட்டம் 25 பாகம் கொண்டது எனபதும் குறிப்பிடத்தக்கது

**ரமலான் பண்டிகை**

ரமலான் பண்டிகை காலத்தில் எமது அலுவலகத்தில் பல பேருக்கு கோரோனோ நோய் தோற்று அதிகரித்திருந்த காரணத்தினால் நாம் வெளிநபர்களை அலுவலகத்துக்கு அழைக்காமல் அவர்களை நேரடியாக தொலைபேசி மூலம் தொடர்பினை மேற்கொண்டு எமது பதிவுகளை நாம் ஒலிப்பதிவு செய்து வானொலியில் ஒலிபரப்பினோம். இதற்கு நேரடியாக எந்த செலவும் ஏற்படாத காரணத்தினால் நாம் இதற்காக ஒதுக்கிய பணத்தினை எடுக்கவில்லை

**சர்வதேச சிறுவர் தினம்**

வசந்தம் தொலைக்காட்சியுடன் இணைந்து சிறுவர் தினத்தில் ஒரு சிறுவர் இல்லம் சென்று அங்கு சிறுவர்களுடன் நிகழ்வினை நடத்த நாம் திட்டமிட்டு இருந்தோம். ஆனால் நாட்டில் இடம்பெற்ற கொரோனா தொற்றின் காரணமாக இதை செய்யமுடியவில்லை. எனவே திறமைவாய்ந்த சிறுவர்களை தொலைபேசி மூலமாக இனம்கண்டு அவர்க்ளின் குரல்களை பதிவு செய்து அவற்றை சிறுவர் தினத்தன்று ஒலிபரப்பினோம்

**தீபாவளி**

தீபாவளி தினத்தில் நாம் மக்களுடன் மக்களாக இணைந்து இசை நிகழ்ச்சினை ஏற்பாடு செய்ய திட்டமிட்டோம். ஆனால் கொரோனா நிலை காரணமாக இசை நிகழ்ச்சினை நாம் வெளி இடத்தில நடத்தாமல் அலுவலகத்துக்குள் இசை நிகழ்ச்சினை நடத்தி அதை நேரடியாக ஒலிபரப்பினோம்



**நத்தார் பண்டிகை**

நத்தார் பண்டிகையினை முன்னிட்டு இம்முறை ஒரு தேவாலயத்தில் சிறப்பு திருப்பலி ஒன்றை ஒலிப்பதிவு செய்து நத்தார் தினத்தன்று நாம் அதை நேரடியாக வானொலியில் ஒலிப்பதிவு செய்ததோடு நமது சமூக வலைத்தளத்திலும் பதிவீட்டோம்

## ● நிலைபேறு தன்மை

நிறுவனத்தின் சகல பிரிவுகளுக்குமான வினைத்திறன் வாய்ந்த நிர்வாகமானது எமது ஆக்கவிளைவிற்கும் நிறுவனத்தின் நற்பெயருக்கும் மிகவும் முக்கியமானதென்பது நாம் அனைவரும் நன்கு அறிந்த விடயமாகும். அதேவேளை, தொழிலாளர்-தொழில் கொள்வோர், சமூக மற்றும் சுற்றாடல் விடயங்களுக்கான பயன்மிகு முகாமைத்துவம் எமது செயற்பாடுகளுக்கு அத்தியாவசியமான காரணியென்பதால் நிறுவனத்தின் சகல பிரிவுகளும் புரிந்துணர்வுடன் தொழிற்பட்டு வருகின்றன.

**வருடாந்த ஆட்சேர்ப்புச் சுருக்கம் 2021**

| | |
|---|---|
| பிரதி பொது முகாமையாளர் | 01 |
| தொழில்நுட்ப உதவியாளர் | 01 |

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி**

| பதவி | ITN/ LAKHANDA/ VASANTHAM TV/VASANTHAM FM |
|---|---|
| சிரேஸ்ட நிலை | 80 |
| மூன்றாம் நிலை | 150 |
| இரண்டாம் நிலை | 503 |
| முதன்மை நிலை | 190 |
| **மொத்தம்** | **923** |


**2021-12-31ம் திகதியில் ஊழியர் எண்ணிக்கை (நிரந்தர / ஒப்பந்த)**

| பதவி | ITN | LAKHANDA | VTV | VFM |
|---|---|---|---|---|
| சிரேஸ்ட நிலை | 42 | 4 | 1 | 1 |
| மூன்றாம் நிலை | 112 | 8 | 4 | 0 |
| இரண்டாம் நிலை | 301 | 42 | 14 | 18 |
| முதன்மை நிலை | 159 | 4 | 0 | 0 |
| ஏனைய சந்தைப்படுத்தல் நிறைவேற்று | 19 | 3 | 6 | 2 |
| **முழு மொத்தம்** | **740** | | | |

**2021-12-31ம் திகதியில் சேவைக்காலத்தின் பிரகாரம் ஊழியர்கள்**

| ஆண்டு | நிரந்தர | ஒப்பந்த |
|---|---|---|
| 01 குறைந்த | 15 | 64 |
| 01 - 05 | 63 | 37 |
| 05 - 10 | 174 | 11 |
| 10 - 15 | 110 | 6 |
| 15 - 20 | 76 | 7 |
| 20 - 25 | 76 | 0 |
| 25 - 30 | 68 | 0 |
| 30 க்கும் கூடுதல் | 33 | 0 |
| **மொத்தம்** | **615** | **125** |

**2021-12-31ம் திகதியில் சேவைப் பகுப்பாய்வு (நிரந்தர / ஒப்பந்த)**



**2021-12-31ம் திகதியில் வயதெல்லையின் பிரகாரம் ஊழியர்கள் (நிரந்தர / ஒப்பந்த)**

| **ஆண்டு** | **18-30** | **31-40** | **41-50** | **50<** |
|---|---|---|---|---|
| **ஆண** | | | | |
| முகாமைத்துவம் | 0 | 0 | 3 | 8 |
| நிறைவேற்று | 0 | 1 | 17 | 23 |
| தொழில்நுட்பம் | 30 | 67 | 26 | 29 |
| தொலைக்காட்சி/ வானொலி தயாரிப்பு | 37 | 101 | 60 | 27 |
| எழுதுநர் சார்ந்த | 6 | 41 | 48 | 43 |
| **மொத்தம்** | **73** | **210** | **154** | **130** |
| **பெண்** | | | | |
| முகாமைத்துவம் | 0 | 0 | 2 | 1 |
| நிறைவேற்று | 0 | 2 | 6 | 4 |
| தொழில்நுட்பம | 2 | 2 | 0 | 4 |
| தொலைக்காட்சி/ வானொலி தயாரிப்பு | 17 | 34 | 27 | 15 |
| எழுதுநர் சார்ந்த | 3 | 23 | 18 | 13 |
| **மொத்தம்** | **22** | **61** | **53** | **37** |

**பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் சுருக்கம் (2021)**

| **பயிற்சி நிகழ்வு** | **பயிற்சி நிகழ்ச்சி-த்திட்டங்களின் எண்ணிக்கை** | **பங்கேற்ற ஊழியர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| **உள்நாடு** | | |
| மனித வள அபிவிருத்தி | 2 | 126 |
| பொறியியல் | 3 | 26 |
| நிதி | 2 | 2 |
| தகவல் தொழில்நுட்பம் | 1 | 15 |
| **மொத்தம்** | **8** | **169** |

2020 மார்ச் மாதம் முதல் Covid-19 நிலைமை காரணமாக பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்த முடியாமல போயுள்ளது.

### நிறுவன ரீதியான அளவுகோல்கள்

பங்காளர்களினால் நியமிக்கப்பட்ட தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்படுவதோடு கணக்காய்வாளர்களினால் வெளியிடப்படும் கருத்தானது சம்பந்தப்பட்ட கணக்காய்வு மற்றும் அறிக்கையிடல் நியமங்களுக்கும் ஏனைய சர்வதேச நியமங்களுக்கும் ஏற்புடையதாக அமையும். வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பு என்பன உறுதிப்படுத்தப்படும் வகையில் உண்மையானதும் திட்பநுட்பமானதும் சரியானதுமான நிதிசார் தகவல்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. கணக்குக் கூற்றுக்கள் இலங்கை பட்டைய கணக்காளர் களின் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் ஏற்புடையதாக அமைகின்றன.

### வாடிக்கையாளர் தொடர்பாடல்

எமது பிரதான வாடிக்கையாளர்களாகிய பிரச்சார முகவராலயங்கள் உண்மையிலேயே எமது தொழில் முயற்சியின் முதுகெலும்பாக அமைவதோடு அவர்கள் நிதமும் சிறந்தவற்றினையே கோருவதனால் அவர்களுடைய எதிர்பார்ப்புகளை விஞ்சிச்செல்லும் வகையில் எமது உற்பத்திகளைப் பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது. அது இயல்பாகவே நம்பிக்கையின் மீது அடிப்படையாக அமைகின்றது. அந்தந்த வாடிக்கையாளர்களின் தேவைகளை இனங்காண்பதற்காக விரிவான வாடிக்கையாளர் மதிப்பீடொன்றும் வாடிக்கையாளர் பின்னூட்டல் பொறிமுறையும் நடைமுறையில் உள்ளது. நாங்கள் பெற்றுத்தருகின்ற தயாரிப்புகள் மற்றும் சேவைகள் என்பவற்றின் மூலம் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள் தெட்டத்தெளிவாக வெளிப்படுவதோடு எமது தர நியமங்களுக்கும் ஒழுக்க நெறிகளுக்கும் உட்பட்ட வகையில் வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் பொருட்டு தேவையான வகையில் மாற்றமடைவதற்கு நாம் செயற்படுகின்றோம்.

இதற்கு மேலதிகமாக, எமது சகல முயற்சிகளினதும் வெற்றியினை பகுப்பாய்வு செய்வதற்காக நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நிறுவனங்களினால் சகல ஒளிபரப்பு நேரங்களும் ஏனைய அலைவரிசைகளுடன் தரவுப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுவதோடு அத் தரவுகளின் மூலம் பல்தரப்பட்ட நிகழ்ச்சிகளுக்கான ஜனரஞ்சக தன்மையின் வரையறைகளை இனங்காண முடிகின்றது. இது எமது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் பெறுமதியான அளவுகோலாக அமைவதோடு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளும் பொருட்டு எமக்கும் உதவி அளிக்கின்றது.

### ஊழியர்களுக்கான தொடர்பாடல்

ஆக்கத்திறனின் மீது தங்கியுள்ள தொழில் முயற்சியொன்றின் ஊழியர்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் இடையிலான நம்பிக்கை, சவால்கள், தொழில் முயற்சி உத்திமுறைகள் மற்றும் கம்பனியின் நிதி நிலைமை என்பன இருவழி தொடர்பாடல் தொடர்பாக அனைத்து ஊழியர்களும் கொண்டுள்ள புரிந்துணர்வின் மீதே தங்கியுள்ளன. எதிர்பாராத சந்தர்ப்பங்களில் எதிர்பாராத வகையில் ஒருவரிடமிருந்து தோன்றுகின்ற படைப்புத்திறன்கள் மிகவும் வெற்றியடைந்த பல சந்தர்ப்பங்கள் காணப்படுவதோடு பங்களிப்பின் மீது அடிப்படையாக அமைந்த செயலாற்றுகைக் கொடுப்பனவானது இதற்கு சிறந்த ஊக்கத்தினை பெற்றுக்கொடுத்துள்ளது.

### ஊழியர்களுக்கான சுகாதாரமும் பாதுகாப்பும்

ஊழியர் நலனோம்பலானது எமது வெற்றியின் பின்னால் காணப்படுகின்ற அடிப்படைக் காரணியாகும். தயாரிப்புச் செயன்முறையின்போது மலைகள், படுபாதாலங்கள், அடர்த்தியான காடுகள் என்பவற்றை துருவி பல்வேறுபட்ட உபகரணங்களை எடுத்துச் சென்று மிகவும் கடினமான சேவையில் ஈடுபடுகின்ற எமது ஊழியர்களின் உடல் மற்றும் உல ஆரோக்கியத்தின் மீது திடமான நம்பிக்கையை வைத்துள்ள நாம், சேவை நிலையத்திலும் அதற்கு வெளியிலும் அவர்களின் பாதுகாப்பு மற்றும் நிறுவனத்தின் செயற்பாடு என்பன தொடர்பாக விழிப்பாக உள்ளதோடு மிகச்சிறந்த வாழ்க்கை நிலையினை அனுபவிப்பதற்கு அவர்களுக்கு நிதமும் உதவியளிக்கின்றோம். சுகாதார நன்மைகளுக்காக முதலீடு செய்துள்ள நாம் தமது சுகாதாரத்தினை மதிப்பிடுதல், பேணிச் செல்லல் மற்றும் தொழிலாளர்களுக்கு உதவியளித்தல் என்பவற்றுக்காக சுகாதார முகாம்களை நடத்துகின்றோம்.

### ஊழியர்களுக்கான அனுகூலங்களும் நலனோம்பல் நடவடிக்கைகளும்

- 5000/- ரூபாவிலான செயலாற்றுகை ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்படுதல்
- வருகைக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு என்ற வகையில் 5500/- ரூபா மாதாந்தம் செலுத்தப்படுதல்.
- நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான பணியாட்தொகுதியினருக்கு 7000/- ரூபா பெறுமதியான பரிசுப் படிவங்களும், நாள் சம்பள பணியாளர்களுக்கு 5000/- ரூபா பெறுமதியான பரிசுப் படிவங்களும் 2021 புது வருடம் சார்பாக வழங்கப்படுதல்.
- நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான பணியாட்தொகுதியினருக்கு 9000/- ரூபா பெறுமதியான பரிசுப் படிவங்களும், நாள் சம்பள பணியாளர்களுக்கு 5000/- ரூபா பெறுமதியான பரிசுப் படிவங்களும் 2021 ஆண்டு நிறைவு சார்பாக வழங்கப்படுதல்.
- நிரந்தர, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையிலான பணியாளர் தொகுதிகளுக்கு தனிப்பட்ட அவசர காப்புறுதிக் காப்பு பெற்றுக்கொடுக்கப்படுதல்.
- 37 மில்லியன் ரூபாவை நிறுவனம் ஏற்று அனைத்து நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான பணியாட்டொகுதி அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கும் 150,000/- ரூபா பெறுமதியான காப்புறுதிக் காப்பு வழங்கப்படுதல்.
- தெஹிவளை, கோட்டை, பிலியந்தலை மற்றும் கடுவலை ஆகிய நகரங்களிலிருந்து தினசரி அலுவலக போக்குவரத்துச் சேவையொன்றினை முறையாக நடைமுறைப்படுத்துதல்.
- சேவை முறைமாற்ற கடமைகளை நிறைவேற்றுகின்ற பணியாளர் தொகுதியினருக்கு 3000/-ரூபாவிலான போக்குவரத்துக் கொடுப்பனவு செலுத்தப்படுதல்.
- தற்போதைய சம்பளத்திற்கு ஏற்புடையதாக இடர் உதவிக் கடன் வழங்கப்படுதல்.
- நிறைவேற்றுப் பதவியணியினருக்கு 1.2 மில்லியன் ரூபா வரை வாகனக் கடன் வழங்கப்படுதல்.
- நிறுவனத்தைச் சேர்ந்த ஏனைய ஊழியர்களுக்காக மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி கொள்வனவுக்காக 150,000/- ரூபா உச்ச மட்டத்திற்கு உட்பட்ட வகையில் கடன் வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.

## ● நிறுவனத்திற்கான நிர்வாக கொள்கை

பங்காளர்களின் நம்பிக்கையை தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டு நல்லாட்சியின் சிறந்த மட்டங்களை அடைவதற்காக சுயாதீன தொலைக்காட்சிச் சேவையானது அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு அதற்குப் பொருத்தமான கொள்கைச் சட்டகம் ஒன்றினைத் தயாரிப்பதற்காக பணிப்பாளர் சபையானது வெற்றிகரமான வகையில் வழிகாட்டல்களை பெற்றுத்தருகிறது.

சட்டரீதியான தேவைகளுக்கு ஒத்திசைவாக இருத்தல் மற்றும் வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்தும் வகையில் தமது நிர்வாகத்தினை மேற்கொண்டு செல்வதற்கு மேலதிகமாக, கடமை வளாகத்தில் ஒழுக்கம், நன்நெறி மற்றும் சிறந்த உள்ளக நிர்வாகம் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன.

### பணிப்பாளர் சபை

நிறுவனத்தின் உச்சமட்ட நலனுக்காக பணியாற்றுவதும், பங்காளர்களுக்கு நீண்டகால அடிப்படையிலான பெறுமதிகளையும் அனுகூலங்களையும் பெற்றுக்கொடுப்பதும் பணிப்பாளர் சபையின் அடிப்படைப் பொறுப்பாக அமைகின்றது. நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகை நோக்கங்கள், பிரதான முதலீடுகள், வருடாந்த வரவு செலவுத் திட்டம், நிதிசார் செயலாற்றுகை மீளாய்வுகள், ஆபத்துறு நிலைமைகளுக்கான முகாமைத்துவம் மற்றும் நிறுவன ரீதியான நிர்வாக செயன்முறைகள் சம்பந்தப்பட்ட பொறுப்பு என்பவற்றை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.

தமது பொறுப்பினை வினைத்திறனுடன் நிறைவேற்றுதல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக சுயாதீன மேற்பார்வையை உறுதிப்படுத்துதல் என்பவற்றுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்றும், கொள்வனவுக் குழுக்களை உள்ளிட்ட சில துணைக் குழுக்களும் நிறுவப்பட்டுள்ளன.

### 2021ம் ஆண்டுக்கான பணிப்பாளர் சபை பின்வருமாறு அமைகிறது.

திரு. சுதத் ரோஹண
தலைவர்
(2021.12.29 வரை)

கலாநிதி எச்.எஸ். ஹெட்டியாராச்சி
நிறைவேற்று பணிப்பாளர்
(2021.12.30 வரை)

பேராசிரியர் எம்.கே.சி. ராஜபக்ச
பணிப்பாளர்

கலாநிதி அமில இசான் கங்கானம்கே
பணிப்பாளர்
(2021.12.28 வரை)

திரு. எம். பைனாஸ்
பணிப்பாளர்

திருமதி. சஞ்சீவனி வீரசேகர
பணிப்பாளர் / திறைசேரியின் பிரதிநிதி

சட்டத்தரணி திரு. ரி.ஏ. யஜீஸ் தென்னகோன்
பணிப்பாளர்
(2021.01.27 முதல் )

பணிப்பாளர் சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் யோசனைகள் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கும் அவர்களின் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு சுதந்திரம் உள்ளது. ஒவ்வொரு பணிப்பாளர்களினதும் பங்களிப்பினூடாக நிறுவனத்தின் மூலோபாய ரீதியிலான முன்னேற்றம், முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் கருத்துகளை பகிர்ந்து கொள்வதற்குமென பல செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

| கூட்டத்தின் வகை | கூட்டத்தவணை | நடைபெற்ற தடவைகள் |
|---|---|---|
| பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் | மாதத்திற்கு ஒரு முறை | 13 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | மூன்று மாதங்களுக்கு ஒரு முறை | 04 |
| பிரதான கொள்வனவுக் குழு | அவசியப்படுமிடத்து | 08 |
| சிறு ஒப்பந்தங்களுக்கான கொள்வனவுக்குழு | இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை | 11 |

முகாமைத்துவமானது முறைசாரான அடிப்படையில் போதிய முகாமைத்துவ மற்றும் தொழிற்பாட்டு அறிக்கைகளையும் நிதி கூற்றுக்களையும் பணிப்பாளர் சபைக்கு வழங்குகின்றது. கூட்டத்திற்கு முன்பதாக விடயங்கள் தொடர்பாக சிறந்த புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்வதற்கும் அதன் பிரகாரம் உரிய விடயங்கள் தொடர்பாக தீவிர கவனம் செலுத்துவதற்கும் பணிப்பாளர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் வகையில் தேவையான தகவல்கள் கூட்டத்திற்கு ஒருவாரத்திற்கு முன்னர் அவர்களுக்கு முன்வைக்கப்படுகின்றன. நிறுவனத்தின் நிதி செயலாற்றுகையானது பணிப்பாளர் சபை கூட்டங்களின்போது முன்வைக்கப்படுகின்றது.

பணிப்பாளர் சபைக்கு ஏற்படக்கூடிய சிக்கல்கள் தொடர்பாக பதில் வழங்குவதன் பொருட்டு பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், பொது முகாமையாளர் மற்றும் சிரேஸ்ட முகாமையாளர்கள் என்போர் கூட்டங்களின்போது தங்கியிருப்பார்கள்.

கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும்போது கம்பனியின் செயலாளர் தலைவருக்கு உதவியளிப்பதோடு பணிப்பாளர் சபைக்குச் சிறந்த முறையில் தகவல்கள் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படுகின்ற வகையில் குறிப்புக்களை மேற்பார்வை செய்தல், தயாரித்தல் மற்றும் பங்கேற்பு என்பவற்றினையும் மேற்கொள்கின்றார். அமைப்பு விதிகள், சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இசைவாக்கம் அடைதல் தொடர்பாக செயலாளர் பணிப்பாளர் சபைக்கு உதவி அளிக்கின்றார். சிறந்த நிறுவன நிர்வாகம் மற்றும் நடவடிக்கை முறைகளை நடைமுறைப்படுத்துதல் என்பவற்றினை வலுவூட்டுவதற்காக பணிப்பாளர் சபைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக நிறுவனத்தின் முகாமைத்துவம் அர்ப்பணிப்புடன் உள்ளது.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் அல்லாத இரண்டு பணிப்பாளர்களைக் கொண்டும் தொழிற்பாட்டு பணிப்பாளரைக் கொண்டும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைந்துள்ளதுடன் அக்குழுவின் தலைமையினை திறைசேரியினைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பணிப்பாளர் வகிக்கின்றார்.
அதேவேளை வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சின் பிரதிநிதி, வெளிக் கணக்காய்வாளர், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், பொது முகாமையாளர், நிதி, நிர்வாக மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி முகாமையாளர்கள், சுயாதீன தொலைக்காட்சிச் சேவை மற்றும் ஐவுே குஆ வானொலி என்பவற்றின் கணக்காளர்கள் மற்றும் உள்ளக கணக்காளர்கள் என்போர்களும் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

## உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வானது உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வு செயன்முறையானது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மற்றும் பணிப்பாளர் சபை என்பவற்றின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்படுகின்றது. பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ளும்பொருட்டு சகல தகவல்களும் கணக்காய்வு விடயங்களும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன.
ஆராயப்படவேண்டிய துறைகள் யாவை என்பது தொடர்பாக வழிகாட்டல் குழுவினால் உள்ளக கணக்காய்வுக்கு தகவல்கள் பெற்றுதரப்படுகின்றன. அந்த அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இருக்கின்ற முறைமைகள் மற்றும் செயன்முறைகள் என்பவற்றை எவ்வாறு முன்னேற்றலாம் என்பது தொடர்பாக மதிப்பீடு செய்யும் பொருட்டு குழுவானது மூன்று சந்தர்ப்பங்களில் கூடியதோடு கூட்டங்கள் பற்றிய அறிக்கைகள் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

உள்ளக கணக்காய்வின் நோக்கமானது பணிப்பாளர் சபையின் நிர்வாகப் பொறுப்புகள் மற்றும் கம்பனியினுள்ளே ஆக்கவிளைவானதும் வினைத்திறனானதுமான தொழில் முயற்சிச் செயன்முறைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு சபைக்கு ஆதரவளிப்பதாகவும்.

## கொள்வனவுக் குழுக்கள்

பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளுக்கான தேவைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக தேசிய கொள்வனவு நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரசாங்கத்தின் கொள்வனவுச் செயன்முறையானது சுயாதீன தொலைக்காட்சிச் சேவையினாலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. இதன்மூலம் போட்டித் தன்மையின் அடிப்படையில் பணத்திற்கான ஆகக்கூடிய பெறுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு சுயாதீன தொலைக்காட்சிச் சேவைக்கு முடியும் என்பதோடு வெளிப்படைத்தன்மையினையும், கொள்வனவுச் செயன்முறையின் ஒரு சமமான தன்மையினையும் பேணிச் செல்லமுடியும். சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் கொள்வனவுக் குழுவிற்கு 100 மில்லியன் ரூபா வரை கொள்வனவு செய்வதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
மேல்நிலை கொள்வனவுக் குழுவானது நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுவதோடு கம்பனியின் தலைவர், பொது முகாமையாளர் மற்றும் அமைச்சின் பிரதிநிதி கொள்வனவு குழுவின் அங்கத்தவர்களாவார்கள். 02 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியைக் கொண்ட பொருட்கள் மற்றும் சேவை வழங்கல்கள் இக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.
கீழ்நிலை கொள்வனவுக் குழுவின் தலைவராக பொது முகாமையாளர் செயற்படுவதோடு 02 மில்லியன் ரூபாவுக்குக் குறைந்த பெறுமதியுடனான பெறுகைகள் இக்குழுவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. கீழ்நிலை கொள்வனவுக் குழுவின் கூட்டங்கள் வாரந்தோறும் நடத்தப்படுகின்றன.

## கம்பனியின் செயலாளர்

பணிப்பாளர் சபையானது செயன்முறையினைப் பின்பற்றுகின்றது என்பதனையும், பயனுள்ளவாறு தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான அனைத்து தகவல்களும் விபரங்களும் ஆவணங்களும் கூட்டங்களின்போது பணிப்பாளர் சபைக்கு வழங்கப்படுகின்றது என்பதனையும் உறுதிப்படுத்தும் அடிப்படை செயற்பொறுப்புகளை கம்பனியின் செயலாளர் நிறைவேற்றுகின்றார்.

## ● கம்பனியின் நடவடிக்கைகள் பற்றிய பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

2021 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான வ/ப சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுடன் இணைந்த கம்பனி அறிக்கையினை பணிப்பாளர்கள் சமர்ப்பிக்கின்றனர்.

### பிரதான செயற்பாடுகள்

சம்பந்தப்பட்ட வருடத்தில் அமைப்பின் அடிப்படை செயற்பாடாக அமைந்தது யாதெனில், இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகளினதும் வானொலி அலைவரிசைகளினதும் ஊடாக செய்தி, இசை, திரைப்படங்கள், நாடகங்கள், கல்வி நிகழ்ச்சிகள் மற்றும் நடப்பு விவகாரங்கள் என்பவற்றுடன் பரந்த பொழுதுபோக்கு சேவைகளை வழங்குவதாகும்.

மீளாய்வு செய்யப்பட்ட நிதியாண்டில் மேற்படி பிரதான செயற்பாடுகளின் தன்மையில் தனித்துவமான மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை.

ஒவ்வொரு துறையினால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கைகளில் சம்பந்தப்பட்ட வருடத்தில் செயற்பாடுகளின் மூலம் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால முன்னேற்றங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகள் கம்பனியின் நடவடிக்கைகள் பற்றிய பணிப்பாளர்களின் வருடாந்த அறிக்கையின் ஒத்திசைவான பகுதியை உருவாக்குகின்றது.

### எதிர்கால மேம்பாடு

எதிர்கால மேம்பாடு, அமைப்பின் எதிர்கால முன்னேற்றங்கள் துறைசார் அறிக்கைகளின் மூலம் அரவணைக்கப்பட்டுள்ளன.

### நீண்டகால இருப்புக்கான எண்ணக்கருக்கள்

எதிர்காலத்தில் அனைத்துச் செயற்பாடுகளையும் மகிழ்ச்சிகரமான வகையில் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான வளங்களை கம்பனி கொண்டுள்ளது என்பது பணிப்பாளர் சபையின் திடமான நம்பிக்கையாகும்.

அதன் பிரகாரம் நீண்டகால இருப்புக்கான எண்ணக்கருவின் மீது அமைந்து நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### வருமானம்

குறிப்பிட்ட வருடத்தில் கம்பனியின் வருமானமானது 1407 மில்லியன் ரூபா என்பதோடு கூற்றில் வருமானம் பற்றிய பகுப்பாய்வு தரப்பட்டுள்ளது

### பங்கு மூலதனம்

வருட இறுதியில் பங்கு மூலதனமாக 9,500,000 சாதாரண பங்குகளைக் கொண்டமைந்த 95,000,000 ரூபா காணப்பட்டது.

### இலாபங்களும் ஒதுக்கீடுகளும்

வரி செலுத்தப்பட்டதன் பின்னர் அமைப்பானது பெற்ற நட்டம் 315 மில்லியன் ரூபாவாகும்.

### தொழில்புரிவோர்

2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 19 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### ஒதுக்கங்கள்

2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் ஒதுக்கங்களின் பெறுமதியானது 920 மில்லியன் ரூபா ஆகும். 2021 ஆண்டுக்கான உரிமை மாற்றங்களுக்கான கூற்றில் ஒதுக்கத்தின் மாறிலிகள் தரப்பட்டுள்ளன.

### ஆதனங்களும் பொறியும்

ஆவணங்களைக் கைப்பற்றிக் கொள்ளுதல், பொறிகள், மேற்கொள்ளப்பட்டு வருகின்ற செயற்பாடுகளுக்கான மூலதன செலவினம் என்பவற்றுக்குரிய முழுமையான தேறிய மூலதன செலவினம் 56.2 மில்லியன் ரூபாவாக அமைந்தது. நிதிக் கூற்றில் குறிப்பு 14 இல் ஆதனங்கள் மற்றும் பொறி என்பவற்றின் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

### சட்டரீதியான கொடுப்பனவுகள்

தாம் அறிந்த வகையில் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் சட்டத்தின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

### பணிப்பாளர் சபை

சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் பணிப்பாளர் சபை மற்றும் அதன் நியமனங்கள் என்பவற்றுக்கான மாற்றங்கள் வருடாந்த அறிக்கையின் 22 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### படைப்பாளர்களுக்கான பங்குடமைகள்

பணிப்பாளர்களுக்கு பங்குடமைகள் கிடையாது

### நிறுவன உதவிக் கொடுப்பனவுகள்
குறிப்பிட்ட வருடத்தில் வழங்கப்பட்ட உதவிக்கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்கள் நிதி அறிக்கையின் குறிப்பிலக்கம் 7 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நிறுவனத்திற்கான நிர்வாகம்
இன்றைய நிறுவன நடத்தையின் பிரகாரம் அமைப்பின் பணிப்பாளர்கள் நல்லாட்சி மூலோபாயத்தினை அத்தியாவசிய கருவியாக ஏற்றுக்கொண்டு அதனைப் பதிலிடு செய்துள்ளனர். 2021 ஆம் ஆண்டுக்கான அறிக்கையின் திகதியில் நிறுவன நிர்வாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கம்பனி உறுதிப்படுத்துகின்றது.

### பங்குடமை
இலங்கை அரசாங்கத்தின் பொதுத் திறைசேரியானது 100 வீத பங்குடமையைக் கொண்டுள்ளது.

### நிகழ்தகா பொறுப்புகளும் கடப்பாடுகளும்
நிதிக்கூற்றின் குறிப்பு 32இல் விபரிக்கப்பட்டுள்ள நிகழ்தகா பொறுப்புகளையும் கடப்பாடுகளையும் தவிர வேறு எவ்விதமான நிகழ்தகா பொறுப்புகளோ கடப்பாடுகளோ அமைப்புக்குக் கிடையாது.

### ஐந்தொகையின் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்
ஐந்தொகையின் திகதிக்கும் கணக்குகளுக்கு பணிப்பாளர்கள் ஒப்பமிடுகின்ற திகதிக்கும் இடையில் நிதிக்கூற்றுக்கு இசைவாக்கம் செய்யப்படுதல் அல்லது வெளிக்கொணரப்பட வேண்டிய வகையிலான அளவுசார் நிகழ்வுகள் குறிப்பு 33இல் விவரிக்கப்பட்டுள்ளன.

### வருடாந்த மாநாடு
வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் வருடாந்த மாநாடு 2022 ஆகஸ்ட் 24 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு விக்கிரமசிங்கபுர, பத்தரமுல்லை தலைமையகத்தில் நடத்தப்படும்.

### கணக்காய்வாளர்கள்
கணக்காய்வதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. இதைத் தவிர பணிப்பாளர்கள் அறிந்த வகையில் குறிப்பிட்ட கம்பனிக்கு வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்புடன் எதுவித தொடர்பும் கிடையாது.

பணிப்பாளர் சபைக்காக மற்றும் சார்பாக

**வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு**

**சுதர்சன குணவர்தன**
**தலைவர்**

## வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு

# நிதி அறிக்கைகள்

2021-12-31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக

எனது இலக்கம்: சீஏஎம்/பீ/ஐரீஎன்/1/எப்ஏ/2021 திகதி: 2022 யூன் 17

தலைவர்
வ/ப சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு

**வ/ப சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வ/ப சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் (“கம்பெனி”) 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பெனியின் 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றின் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்களை ஒன்றுடனொன்று எதிரீடு செய்து காட்ட முடியாதென்றபோதிலும் மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் காணப்பட்ட 69,119,727 ரூபாவிலான வங்கி மேலதிப் பற்று 29,160,605 ரூபாவான வங்கி நிலுவைகளுக்கு எதிரீடு செய்து காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 18 பீ பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றினை சுழற்சி முறையில் தயாரிக்கும்போது தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசுப் பாய்ச்சலை கணக்கிடுவதற்காக வரிக்கு முந்தைய இலாபத்தை பயன்படுத்த வேண்டும் என்ற போதிலும் ஊடக வலையமைப்பினால் விவரமான வருமானங்கள் சீராக்கல் செய்யப்பட்டதன் பின்னர் நட்டம் ஆனது 329,653,045 ரூபாவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தொழிற்பாட்டு செயல்பாடுகளின் கீழ் காசுப்பாய்ச்சல் 14,058,366 ரூபா குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(இ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 15 இன் பிரகாரம் (SLFRS 15) வாடிக்கையாளர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் மூலம் எழுந்துள்ள கடன் பெறுநர்கள் மற்றும் கடன் தருநர்கள் ஆகியோர் நிதி நிலைமைக் கூற்றில் ஒப்பந்த சொத்துக்கள் மற்றும் ஒப்பந்த பொறுப்புக்களாக தனித்தனியே காட்டப்பட வேண்டும் என்ற போதிலும் மீள் வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் ஏற்பட்டுள்ள கடன் பெறுநர் நிலுவை மற்றும் கடன் தருநர் நிலுவை முறையே 28,824,028 ரூபா மற்றும் 69,702,230 ரூபா வர்த்தக மற்றும் வர வேண்டிய ஏனையவற்றின் கீழும் பிற்போடப்பட்ட வருமானங்களாகவும் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 (LKAS 24) இன் பிரகாரம் நிதிக் கூற்றுகளில் தொடர்புடைய தரப்பினர்கள் சம்பந்தமாக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும் ஊடக வலையமைப்பினால் பிரதான நிர்வாகத்தினர் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக எனது காணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பானது இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலதிகமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 கம்பெனியின் 2021 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்**

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கம்பெனியின் 2021 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதுபற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்களாக கருதப்படும். குறித்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் அரவணைக்கப்படமாட்டாது என்பதுடன் அது தொடர்பிலான எத்தகைய உறுதிப்படுத்தலையும் அல்லது அபிப்பிராயத்தையும் நான் தெரிவிக்கவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுக்குரியதாக எனது பொறுப்பாக இருப்பது மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமைகின்றபோது அவற்றை வாசிப்பதும் அவ்வாறு மேற்கொள்ளப்படும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறுவகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையான வகையில் இணங்கவில்லையா என்பதனை ஆராய்ந்து பார்ப்பதுமாகும்.

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையிலும் என்னால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அடிப்படையிலும் மேற்படி ஏனைய தகவல்கள் பொருண்மையான தவறாக காட்டப்பட்டுள்ளதென என்னால் தீர்மானிக்கப்படும் பட்சத்தில் அந்த விடயத்தை நான் அறிக்கையிட வேண்டும். இது தொடர்பில் அறிக்கையிடுவதற்கு எனக்கு எதுவும் கிடையாது.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்வாளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பெனியைத் தொடர்ந்து பேணிச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு முகாமைத்துவமானது கம்பெனியைக் கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் கம்பெனியின் இருப்புக்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பெனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பானது அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பெனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பெனியானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்துவதன் காரணமாக எழக்கூடுமென்பதுடன் அதன் அளவுசார்தன்மையானது இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் எனது கருத்துக்கான அடிப்படைகளாகும். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடும் மதிப்பிடப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பெனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் பொருண்மையான ஐயப்பாடு உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வின் பொருட்டு நிறுவனத்திற்கான தொடர்ந்தியங்குதல் பற்றிய அடிப்படையினைப் பயன்படுத்துவதற்கான பொருத்தப்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்கள் தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாத பட்சத்தில் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பெனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அதன்பொருட்டு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளதென்பது மதிபீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகை தரப்புகள் விழிப்பூட்டப்படும்.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை**

2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்திலும் பின்வரும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

2.1.1. எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலமான தாக்கத்தினைத் தவிர, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 163 (2) பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு எனது விசாரணையின் மூலம் காணப்படுகின்ற வகையில் உரிய நிதிசார் அறிக்கைகள் கம்பெனியினால் பேணிச் செல்லப்பட்டுள்ளன.

2.1.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் கம்பெனியின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திசைவாகின்றன.

2.1.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் 2.2.2 (i) (அ), 2.3 (ங) பந்திகளிலுள்ள அவதானிப்புகளைத் தவிர கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளன.

2.2. பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்டதனுள் பின்வரும் கூற்றுக்களை முன்வைக்கும் அளவிற்கு எந்தவொரு விடயமும் எனது கவனத்திற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் கம்பெனியின் நிர்வாக சபையின் அங்கத்தவர் ஒருவருக்கு கம்பெனி சம்பந்தமான ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாகவோ வேறுவிதமாகவோ சாதாரண வர்த்தக நிலைமைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளதென்பது.

2.2.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர சம்பந்தப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அல்லது கம்பெனியின் நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாத வகையில் செயற்பட்டுள்ளது என்பது.

| சட்டங்கள்,விதிகள்/பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 2020 சனவரி 27 ஆம் திகதி பீஈடீ 1/2020 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிச் சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தி | (i) தலைவரது கடமை அல்லது தனிப்பட்ட பாவனைக்காக ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மேலதிகமாக வழங்கப்பட்டிருந்த வாடகை வாகனத்திற்கான 6,347 எரிபொருள் லீற்றர்களுக்காகவும் வாகன வாடகைக்காகவும் 4,527,582 ரூபா செலுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| | (ii) சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தலைவர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட எரிபொருளின் அளவு 1,800 லீற்றர்கள் என்ற போதிலும் அங்கீகரிக்கப்பட்ட அளவைக் கடந்து 6,026 லீற்றர்களுக்காக 1,035,828 ரூபா மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2021 டிசெம்பர் 15 ஆம் திகதிய பீஈடீ 03/2021 ஆம் இலக்க் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் 2020 நிதி ஆண்டில் நட்ட நிலைமை பதிவாகியுள்ளபோதிலும் 2021 ஆம் நிதி ஆண்டுக்கு ஒப்பீடாக அந்த நட்ட நிலைமையை குறைத்துக்கொள்ளாத, அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பெனிகள் ஒருவருக்கு 3,000 ரூபா மட்டும் வெகுமதி கொடுப்பனவு செலுத்த வேண்டும் என்றபோதிலும் அதற்கு முரணாக ஒருவருக்கு 3000 ரூபாவை விஞ்சி 13,027,000 ரூபாவிலான வெகுமதிக் கொடுப்பனவுகளை அங்கீகாரமின்றி வழங்கியிருந்தன. |

2.2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணகாய்வுச் சட்டத்தின் 12(எ)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் கம்பெனியின் தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றுக்கு அமைந்தொழுகாத வகையில் செயற்பட்டுள்ளனர் என்பது.

2.2.4. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணகாய்வுச் சட்டத்தின் 12(ஏ)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர, கம்பெனியின் வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறன்மிக்க வகையிலும் பயனுள்ள வகையிலும் உரிய காலப்பகுதியில் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக கொள்முதல் (பெறுகை) செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது.

(i) அரச நிறுவனங்கள், வேலை வழங்கல் சேவைகளுக்காக அரச பெறுகை வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும் என்றபோதிலும் ஊடக வலையமைப்பினால் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி நடத்தப்பட்ட "*ஆசியானு தரு பலச*" என்னும் இசை நிகழ்ச்சிக்கு உரியதாக நிகழ்ச்சி முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக பெறுகைச் செயல்முறைக்குப் புறம்பாக 11,000,000 ரூபா மதிப்பீட்டுப் பெறுமதியான வேலை வழங்கல்களுக்கு ஒரு வழங்குநர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததோடு அதன்மூலம் பெறுகையின் நோக்கங்கள் நிறைவேறும் வகையில் ஆகக்குறைந்த செலவில் ஆகக்கூடிய பொருளாதார நன்மைகள் கிடைக்கக் கூடியவாறு தகுதி வாய்ந்த, ஆர்வம் கொண்டுள்ள தரப்பினருக்கு பெறுகை நடவடிக்கையில் பங்கேற்பதற்காக நியாயமானதும் உச்ச மட்டமானதுமான வாய்ப்புகளை வழங்கக் கூடியவாறு செயற்பட்டிருக்கவில்லை. மேலும், தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் இருப்புப் பற்றிய எத்தகைய தகவல்களும் இணையத்தள பரிசீலனையின் போது வெளிப்படவில்லை.

2.3 **ஏனைய விடயங்கள்**

(அ) ஊடக வலையமைப்பில் 2015 ஆம் ஆண்டில் 3,198,499,721 ரூபாவான உரிமையாண்மை மூலதனம் 2021 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டில் கம்பெனியின் நட்டம் ஆனது 107,189,266 ரூபாவாக காணப்பட்டதோடு மீளாய்வு ஆண்டில் சுயாதீன தொலைக்காட்சியின் நட்டம் ஆனது 238,131,346 ரூபாவாகவும், ஐரீஎன் எ∴ப்எம் அலைவரிசையின் நட்டம் ஆனது 41,325,521 ரூபாவாகவும் வசந்தம் எ∴ப்எம் அலைவரிசையின் நட்டம் ஆனது 10,455,852 ரூபாவும் வசந்தம் தொலைக்காட்சிக்கு 46,337,505 ரூபா மானியத் தொகை கிடைத்த பின்னரும் நட்டம் ஆனது 26,061,682 ரூபாவாகவும் அமைந்திருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வு ஆண்டில் கம்பெனியின் மொத்த நட்டம் 315,974,401 ரூபாவாக அமைந்திருந்தது.

(ஆ) மீளாய்வு ஆண்டில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் மட்டும் அடிப்படையாக அமைந்து நிலையான வைப்பொன்றை பிணையாக வைத்து 75 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகப் பற்று வரையறை அங்கீகரித்துக்கொள்ளப்பட்டிருந்ததோடு வருட இறுதியில் மேலதிகப் பற்று நிலுவை 69,119,727 ரூபாவாக காணப்பட்டது. ஆயினும் மீளாய்வு ஆண்டில் 07 மாதங்கள் தொடர்ச்சியாக அங்கீகரிக்கப்பட்ட மேலதிகப் பற்று எல்லையை விஞ்சிச் சென்றிருந்ததோடு மேலதிகப் பற்று வட்டியாக 3,593,733 ரூபா செலுத்தப்பட்டிருந்தது.

(இ) தொலைக்காட்சி நாடக ஒளிபரப்பு வான்காலம் தெரிவு செய்யப்படுவதன் பலவீனங்கள் காரணமாக 2021 ஆம் ஆண்டில் ஊடக வலையமைப்பினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள உள்நாட்டு தொலைக்காட்சி நாடகங்கள் 8 இன் மூலம் 18,348,836 ரூபா நட்டம் ஏற்பட்டிருந்ததோடு இதில் முன் காட்சிச் சபையினால் ஒளிபரப்புச் செய்வதற்குப் பொருத்தமற்றதென பரிந்துரை செய்யப்பட்ட ‘‘சத் வர்ஷா’’ தொலைக்காட்சி நாடகம் தயாரிப்பாளரின் மேன்முறையீட்டின் மீது மீண்டும் நியமிக்கப்பட்ட வேறொரு மீளாய்வு சபையின் அங்கீகாரத்தின் பேரில் முன் காட்சி செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டிருந்ததோடு அதன்மூலம் ஊடக வலையமைப்பிற்கு 5,100,506 ரூபா நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) ஊடக வலையமைப்பின் தொழிற்பாட்டு மூலதனம் 2020 ஆம் ஆண்டில் 620,761,280 ரூபாவாக காணப்பட்டதோடு 2021 ஆம் ஆண்டில் அது 399,833,265 ரூபா வரை குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவத்தில் காணப்படுகின்ற பலவீனங்களின் காரணமாக அன்றாட நிதித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் சிரமத்திற்கு முகங் கொடுக்கப்பட்டிருந்தது. நடைமுறை ரீதியில் தொழிற்பாட்டு மூலதனத்தை முகாமைத்துவம் செய்யும் போது காலாண்டு ரீதியில் நிதி வரவு மற்றும் செலுத்தல் தொடர்பில் எதிர்வுகூறல்களை மேற்கொண்டு மீளாய்வு ஆண்டிற்காக நிதி வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து காசுப்பாய்ச்சல்கள் திட்டமிடப்பட வேண்டும் என்ற போதிலும் அத்தகைய வரவு-செலவுத் திட்ட கட்டுப்பாட்டு முறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வு ஆண்டின் இறுதியில் ஊடக வலையமைப்பில் வருடத்தைக் கடந்த கடனாளர் நிலுவை 371,580,502 ரூபாவாக காணப்பட்டதோடு அதில் 2,531,970 ரூபாவுக்காக மட்டும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் சேவைபெறுநர் மீள் வர்த்தக கடனாளி நிலுவை 28,824,029 ரூபாவாக காணப்பட்டதோடு ஊடக வலையமைப்பினால் உரிய சேவைகள் பெற்றுக்கொள்ளப்படாத காரணத்தினால் 05 வருடங்களைக் கடந்த மீள் வர்த்தக கடனாளர் நிலுவைகளின் மொத்தம் 14,641,728 ரூபாவுக்காக நிதி ஆண்டில் சேத இழப்பு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வு ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதியில் ஊடக வலையமைப்புக்கு எதிராக 105,000,000 ரூபா நட்டஈடு கோரி 03 அவதூறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இலங்கையில் ஊடகங்களின் வாயிலாக திரைப்படங்களை காட்சிப்படுத்துதல், விநியோகித்தல் அல்லது விற்பனை செய்வதற்கான உரிமை கம்பெனியினால் மீறப்பட்டுள்ளமைக்கு எதிராக 06 வழக்குகளும், 06 திரைப்பட புலமைச் சொத்து வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்ததோடு அந்த வழக்குகளில் கோரப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகையானது 510,325,000 ரூபாவாகும். சேவையிலிருந்து விலக்குதல், சேவையை முடிவுறுத்துதல் மற்றும் கட்டாய ஓய்வில் அனுப்புதல் தொடர்பான 05 வழக்குகளும் ஏனைய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 04 வழக்குகளும் என்றவகையில் கம்பெனிக்கு எதிராக 24 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததோடு கோரப்பட்ட நட்டஈட்டுத் தொகையானது 125,325,000 ரூபாவாகும். இந்த வழக்கு நடவடிக்கைகளுக்காக மளாய்வு ஆண்டின் இறுதியில் 1,036,494 ரூபா செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத்தோடு 23 வழக்குகள் தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 69,702,230 ரூபாவான பிற்போடப்பட்ட வருமான நிலுவையில் 05 வருடங்களுக்குக் குறைவான நிலுவை 22,725,000 ரூபாவும் 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட நிலுவை 45,379,753 ரூபாவும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை 1,597,477 ரூபாவும் உள்ளடங்கி இருந்ததோடு அந்த நிலுவைகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வு ஆண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள 127,240,756 ரூபா சேவைபெறுநர் முற்பண நிலுவையில் உள்ளடங்கியுள்ள 10 வருடங்களைக் கடந்த நிலுவை 41,470,241 ரூபாவாக காணப்பட்டதோடு இந்த நிலுவையைத் தீர்ப்பதற்காக மீளாய்வு ஆண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 5,718,320 ரூபாவான இரத்துச் செய்யப்பட்ட காசோலைக் கணக்கின் நிலுவையில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து முன் கொண்டு வரும் 2,644,085 ரூபா பெறுமதியான 242 காசோலைகளும் 02 வருடங்களுக்கும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்கான 2,485,466 ரூபா பெறுமதியான 239 காசோலைகளும் தொடர்பாக தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு மீளாய்வு ஆண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) ஊடக வலையமைப்பினால் 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 1,588,500 ரூபா பெறுமதியான Hot Swappable Power Distribution Rack இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிருந்தும், 2010 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் 1,218,274 ரூபாவாக அமைந்திருந்த Aros Flexus FT – 30, 30 KVA UPS Systems சுமார் 03 வருட காலப்பகுதியில் இருந்தும் பயன்படுத்தப்படாமல் செயலிழந்து காணப்பட்டன

(ஔ) ஊடக வலையமைப்பானது தொடர்ந்தும் நட்டம் பெறுகின்ற நிலைமைக்கும் தொழிற்பாட்டு மூலதன பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்துள்ள நிலைமையில் பதவியணி முகாமைத்துவத்தின் மீது கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்ற போதிலும் ஊடக வலையமைப்பு நிதியாண்டில் ஒப்பந்த அடிப்படையில் இரண்டு ஊழியர்களையும் நாளாந்த அடிப்படையில் 16 ஊழியர்களையும் ஆட்சேர்ப்புச் செய்திருந்ததோடு மீளாய்வு ஆண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி பதவிகளில் 67 மிகையும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்வாங்கப்படாத

பதவிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்டதாக அமையும் வகையில் 113 ஊழியர்களும் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியில் வெற்றிடமாக உள்ள நிரந்தர பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 13 ஊழியர்களும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

(க) மீளாய்வு ஆண்டில் வான் கால விற்பனை வருமானத்தில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 10,130,000 ரூபா பெறுமதியான பரிசு வவுச்சர்கள் உள்ளடங்கியிருப்பதனால் மீள் வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் மூலம் வான்கால வருமானம் பெறப்பட்ட போதிலும் அதற்கு ஒப்பீடாக காசுப்பாய்ச்சல் ஊடக வலையமைப்புக்குள் உட்பாயாத காரணத்தினால் விற்பனை வருமானம் 257,569,354 ரூபாவினால் அதிகரித்துள்ள போதிலும் தேறிய தொழிற்பாட்டு மூலதனம் 220,928,015 ரூபாவினால் குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் விற்பனை வருமானத்திற்கு தேறிய தொழிற்பாட்டு மூலதன விகிதம் கடந்த வருடத்தில் 1.85 என்றபோதிலும் மீளாய்வு ஆண்டில் அது 3.52 வரை அதிகரித்திருந்தது.

டப்ளியூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வ/ப சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு**

*(இலங்கை ரூபாவினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது )*

| டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் வருடத்திற்கான விரிவான வருமானக் கூற்று | குறிப்பு | 2021 | 2020 |
|---|---|---|---|
| வருமானம் | 6 | **1,407,648,212** | 1,150,078,858 |
| ஏனைய வருமானம் | 7 | **110,410,237** | 345,490,014 |
| **மொத்த வருமானம்** | | **1,518,058,449** | **1,495,568,872** |
| நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள் | 8 | **(503,971,809)** | (409,350,323) |
| சந்தைப்படுத்தல் செலவினங்கள் | 9 | **(87,284,911)** | (91,416,798) |
| ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள் | 10 | **(1,300,923,871)** | (1,294,624,865) |
| **தொழிற்பாட்டின் மூலமான இலாபம்** | | **(374,122,142)** | **(299,823,114)** |
| தேறிய நிதி வருமானம் | 11 | **30,410,661** | 50,141,441 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | **(343,711,481)** | **(249,681,673)** |
| வருமான வரி செலவினங்கள் | 12 | 13,678,644 | 35,707,166 |
| **வருடத்திற்கான இலாபம்** | | **(330,032,837)** | **(213,974,507)** |
| **ஒரு பங்குக்கான அடிப்படை ஈட்டல்கள் (ரூபா)** | 13 | **(33.26)** | **(23.88)** |
| வருடத்திற்கான இலாபம் | | **(330,032,837)** | **(213,974,507)** |
| ஏனயை விரிவான வருமானம் | | 14,058,436 | (12,886,453) |
| **வருடத்தில் மொத்த விரிவான வருமானம்** | | **(315,974,401)** | **(226,860,960)** |

அடைப்புக்குறிகளுக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் கழித்தல்களைக் குறிக்கின்றன

5 முதல் 23 வரையான பக்கங்களில் உள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களுக்கான ஒருங்கிணைந்த பகுதியாகும் .

வ/ப சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு

| டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் வருடத்திற்கான நிதிநிலைக் கூற்று | குறிப்பு | 2021 | 2020 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | **14** | 770,374,015 | 855,072,463 |
| அருவச் சொத்து | **15** | 8,163,241 | 4,906,926 |
| விற்பனைக்காகவுள்ள நிதிச் சொத்துக்கள் | **16** | 4,000 | 4,000 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்து | **17** | 17,180,565 | 3,501,921 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **795,721,821** | **863,485,311** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | **18** | 12,526,995 | 10,186,261 |
| வியாபார மற்றும் ஏனைய வரவேண்டியவைகள் | **19** | 601,543,093 | 712,153,945 |
| பதவியணிக் கடன் மற்றும் முற்பணம் | **20** | 57,667,276 | 59,144,336 |
| வைபீடுகள் மற்றும் முற்பணம் | **21** | 12,694,089 | 14,823,561 |
| கிடைக்கவேண்டிய நடப்பு வரிகள் | | 10,736,395 | 10,736,395 |
| முன்கூட்டிய செலுத்தல்கள் | | 5,884,778 | 5,928,216 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | **22** | 338,300,156 | 326,681,339 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | **23** | 259,806,021 | 362,004,251 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **1,299,158,803** | **1,501,658,304** |
| **மொத்த சொத்துக்கள்** | | **2,094,880,624** | **2,365,143,615** |
| **உரிமை முதல் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **உரிமை முதல்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | **24** | 95,000,000 | 95,000,000 |
| வைத்திருப்பு ஈட்டல்கள் | | 920,725,329 | 1,236,699,730 |
| **மொத்த உரிமை முதல்** | | **1,015,725,329** | **1,331,699,730** |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வு நலன் கடப்பாடு | **25** | 113,854,752 | 129,534,361 |
| அரசாங்க மானியங்கள் | **26** | 65,975,005 | 23,012,500 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | **17** | | |
| **மொத்த நடைமுறையல்லா பொறுப்புகள்** | | **179,829,757** | **152,546,861** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| சேவைபெறுநர் முற்பணம் | | 127,240,756 | 137,772,746 |
| பிற்போடப்பட்ட வருமானம் | **27** | 69,702,230 | 63,929,480 |
| ஏனைய செலுத்த வேண்டியவை | **28** | 132,801,209 | 146,229,965 |
| நியதிச்சட்ட ரீதியில் செலுத்த வேண்டியவை | **29** | 19,297,912 | 22,986,518 |
| ஏற்பாடுகளும் அட்டுறு செலவினங்களும் | | 550,283,431 | 509,978,315 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **899,325,538** | **880,897,024** |
| **மொத்த உரிமை முதல் மற்றும் பொறுப்புக்கள்** | | **2,094,880,624** | **2,365,143,615** |

இந்நிதிக்கூற்றுக்களாவை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தெவைப்பாடுகளுடன்

…………………………………..
**நிதி முகாமையாளர்**

இந்நிதிக் கூற்றுக்களுக்கான தயாரிப்பு மற்றும் சமர்ப்பணம் என்பன பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

**பணிப்பாளர் சபைக்காகவும் அது சார்பாகவும் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டது .**

…………………………………… ………………………
**பணிப்பாளர்** **பணிப்பாளர்**

திகதி : 2022 மார்ச் 11
கொழும்பு

அடைப்புக்குறிகளுக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் கழித்தல்களைக் குறிக்கின்றன
5 முதல் 23 வரையான பக்கங்களில் உள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களுக்கான ஒருங்கிணைந்த பகுதியாகும் .

**2021 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான பங்குமுதல் மாற்றங்கள் பற்றிய கூற்று**

| | கூறப்பட்ட மூலதனம் | வைத்திருப்பு வருவாய் | மொத்தம் |
|---|---|---|---|
| **2020 சனவரி 01 ஆம்திகதியில் நிலுவை** | **95,000,000** | **1,463,560,695** | **1,558,560,695** |
| வருடத்திற்கான இலாபம் | - | (226,860,960) | (226,860,960) |
| **2020 டிசெம்பர் 31 ஆம்திகதியில் நிலுவை** | **95,000,000** | **1,236,699,735** | **1,331,699,735** |
| வருடத்திற்கான இலாபம் | - | (315,974,401) | (315,974,401) |
| **2021 டிசெம்பர் 31 ஆம்திகதியில் நிலுவை** | **95,000,000** | **920,725,334** | **1,015,725,334** |

அடைப்புக்குறிகளுக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் கழித்தல்களைக் குறிக்கின்றன

5 முதல் 23 வரையான பக்கங்களில் உள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களுக்கான ஒருங்கிணைந்த பகுதியாகும்.

வ/ப சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு *(இலங்கை ரூபாவினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது )*

| டிசெம்பர் 31உடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிப் பாய்ச்சல் கூற்று | 2021 | 2020 |
|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் மூலமான நிதிப் பாய்ச்சல்** | | |
| வரிவிதிப்புக்கு முன்னரான இலாபம் | (329,653,045) | (262,568,126) |
| ***செம்மையாக்கல்கள்*** | | |
| அருவச் சொத்துக்களுக்கான மதிப்பிறக்கம் | 78,376,094 | 52,397,951 |
| ஆதனம்,பொறி,உபகரணங்களின் விற்பனை மீதான இலாபம்/நட்டம் | 11,739 | (1,660,678) |
| அரச மானியங்களுக்கான மதிப்பிறக்கம் | (3,375,000) | (2,737,500) |
| செலுத்தப்படாத மீதிகளை மீளப் பதிதில் | (11,038,234) | 0 |
| பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் | 0 | 0 |
| வர்த்தக வரவேண்டியவைகளின் சேத இழப்பிற்கான ஏற்பாடுகள் | 5,936,662 | 30,077,472 |
| கிடைக்கப்படவேண்டியவைகளின் சேத இழப்புக்கான ஏற்பாடு | 2,710,679 | 4,746,224 |
| வர்த்தக கிடைக்கப்பட வேண்டியவைகளின் சேத இழப்பிற்கான குறைவு | (2,395,684) | |
| வருடத்திற்கான பணிக்கொடைக் கட்டணம் | 3,688,578 | 31,991,096 |
| தேய்மானம் | 141,921,215 | 154,740,944 |
| மெதுவாக நகரும் சரக்குத் தொக்குகளின் சேத இழப்பிற்கான ஏற்பாடுகள் | 0 | 490,675 |
| பதிவழிக்கப்பட்ட ESC | 0 | 5,821,064 |
| பதிவழிக்கப்பட்ட இருப்புகள் | 0 | 0 |
| வட்டி வருமானம் | (34,004,394) | (50,141,441) |
| வட்டி செலவினம் | 3,593,733 | - |
| **தொழிற்படு மூலதனத்தின் மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்படு இலாபம்** | **(144,227,657)** | **(36,842,319)** |
| **தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள்** | | |
| இருப்புக்கள் | (961,594) | 2,264,452 |
| வியாபார மற்றும் ஏனைய வரவேண்டியவைகள் | 104,359,196 | (239,868,495) |
| பதவியணிக் கடன் மற்றும் முற்பணம் | 1,477,060 | 6,519,322 |
| வைபீடுகள் மற்றும் முற்பணம் | 2,129,472 | 4,409,884 |
| முன்கூட்டிய செலுத்தல்கள் | 43,438 | 1,085,924 |
| சேவைபெறுநர் முற்பணம் | (10,531,990) | 19,434,580 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 5,772,750 | 2,531,250 |
| ஏனைய செலுத்த வேண்டியவை | (13,428,756) | 34,235,670 |
| நியதிச்சட்ட ரீதியில் செலுத்த வேண்டியவை | 4,596,428 | 5,841,414 |
| ஏற்பாடுகளும் அட்டுறு செலவினங்களும் | 40,305,116 | 77,416,949 |
| **தொழிற்பாடுகளிலிருந்து பிறப்பாக்கம் செய்யப்பட்ட பணம்** | **(10,466,537)** | **(122,971,369)** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (17,879,898) | (13,736,736) |
| செலுத்தப்பட்ட வட்டி | | |
| செலுத்தப்பட்ட வரிகள் | | |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின்மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்** | **(28,346,435)** | **(136,708,105)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனம்,பொறி,உபகரணங்கள் கையகப்படுத்தப்படுதல் | (62,963,774) | (34,655,293) |
| ஆதனம்,பொறி,உபகரணங்களுக்கான விற்பனை மூலமான வருமானம் | 855,333 | 1,682,028 |
| இடம்பெற்று வரும் மூலதன வேலைகள் மீதான செலவினங்கள் | 4,759,707 | (495,558) |
| அருவச் சொத்துக்களைக் கையகப்படுத்தல் | (81,632,409) | (49,069,262) |
| ஏனைய நிதிச் சொத்துக்களின் மீதான முதலீடுகள் | (13,900,870) | 19,162,687 |
| கிடைக்கப்பட்ட வட்டி | 32,692,714 | 57,630,945 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட தேறிய பணம்** | **(120,189,299)** | **(5,744,453)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| அரச மானியம் | 46,337,505 | 5,100,000 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | |
| **நிதிச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்ட தேறிய பணம்** | **46,337,505** | **5,100,000** |
| **வருடத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய மாற்றங்கள்** | (102,198,229) | (137,352,558) |
| வருடத்தின் ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும் | 362,004,251 | 499,356,809 |
| **வருடத்தின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவைக** (குறிப்பு 23) | **259,806,021** | **362,004,251** |

பக்கம் 01 இன் கணக்காய்வு அறிக்கை

அடைப்புக்குறிகளுக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் கழித்தல்களைக் குறிக்கின்றன

5 முதல் 23 வரையான பக்கங்களில் உள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களுக்கான ஒருங்கிணைந்த பகுதியாகும்

## 1. நிறுவனத் தகவல்கள்

### 1.1. அறிக்கையிடும் நிறுவனம்

வ/ப சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பானது இலங்கையில் இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகளையும் இரண்டு வானொலி அலைவரிசைகளையும் கொண்டு இயக்கி வருகின்ற ஒரு தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பு அமைப்பாகும். இந்நிறுவனத்தின் தலைமையகம் இலங்கையில் பத்தரமுல்லை, விக்கிரமசிங்கபுர எனும் இடத்தில் அமைந்துள்ளது. 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளும் பொதுக் கம்பெனிகளாக மாற்றியமைக்கப்பட்டதன் பிரகாரம் வ/ப சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் அரசுக்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சியினால் மேற்கொள்ளப்பட்ட வணிக நடவடிக்கைகளைக் கையகப்படுத்திக்கொள்வதற்காக அது ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பெனியாக 1992 ஏப்ரல் 27 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2004 ஆம் ஆண்டின் இறுதியில் முழுமையாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட 33,861,107/- ரூபாவிலான நற்பெயரை ஏற்படுத்தி பொதுத் திறைசேரியின் செயலாளருக்கு வழங்கப்பட்ட 95 மில்லியன் ரூபாவிலான பங்கு மூலதனம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செம்மையாகத்தினைத் தவிர அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சி நிறுவனத்தின் கணக்குகளில் காட்டப்படுகின்ற நிலுவைகள் கம்பெனிக்கு மாற்றப்பட்டுள்ளன.

### 1.2 வெளியீட்டுக்கான அங்கீகாரத் திகதி

2022 மார்ச் 11 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் தீர்மான நிறைவேற்றுதலின் பிரகாரம் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்காக அதிகாரமளிக்கப்பட்டது.

## 2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான சுருக்கம்

### 2.1 தயாரிப்புக்கான அடிப்படை

வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் நிதிக்கூற்றுக்களானவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக சில திறனாய்வுசார்ந்த கணக்கீட்டு மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். அதேவேளை, கம்பெனிக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்படுவதற்கான செயற்பாட்டின்போது முகாமைத்துவமானது அதன் முடிவுகளை நடைமுறைப்படுத்த வேண்டியதும் அவசியமாகும். மிகவும் உயர் மட்டத்திலான முடிவுகள் அல்லது சிக்கல்தன்மைகொண்ட பகுதிகள் அல்லது நிதிக்கூற்றுக்களுக்கு முக்கியமான அனுமானங்களும் மதிப்பீடுகளும் குறிப்பு 5 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்களானவை வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருப்பதுடன் பணிக்கொடை சூத்திரத்தைப் பயன்படுத்தி எதிர்வுகூறப்பட்ட அலகு வரைமுறையின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட பயன்சார் கடப்பாட்டினை அதன் இன்றைய பெறுமதிக்கு அளவீடு செய்வதற்காக மட்டுமே தவிர நிதிக்கூற்றுக்கள் மீது தாக்கம் ஏற்படுத்துகின்ற பணவீக்கக் காரணிகள் தொடர்பாக செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்படாமல் பொருத்தமான வகையில் பயன்படுத்தப்படுகின்றன.

### 2.2 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

வேறு வகையில் சுட்டிக்காட்டப்பட்டாலொழிய, பின்வரும் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான மாற்றங்கள் பொருத்தமான வகையில் நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்படுகின்ற காலப்பகுதிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மிகவும் சிறந்த முறையில் முன்வைப்பதற்காகவும், நடப்பு வருடத்தின் கூற்றுக்களுடன் ஒப்பிடக்கூடிய வகையிலும் கடந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் முன்வைக்கப்படுதல் மற்றும் வகைப்படுத்தப்படுதல் தேவையான இடங்களில் திருத்தப்பட்டுள்ளன.

### 2.3 பிரிவு அறிக்கையிடல்

இயக்கப் பிரிவு என்பது கம்பெனியின் வேறேதேனும் கூறுடன் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்படுகின்ற வருமானம் மற்றும் செலவினங்கள் உட்பட கம்பெனியினால் வருமானங்கள் ஈட்டக்கூடிய, செலவுகள் மேற்கொள்ளக்கூடிய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற கம்பெனியின் ஒரு கூறாகும். பிரிவுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வளங்கள் குறித்து முடிவுகளை எடுக்கவும், அதன் செயல்திறனை மதிப்பிடுவதற்கும் அனைத்து இயக்கப் பிரிவுகளுக்குமான பெறுபேறுகளை பணிப்பாளர் சபை தொடர்ந்தும் மதிப்பாய்வு செய்கின்றது. கம்பெனி கொண்டுள்ள அலைவரிசைகளின் பிரகாரம் இயக்கப் பிரிவுகள் தனித்தனியாக ஒழுங்கமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. ஒவ்வொரு இயக்கப் பிரிவினதும் பெறுபேறுகள் பற்றிய விரிவான தகவல்கள் குறிப்பு 34 இல் வழங்கப்பட்டுள்ளன.

### 2.4 தொடர்ந்து இயங்கும் அமைப்பு

தொடர்ந்து இயங்கும் அமைப்பாக முன்னகர்ந்து செல்வதற்கான கம்பெனியின் திறன் தொடர்பான ஒரு மதிப்பீடு பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அவர்கள் அதனை ஒழித்துக்கட்டவோ அதன் வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்தவோ எதிர்பார்க்கவில்லை.

### 2.5 அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற சகல நிகழ்வுகளும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதோடு பொறுத்தமான சந்தர்ப்பங்களில் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளில் செம்மையாக்கல்களும் வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.6 கடப்பாடுகள்

அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியில் காணப்படுகின்ற சகல கடப்பாடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு அவை நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**2.7 வெளிநாட்டு நாணயங்கள்**

**(அ) தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பண நாணயம்**

நிறுவனம் தொழிற்படுகின்ற ஆரம்பப் பொருளாதார சூழலில் பயன்பாட்டிலுள்ள நாணயத்தைப் பயன்படுத்தி கம்பெனிக்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள் அளவிடப்பட்டுள்ளன (தொழிற்பாட்டு நாணயம்). நிதிக்கூற்றுக்களானவை கம்பெனியின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பண நாணயமாகிய இலங்கை ரூபாவினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

**(ஆ) கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும்**

கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின்ற திகதிகளில் காணப்படுகின்ற நாணய பரிமாற்று விகிதங்களை அல்லது உருப்படிகள் மீள் அளவீடு செய்யப்படும் மதிப்பீட்டினைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் தொழிற்பாட்டு நாணயத்திற்கு மாற்றப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பதன் மூலம் அல்லது வெளிநாட்டு நாணய மதிப்பின் பிரகாரம் காட்டப்படுகின்ற நிதிச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வருட இறுதிக்கான நாணயமாற்று விகிதங்கள் மாற்றப்படுவதன் மூலம் அல்லது ஏற்படுகின்ற அந்நியச் செலாவணி அனுகூலங்கள் மற்றும் நட்டங்கள் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**2.8 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

சொத்துக்களை அவற்றுக்கான செயற்பாட்டு நிலைமைக்கும், அவற்றின் மூலம் எதிர்பார்க்கப்படும் பயனுக்காகவும் கொண்டு வரும்போது ஏற்படக்கூடிய இடைநேர் விளைவான ஏதும் செலவுகள் இருக்கும் பட்சத்தில் அவையும், கொள்வனவுக் கிரயமும் உள்ளிட்டதான கிரயத்திற்கே ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவை ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் திரண்ட தேய்மானத்தினையும், திரண்ட சேத இழப்புகள் ஏதும் இருக்கும் பட்சத்தில் அவற்றையும் கழித்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் கிரயத்திற்கு அளவீடு செய்யப்படும்.

நிலையான தன்மையைக் கொண்ட சொத்துக்களைக் கைப்பற்றுதல், விரிவுபடுத்துதல் அல்லது முன்னேற்றுதல் எனும் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படும் செலவினங்கள் மூலதனச் செலவினங்களாகக் கருதப்பட்டுள்ளன. அதன்பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற கிரயங்கள் சொத்தின் முன்கொண்டு செல்லப்படும் தொகையில் உள்ளடக்கப்படும். அல்லது உருப்படியுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் கம்பெனிக்கு கிடைப்பதற்கும் உருப்படியின் கிரயத்தை நம்பத்தகு முறையில் அளவிட முடியுமானால் மட்டும் தனியான சொத்தாக ஏற்பிசைவு செய்யப்படும்.

ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட செயலாற்றுகை நியமத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார நன்மைகளை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக அல்லது பேணிச் செல்வதற்காக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் திருத்தப்படுதல் அல்லது பராமரிக்கப்படுதல் என்பவற்றுக்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் ஒரு செலவாக ஏற்பிசைவு செய்யப்படும்.

**2.8.1 தேய்மானம்**

நிலமானது தேய்மானம் செய்யப்படமாட்டாது. ஏனைய சொத்துகளின் தேய்மானத்திற்கான ஏற்பாடுகளானவை பின்வருமாறு அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட பயனுள்ள ஆயுட்காலங்களின் பிரகாரம் அவற்றுக்கான கிரயத்தினை ஒதுக்குவதன் பொருட்டு நேர்கோட்டு முறையொன்றைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றன.

| தேய்மானம் | பயனுள்ள ஆண்டுகள் |
|---|---|
| கட்டிடங்கள் | 20 |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் | 02 - 15 |
| ஒலி மீடிறன் கருவிகள் | 04 - 08 |
| தளபாடம் மற்றும் பொருத்துகைகள் | 08 |
| அலை அனுப்பிகள் | 08 |
| மோட்டார் வாகனங்கள் | 04 |
| நூலகப் புத்தகங்கள் | 04 |
| தொழிற்கருவிகள் | 04 |
| அலுவலக உபகரணங்கள் | 04 |

அறிக்கையிடப்படுகின்ற ஒவ்வொரு காலப்பகுதியின் இறுதியிலும் சொத்துக்கான நிலுவைப் பெறுமதிகளும், பயனுள்ள ஆயுட்காலங்களும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமாக அமையும் பட்சத்தில் செம்மைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும். சொத்துக்கான முன்கொண்டு செல்லும் தொகையானது அதன் மதிப்பீடு செய்யப்பட்ட மீளப்பெறத்தகு பெறுமதியைவிட அதிகமாக இருக்கும் பட்சத்தில் அப்பெறுமதியை அதன் மீளப்பெறத்தகு பெறுமதிக்கு உடனடியாக தேய்மானம் செய்யப்படும்.

விலக்கல் தொகுதி மூலமான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பவை அவற்றிலிருந்து கிடைக்கப்படுகின்ற தொகையினை முன் கொண்டு செல்லப்படும் தொகையுடன் ஒப்பீடு செய்து தீர்மானிக்கப்படுவதோடு இலாபம்/(நட்டம்) விவரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**2.8.2 இடம்பெற்றுவருகின்ற மூலதன வேலைகள்**

பொருட்களுக்கான திரட்டப்பட்ட கிரயம் மற்றும் சொத்துக்கான நிர்மாணத்துடன் நேரடியாக தொடர்புபடுகின்ற ஏனைய கிரயங்கள் என்பன இடம்பெற்று வருகின்ற மூலதன வேலைகளின் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன. இடம்பெற்றுவரும் மூலதன வேலைகளின் கணிசமான பகுதி பூர்த்தியடைந்துள்ள மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக்காக தயாராகவுள்ள சந்தர்ப்பத்தில் அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களுக்கான கணக்குகளுக்கு மாற்றப்படும்.

**2.8.3 அருவச் சொத்துக்கள்**

**(அ) கணினி மென்பொருள்**

சொத்துக்கள் கொண்டிருப்பதாக கருதக்கூடிய எதிர்கால பொருளாதார நன்மைகள் தொழில் முயற்சிக்குள் வந்தடைவதற்கும் சொத்தின் கிரயத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதுமான வாய்ப்புகள் இருக்கும் பட்சத்தில் கணினி மென்பொருள்கள் அருவச் சொத்தாக ஏற்பிசைவு செய்யப்படும். கைப்பற்றிக்கொள்ளப்படுகின்ற அருவச் சொத்துக்கள் திரண்ட மதிப்பிறக்கம் மற்றும் திரண்ட சேத இழப்பு நட்டங்கள் கழிக்கப்பட்டு கிரயத்தில் குறிப்பிடப்படும். அவற்றுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட 05 வருட பயனுள்ள ஆயுட்காலத்தில் மேற்படி கிரயம் மதிப்பிறக்கம் (காலத் தேய்மானம்) செய்யப்படும்.

**(ஆ) ஒளிபரப்பு உரிமைகள்**

சேவைகளைச் சந்தைப்படுத்துவதன் மூலம் கிடைக்கப்படுகின்ற எதிர்கால பொருளாதார நன்மைகள் தொழில் முயற்சிக்குள் வந்து சேர்வதற்கும் சொத்தின் கிரயத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதுமான வாய்ப்புகள் இருக்கும் பட்சத்தில் ஒளிபரப்பு உரிமைக்கான உரிமங்கள் அருவச் சொத்தாக ஏற்பிசைவு செய்யப்படும். திரண்ட மதிப்பிறக்கம் மற்றும் திரண்ட சேத இழப்பு நட்டங்கள் கழிக்கப்பட்டு அருவச் சொத்துக்கள் கிரயத்தில் குறிப்பிடப்படும். இக்கிரயங்கள் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொடர்புடைய வருமானத்தின் அளவிற்கு மதிப்பிறக்கம் செய்யப்படும்.

ஒளிபரப்பு உரிமையில் 90% - முதலாவது ஒளிபரப்பின் போது
ஒளிபரப்பு உரிமையில் 10% - இரண்டாவது ஒளிபரப்பின் போது

**2.8.4 நிதியல்லா சொத்துக்களுக்கான சேத இழப்பு**

அறிக்கையிடலுக்கான ஒவ்வொரு காலப் பகுதியின் இறுதியிலும் சொத்துக்களுக்கான சேத இழப்புப் பற்றிய அறிகுறிகள் ஏதும் உள்ளனவா என்பதை தீர்மானிப்பதற்காக கம்பெனியானது அதன் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்கள் என்பவற்றுக்கான முன் கொண்டு செல்லப்படும் தொகைகளை மீளாய்வு செய்யும். அத்தகைய அறிகுறிகள் ஏதும் இருக்கும் பட்சத்தில் சேத இழப்பு நட்டத்தின் (இருக்குமானால்) அளவினைத் தீர்மானிப்பதற்காக சொத்துக்களுக்கான மீளப்பெறற்தகு தொகை மதிப்பீடு செய்யப்படும். ஒரு தனிச் சொத்தின் மீளப்பெறற்தகு தொகையினை மதிப்பீடு செய்ய முடியாதவிடத்து கம்பெனியானது பணப் பிறப்பாக்கும் அலகுகளை (CGUS) தீர்மானிப்பதோடு குறிப்பிட்ட சொத்துக்கள் உள்ளடங்குகின்ற பணப் பிறப்பாக்கும் அலகுகளின் மீளப்பெறற்தகு தொகையினை மதிப்பீடு செய்யும்.

விற்பனைக் கிரயம் கழிக்கப்பட்டதன் பின்னரான தொகை மற்றும் பயன்பாட்டிலுள்ள பெறுமதி ஆகிய இரண்டில் கூடிய சீர் மதிப்பிற்கான பெறுமதியானது மீளப்பெறற்தகு பெறுமதியாக அமைகின்றது. பயன்பாட்டிலுள்ள பெறுமதி மதிப்பீடு செய்யப்படும்போது மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசு பாய்ச்சல்கள் அவற்றுக்கான தற்கால பெறுமதிக்கு வரிக்கு - முந்திய கழிவு விகிதத்தைப் பயன்படுத்தி கழிமானம் செய்யப்படும். அது நடப்பு சந்தை மதிப்பீடுகளின் பணப்பெறுமதி மற்றும் செம்மைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படாத எதிர்கால காசுப் பாய்ச்சல் மதிப்பீடுகளிலுள்ள சொத்துக்களுக்கான இடர் என்பவற்றைப் பிரதிபலிக்கும்.

ஒரு சொத்தினதும் காசுப் பிறப்பாக்கும் அலகினதும் மீளப்பெறற்தகு தொகையானது அதன் முன்கொண்டு செல்லப்படும் தொகையைவிட குறைவாக இருப்பதாக மதிப்பீடு செய்யப்படும் பட்சத்தில் சொத்தினதும் காசுப் பிறப்பாக்கும் அலகினதும் முன்கொண்டு செல்லப்படும் தொகையானது அதன் மீளப்பெறற்தகு தொகைக்கு குறைக்கப்படும். அதன் பின்னர் விவரமான வருமானக் கூற்றில் சேத இழப்பு நட்டம் உடனடியாக ஏற்பிசைவு செய்யப்படும்.

**2.9 நிதிச் சொத்துக்கள்**

**(அ) வகைப்படுத்தல்**

கம்பெனியானது ஆரம்ப ஏற்பிசைவின்போது நிதிச் சொத்துகளுக்கான வகைப்படுத்தலைத் தீர்மானிப்பதோடு அதன் நிதிச் சொத்துக்களை பின்வரும் வகையில் வகைப்படுத்துகின்றது.

i. கடன் மற்றும் வரவேண்டியவைகள்

ii. விற்பனைக்காகவுள்ள (AFS) நிதிச் சொத்துக்கள்

**i. கடன் மற்றும் வரவேண்டியவைகள்**

செயற்படு சந்தையில் விலை குறிப்பிடப்படாத நிலையான மற்றும் தீர்மானிக்கக்கூடிய செலுத்தல்களைக் கொண்ட நேரிலியல்லா நிதிச் சொத்துக்களானவை கடன் மற்றும் வர வேண்டியவைகள் ஆகும். நடைமுறையல்லா சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்ற அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதிக்குப் பின்னர் 12 மாதங்களுக்கு மேற்பட்ட கால முதிர்வுகளைத் தவிர நடைமுறைச் சொத்துக்களில் கடன் மற்றும் வர வேண்டியவைகள் உள்ளடக்கப்படுகின்றன. கம்பெனியின் கடன் மற்றும் வர வேண்டியவைகள் கூட்டினைக் கடன், முற்பணம், அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் காணப்படும் பணம் மற்றும பணத்துக்குச் சமமானவைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ளன.

**ii. விற்பனைக்காகவுள்ள (AFS) நிதிச் சொத்துக்கள்**

விற்பனைக்காகவுள்ள நிதிச் சொத்துக்கள் எனப்படுவது இப்பிரிவில் பெயரிடப்பட்டுள்ள அல்லது வேறு எந்தவொரு பிரிவிலும் வகைப்படுத்தப்படாத நேரிலியல்லா சொத்துக்களாகும். முதலீடு கால முதிர்ச்சியடையாதெனில் அல்லது அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலிருந்து அகற்றுவதற்கு (விலக்குவதற்கு) முகாமைத்துவம் கருதாத பட்சத்தில் அவை நடைமுறையல்லா சொத்துக்களில் உள்ளடக்கப்படும். விற்பனைக்காகவுள்ள நிதிச் சொத்துக்களானவை விலை குறிப்பிடப்பட்டுள்ள நீண்டகால பங்கு முதலீடுகள், கடன் பிணைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ளன.

**(ஆ) ஏற்பிசைவும் ஆரம்ப அளவீடும்**

கடன் மற்றும் வர வேண்டியவைகளாக வகைப்படுத்தப்படுகின்ற நிதிச் சொத்துக்களானவை கம்பெனியானது கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பிக்கின்ற திகதியில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய நிதிச் சொத்துக்களானவை கம்பெனியின் நிதி சாதனத்திற்கான ஒப்பந்த ஏற்பாட்டின் ஒரு தரப்பாக அமைகின்ற வர்த்தக தினத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ஒரு நிதிச் சொத்தானது ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதிக்கும் இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் சீர்மதிப்புப் பெறுமதிக்கு அல்லாத சொத்துக்கள் தொடர்பாக எனில் நேரடியாக தொடர்புபடுத்தக்கூடிய கொடுக்கல் வாங்கல்களுக்கான கிரயத்திற்காகவும் அளவீடு செய்யப்படுகின்றன.

நிதிச் சொத்துக்களிலிருந்து காசுப்பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையானது காலம் கடந்துள்ளபோது அல்லது மாற்றப்பட்டுள்ளபோது மற்றும் கம்பெனி நிதிச் சொத்துக்களுக்கான உரிமையின் சகல இடர்களையும் அனுகூலங்களையும் கணிசமான வகையில் மாற்றியுள்ளபோது நிதிச் சொத்து ஏற்பிசைவிலிருந்து அகற்றப்படும்.

(இ) **பின்தொடர்ந்து வரும் அளவீடு**

i. **கடன் மற்றும் வரவேண்டியவைகள்**

அடிப்படை எற்பிசைவின் பின்னர், சேத இழப்புக்கான ஏற்பாடுகளைக் கழித்து விளைவு வட்டி முறையைப் பயன்படுத்தி கடன் மற்றும் வர வேண்டியவைகள் மதிப்பிறக்கக் கிரயத்தில் அளவீடு செய்யப்படும்.

ii. **விற்பனைக்காகவுள்ள (AFS) நிதிச் சொத்துக்கள்**

அடிப்படை எற்பிசைவின் பின்னர், சேத இழப்புக்கான ஏற்பாடுகளைக் கழித்து விற்பனைக்காகவுள்ள நிதிச்சொத்துக்கள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவீடு செய்யப்படும்.

(ஈ) **நிதிச் சொத்துக்களுக்கான சேத இழப்பு**

**I. மதிப்பிறக்கக் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் சொத்துக்கள்**

ஒரு நிதிச்சொத்து சேத இழப்பிற்கு உள்ளாகியுள்ளது என்பதற்கான புற நிலை சான்றுகள் உள்ளனவா என்பது தொடர்பாக கம்பெனி ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் மதிப்பீடு செய்யும். ஒரு நிதிச்சொத்து சேதத்திற்கு உள்ளாவது மற்றும் சேத இழப்புகள் ஏற்படுவது சொத்துக்கான ஆரம்ப எற்பிசைவின் பின்னர் இடம்பெற்ற ஒரு நிகழ்வின் அல்லது பல நிகழ்வுகளின் விளைவாக அமையும்போது மற்றும் அவ்வாறான சேதம் பற்றிய புறநிலை சான்றுகள் இருக்கும் பட்சத்திலும் நம்பகமான வகையில் மதிப்பீடு செய்யக்கூடிய நிதி சொத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால நிதிப் பாய்ச்சல் மீது குறிப்பிட்ட சேத நிகழ்வு(அல்லது நிகழ்வுகள்) தாக்கம் ஏற்படுத்துமானால் மட்டுமேயாகும்.

மதிப்பிறக்கக் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் கடன்கள் மற்றும் வர வேண்டியவைகளுக்காக நட்டத்தொகை அளவீடு செய்யப்படுவது சொத்துகளுக்கான முன்னெடுத்துச் செல்லப்படும் தொகை மற்றும் நிதிச் சொத்துக்கான அசல் பயன் வட்டி விகிதத்திற்கு கழிமானம் செய்யப்பட்ட (செலவு செய்யப்படாத எதிர்கால கடன் இழப்புகளைத் தவிர்த்து) மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் நிகழ்கால பெறுமதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டிற்காகும். நிதிச் சொத்தின் முன்னெடுத்துச் செல்லப்படும் தொகை குறைக்கப்படுவதோடு நட்டத்தின் அளவானது விவரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். பிற்காலப்பகுதியொன்றில் சேத இழப்பு நட்டத்தின் அளவு குறையுமானால் மற்றும் சேத இழப்பு இனங்காணப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட ஒரு நிகழ்வுடன் குறிப்பிட்ட குறைவடைதலை அடிப்படையில் தொடர்புபடுத்த முடியுமானால் ஏற்கனவே ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்பு நட்டத்திற்கான மறுதலை விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். சேத இழப்பின் பொருட்டு கூட்டினைக் கடன்கள் மற்றும் வர வேண்டியவைகள் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படும்.

**ii. விற்பனைக்காகவுள்ள (AFS) நிதிச் சொத்துக்கள்**

ஒரு நிதிச்சொத்து சேத இழப்பிற்கு உள்ளாகியுள்ளது என்பதற்கான புறநிலை சான்றுகள் உள்ளனவா என்பது தொடர்பாக தீர்மானிப்பதற்காக கம்பெனி ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் மதிப்பீடொன்றை மேற்கொள்ளும். விலை குறிப்பிடப்படாத பங்கு முதலீடுகளை கருத்திற்கொள்ளும்போது கிரயத்தை விட மூலதனத்தின் பெறுமதியில் கணிசமான வீழ்ச்சி காணப்படுவதும் சொத்துக்களின் சேத இழப்புக்கான ஒரு சான்றாகும். விலை குறிப்பிடப்படாத முதலீடுகள் தொடர்பாக அத்தகைய சான்றுகள் இருக்கும் பட்சத்தில் சேத இழப்பு நட்டத்தின் அளவானது நிதிச் சொத்துக்கான முன்னெடுத்துச் செல்லப்படும் தொகை மற்றும் அதற்கு நிகரான ஒரு சொத்துத் தொடர்பாக நடப்புச் சந்தை பயன் விகிதத்திற்கு கழிமானம் செய்யப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால நிதிப் பாய்ச்சல்களுக்கான இன்றைய பெறுமதி என்பவற்றுக்கிடையிலான வித்தியாசமாக அளவீடு செய்யப்படும். அத்தகைய சேத இழப்பு நட்டங்கள் மறுதலை செய்யப்படமாட்டாது.

2.10 **வியாபார வரவேண்டியவைகள் (கிடைக்கப்படவேண்டிய வியாபாரக் கடன்கள்)**

கிடைக்கப்படவேண்டிய வியாபாரப் பணம் எனப்படுவது சாதாரண வியாபார நடவடிக்கைகளின் போது வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்படவேண்டிய பணமாகும். ஒரு வருடத்திற்குள் அல்லது அதற்குக் குறைவான காலப்பகுதிக்குள் (அல்லது வியாபாரத்தின் சாதாரண தொழிற்பாட்டு வட்டத்தில்) சேகரித்தல் எதிர்பார்க்கப்படும் பட்சத்தில் அவை நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். அவ்வாறில்லாத போது நடைமுறையல்லா சொத்துக்களாகக் காட்டப்படும்.

கிடைக்கப்படவேண்டிய வியாபாரத் தொகை ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதிக்கு (நியாயமான பெறுமதிக்கு) இனங்காணப்படுவதோடு அதன் பின்னர் அளவீடு செய்யப்படுவது கழிமானம் செய்யப்படுவதன் தாக்கம் முக்கியமானதாக அமையாத வகையில் குறுகிய காலத்திற்குள் அவற்றை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதால் சேத இழப்பு ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டு கொடுக்கல் வாங்கல் செய்யும் விலைக்காகும்(ஆரம்ப இன்வொயிஸ் பெறுமதி).

கிடைக்கப்பட வேண்டிய தொகைகள் பற்றிய ஆரம்ப நிபந்தனைகளின் பிரகாரம் கிடைக்கப்படவேண்டிய மொத்தத் தொகையினையும் சேகரித்துக் கொள்வதற்கு நிறுவனத்திற்கு முடியாமல் செல்லும் என்பதற்கான புறநிலை சான்றுகள் இருக்கின்றபோது கிடைக்கப்படவேண்டிய வியாபார தொகைகளுக்கான ஏற்பாடானது நிறுவப்படும். கடனாளி கொண்டுள்ள குறிப்பிடத்தக்க நிதிச் சிக்கல்கள், கடனாளியின் வங்குரோத்து நிலை மற்றும் நிதி மறுசீரமைப்புக்குள் நுழைவதற்கான நிகழ்தகவு மற்றும் மூன்று மாத கடன் காலப்பகுதி முடிவடைந்த நிலையிலும் தாமதமான செலுத்தல்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுதல் போன்ற காரணிகள் கிடைக்கப்படவேண்டிய வியாபாரத் தொகை சேத இழப்புக்கு உள்ளாகியுள்ளது என்பது பற்றிய சுட்டியாக கருதப்படுகின்றது. கொடுப்பனவுக் கணக்கொன்றை பயன்படுத்துவதன் மூலம் சொத்தின் முன் கொண்டுசெல்லப்படும் தொகை குறைக்கப்படுவதோடு நட்டத்தின் அளவானது பங்கீட்டுக் கிரயத்திற்குள் விபரமான வருமான கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

கிடைக்கப்படவேண்டிய வியாபாரத் தொகையை சேகரித்துக்கொள்ள முடியாதபோது அது கிடைக்கப்படவேண்டிய வியாபாரத் தொகை கொடுப்பனவுக் கணக்கிலிருந்து பதிவழிக்கப்படும். ஏற்கனவே பதிவழிக்கப்பட்ட தொகைகள் பின்னர் அறவிட்டுக்கொள்வதற்கான விவரமான வருமானக்கூற்றின் பங்கீட்டுக் கிரயத்தில் வரவு வைக்கப்படும்.

குறிப்பிடத்தக்க வியாபார வருமதிகள் சேத இழப்புக்காக தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படுவதோடு குறிப்பிடத்தக்கதல்லாத வியாபார வருமதிகள் சேத இழப்புக்காக கூட்டு அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

சேத இழப்பின் பொருட்டு வியாபார வருமதிகளை மதிப்பீடு செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற மாதிரி பின்வருமாறு அமைகின்றது.

**(அ) தனி மதிப்பீட்டு மாதிரி - சேத இழப்பு நட்டத்தினை அளவிடுவதற்காக பின்வரும் வகைகளுக்கான வியாபார வருமதிகள் தனித்தனியாக மீளாய்வு செய்யப்படும்.**

i. அரச நிறுவனம் - சேத இழப்புப் பற்றிய விடயப்பொருள் சான்றுகள் இருக்கும் பட்சத்தில் மட்டும் 100% ஏற்பாடுகள்.

ii. வணிக வாடிக்கையாளர்கள் - கணிசமான வாடிக்கையாளர்கள் - சேத இழப்புப் பற்றிய விடயப்பொருள் சான்றுகள் இருக்கும் பட்சத்தில் மட்டும் 100% ஏற்பாடுகள்.

(ஆ) கூட்டு மதிப்பீட்டு மாதிரி - சேத இழப்பு நட்டத்தினை அளவிடுவதற்காக பின்வரும் வகைகளுக்கான வியாபார வருமதிகள் கூட்டாக மீளாய்வு செய்யப்படும்.

i. வணிக வாடிக்கையாளர்கள் - கணிசமானதல்லாத வாடிக்கையாளர்களின் நிகழ்தகவு மாதிரி.

### 2.11 சரக்குத் தொக்குகள்

சரக்குத் தொக்குகள் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிறையேற்று சராசரி அடிப்படையில் கிரயம் தீர்மானிக்கப்படுகின்றது. சரக்குத் தொக்குகள் உதிரிப்பாகங்கள், காகிதாதிகள், எரிபொருள், மசகு எண்ணெய் என்பவற்றைக் கொண்டமைந்துள்ளன. சரக்குத் தொக்குகள் ஆனவை நுகர்வுக்காக காணப்படுவதோடு மாறாக மீள் விற்பனைக்காகவல்ல.

### 2.12 பணம் மற்றும பணத்துக்குச் சமமானவைகளும்

காசுப்பாய்ச்சல் கூற்றில்˙ பணம் மற்றும பணத்துக்குச் சமமானவைகளுக்குள் கையிருப்புத் தொகை, கேள்வி வைப்புகள் மற்றும் மூன்று மாதங்களில் அல்லது அதற்குக் குறைவான கால முதிர்ச்சியுடன்கூடிய ஏனைய குறுகியகால அதிக திரவத் தன்மைமிகு முதலீடுகள் உள்ளடங்குகின்றன.

### 2.13 பங்கு மூலதனம்

பங்கு மூலதனமானது திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதோடு சாதாரணப் பங்குகளானவை உரிமை முதலாக வகைப்படுத்தப்படும்.

### 2.14 நிதிப் பொறுப்புகள்

கம்பெனி ஆனது நிதிப் பொறுப்புகளை ஏனைய பொறுப்புகளாக வகைப்படுத்துகின்றது. கம்பெனிக்கான ஏனைய நிதிப் பொறுப்புகளில் செலுத்தப்பட வேண்டிய தொகைகள், வட்டியுடன்கூடிய கடன் மற்றும் தொடர்புடைய தரப்புகளுக்கு செலுத்தப்பட வேண்டிய பணம் என்பன உள்ளடங்குகின்றன. ஏனைய நிதிப் பொறுப்புகள் ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதிக்கும் நேரடியாக தொடர்புபடுத்தக்கூடிய ஏதேனும் கொடுக்கல்-வாங்கல் கிரயத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், விளைவு வட்டி முறையைப் பயன்படுத்தி இந்த நிதிப் பொறுப்புகள் மதிப்பிறக்கக் கிரயத்தில் அளவீடு செய்யப்படும். தமது ஒப்பந்தக் கடப்பாடுகள் நிறைவேற்றப்படும் போது, இரத்துச் செய்யப்படும்போது அல்லது காலாவதியாகும்போது கம்பெனி ஆனது நிதிப் பொறுப்பினையும் ஏற்பிசைவிலிருந்து அகற்றும்.

### 2.15 கடன் பெறுதல்

மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கான கிரயத்தைக் கழித்து அடிப்படையில் சீர்மதிப்புப் பெறுமதிக்கு கடன் பெறுதல் ஏற்பிசைவு செய்யப்படும். அதன் பின்னர் கடன் பெறல் மதிப்பிறக்கக் கிரயத்தில் குறிப்பிடப்படும். வரவுத் தொகை மற்றும் மீட்சிப் பெறுமதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு விளைவு வட்டி முறையைப் பயன்படுத்தி கடன் பெறல் காலப்பகுதியில் விவரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

கடன் பெறல் கிரயம் ஆனது அவை இடம்பெற்ற காலப்பகுதிக்குரியதாக விவரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு சரிசெய்யப்படும்.

### 2.16 நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரி

காலப்பகுதிக்கான வரிச் செலவானது நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரி என்பவற்றைக் கொண்டமைந்துள்ளது. அது வருமானக் கூற்றில் இனங்காணப்படுவது ஏனைய விவரமான வருமானங்களில் அல்லது நேரடியாக இனங்காணப்படுகின்ற பங்குகளின் உருப்படிகளுக்கு அது தொடர்புபடுகின்ற அளவைத் தவிர்ந்த வகையிலாகும். இங்கு முறையாக ஏனைய விபரமான வருமானங்களின் அல்லது நேரடியாக பங்குகளின் வரி ஏற்பிசைவு செய்யப்படும்.

### (அ) நடப்பு வரிவிதிப்பு

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பெனிக்கு நடப்பு வரிப் பொறுப்பு உருவாகின்றது. உண்மையான பொறுப்பு பிரதிபலிக்கப்படுவதாக கம்பெனி நம்புகின்றதான மேற்படி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்ட பொறுப்புகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ஆ) பிற்போடப்பட்ட வருமான வரி

